பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 05 வெள்ளிக்கிழமை (18.03.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :112

காரசாரமான விவாதத்தின் பின் அமைச்சரவையில் முடிவு

# மதமாற்றத் தடைச்சட்ட விடயத்தில் மனச்சாட்சிப்படி வாக்களிக்கலாம்!

## நெருக்கடியைச் சமாளிப்பதற்காகக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டைத் தளர்த்துவதற்குத் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 18

**அரசின் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலரின் கடும் எதிர்ப்பு மற்றும் அதிருப்தி ஆகியவற்றுக்கு மத்தியில் மதமாற்றத் தடைச்சட்டமூலம் அரசினால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.**

**எனினும், இச்சட்டமூலம் தொடர்பாக மூத்த அமைச்சர்கள் இடையே ஏற்பட்டுள்ள பலத்த கருத்து முரண்பாடு காரணமாக இச்சட்டமூலத்தின் மீதான விவாதத்திலும் வாக்கெடுப்பிலும் கட்சி (அரசுக் கூட்டமைப்பு) கட்டுப்பாட்டைத் தளர்த்தி, அரசுத் தரப்பு உறுப்பினர்கள் மனச்சாட்சிப்படி நடந்துகொள்ள அனுமதிப்பது என அமைச்சரவை முடிவுசெய்திருக்கின்றது.**

அமைச்சரவையின் இந்த முடிவால் இந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றில் நிறைவேற்றுவதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு பலத்தை அரசுத் தரப்பு பெற்றுக்கொள்ள முடியாமல் போனாலும் போகலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் கூடியபோது மதமாற்றத் தடைச்சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான அமைச்சரவையின் அங்கீகாரத்தை புத்தசாசன அமைச்சர் என்ற முறையில் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கோரினார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் கிறிஸ்தவர்களான

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் குழு ஜேர்மனியில்

பேர்லின், மார்ச் 18

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான உயர்மட்ட அரசியல்குழு தனது ஐரோப்பிய விஜயத்தின் ஒரு பகுதியாக புதனன்று ஜேர்மனி சென்றடைந்தது.

அந்நாட்டு பொருளாதாரக் கூட்டுறவு மற்றும் அபிவிருத்தி அமைச்சர் ஹடிமாரி விஸ்ஸிரோக்-சூல், வெளிவிவகார அமைச்சின் தெற்காசியாவுக்கான பணிப்பாளர் பிரண்ட் போர்ச்சாட், இலங்கைக்கான ஜேர்மனியத் தூதுவர் ஜீர்ஜன் வீர்த் ஆகியோரைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் சந்தித்து உரையாடினர்.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான பொதுக்கட்டமைப்பு ஒன்றின் அவசியத்தை ஜேர்மனிய அதிகாரிகளுக்கு விளக்கிய புலிகள் குழு. அர

(16ஆம் பக்கம் பார்க்க)

## வலி.வடக்கில் இன்று பேரணி

வலி. வடக்கு, மார்ச் 18

வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தம்மை மீளக்குடியமர்த்துமாறு கோரியும் - குடாநாட்டில் அதிகரித்து வரும் இராணுவ அடாவடித்தனங்களைக் கண்டித்தும் இன்று மல்லாகத்தில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்துகின்றனர். இன்று காலை 10 மணிக்கு மல்லாகம் சந்தியிலி ருந்து ஆரம்பமாகும் பேரணி, வலி. வடக்கு பிரதேச செயலகத்தைச் சென்றடையும். அங்கு வலி.வடக்கு பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பிரதேச செயலரிடம் மகஜர் கையளிப்பர். (த-86)

# ஜே.வி.பி. தலைவர்களின் 'பாச்சா' ஜனாதிபதியிடம் பலிக்கவில்லை!

## நாணயக்கயிறு அம்மாவிடம் சிக்கியதால் அடங்கிப்போக அவர்கள் முடிவு

கொழும்பு, மார்ச் 18

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிராகப் பொதுமேடைகளில் அளவுக்கு அதிகமாகத் துள்ளிக் குதித்து வந்த ஜே.வி.பி. தலைவர்கள், தங்களின் இசகுபிசகுகள் தொடர்பான முக்கிய துரும்புச் சீட்டுகள் ஜனாதிபதியின் கைகளில் சிக்கியுள்ளன எனத்தெரியவந்ததையடுத்து. அம்மையாருக்கு அடங்கிப் போக - அமுக்கி வாசிக்க - முடிவுசெய்துவிட்டார்கள் என நம்பகரமாக அறியவருகின்றது.

ஜே.வி.பி. தலைவர்களின் 'பாச்சா' ஜனாதிபதியிடம் பலிக்கவில்லை. நாணயக் கயிறு ஜனாதிபதியிடம் சிக்கிவிட்டதால் வேறு வழியின்றிப் பணிந்து போக அவர்கள் முடிவு செய்துவிட்டார்கள். நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற தமது கட்சிக்கூட்டத்தில் ஜே.வி.பி. தலைவர்கள் அரசு மற்றும் அரசுத்தலைமை தொடர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழு உறுப்பினர் வெலிகந்தையில் கொலை

கொழும்பு, மார்ச் 18

வெலிகந்தைப் பகுதியில் கருணா குழுவின் உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வெலிகந்தை தீவுச்சேனையில் முகாம் அமைத்து நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள் எனக்கூறப்படும் கருணா குழுவினரின் உறுப்பினர் ஒருவரே நேற்றுமுன்தினம் நள்ளிரவு மதுரங்கன என்ற இடத்தில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இறந்தவர் மனோஜ் என்று அழைக்கப்படும் கந்தையா பத்மராஜா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்புத் தொடர்பான அரசின் முடிவு எந்நேரத்திலும் வரும்

### கதிர்காமர் லண்டனில் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 18

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீள்கட்டுமானத்தை மேற்கொள்வதற்காக புலிகளுடன் சேர்ந்து பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் விடயத்தில் அரசின் முடிவு எந்த நேரத்திலும் வெளியாகலாம் என்று வெளிவிவகாரத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

லண்டனில் உள்ள கதிர்காமர், அங்கிருந்து பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே இதனைத் தெரிவித்தார். அப்பேட்டியில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் விமானங்களை அழிப்பதற்கு ஏவுகணைகளை செக்குடியரசு வழங்கும்

கொழும்பு, மார்ச் 18

விடுதலைப் புலிகளின் வசமுள்ள விமானங்களைத் தாக்கி அழிக்கக்கூடிய ஏவுகணைகளை இலங்கைக்கு வழங்க செக்குடியரசு முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒற்றை இயந்திரம் பொருத்தப்பட்ட விமானங்களைத் தேடித் தாக்கி அழிக்கக்கூடிய ஏவுகணைகளையே செக்குடியரசு இலங்கை அரசுக்கு வழங்கவுள்ளதாக அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகிறது. பாதுகாப்புக் காரணங்களுக்காக இது தொடர்பான முழுமையான விவரங்களை அந்நாடு வெளியிடவில்லை எனவும் கூறப்பட்டது. (த-க-12)

## பட்டப்பகலில் தமிழ்ப்பெண் கழுத்து நெரித்துக் கொலை

கொழும்பு, மார்ச் 18

கிராண்ட்பாஸ், நவகம்புர பகுதியில் வீட்டில் தனியாக இருந்த தமிழ்ப்பெண் பட்டப்பகலில் கழுத்து நெரித்துக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுப் பகல் இடம்பெற்றுள்ளது. கொல்லப்பட்டவர் தட்சணாமூர்த்தி எனட் (வயது-37) என்பவராவார். இவர் ஒரு பிள்ளைக்குத் தாயாவார்.

கணவர் வேலைக்குச் சென்ற பின்னர் தனது பிள்ளையைப் பாலர் பாடசாலைக்கு அனுப்பிவிட்டு வீட்டில் தனியாக இருந்த சமயமே வீட்டுக்குள் புகுந்த இனந்தெரியாத நபர்

(16ஆம் பக்கம் பார்க்க)

யாழ். மக்களே! இதோ விசேட சலுகை !!

அன்னை நாகா பூட்சிற்றி

தனது 2ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 19.03.05 முதல் என்றுமில்லாதவாறு விசேட சலுகைகளை வழங்குகின்றது!

வெற்றிகரமான 3 ஆவது ஆண்டில் காலடி பதிக்கும் அன்னை நாகா பூட்சிற்றியினர் தமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் தமது இனிய நல்வாழ்த்துக்களைக் கூறிக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றார்கள்

தரமான நல்ல ரகமான பொருள்களுக்கு நாடுங்கள்

Annai Nagaa Food City

இச்சலுகைகள் கையிருப்புள்ளவரை மட்டுமே

அன்னை நாகா பூட்சிற்றி No - 175 K.K.S வீதி, யாழ்ப்பாணம். T.P.222 5515

(C-41543)(53-11-15)

# சுனாமிக்குப் பிந்திய புனர்வாழ்வுப் பணிகளை படமெடுக்க இலங்கைத் தூதரகம் நிபந்தனை

## கனடா ஊடகவியலாளருக்கு நேர்ந்த கதி!

கொழும்பு,மார்ச்18

சுனாமியின் பின்னர் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் மீள்கட்டமைப்புப் பணிகள், பாதிப்பிலிருந்து மீள்தல் குறித்த முயற்சிகள் மற்றும் செயற்பாடுகளை வைத்து விவரணத் திரைப்படம் ஒன்றைத் தயாரிக்க விரும்பினார் கனடாவைச் சேர்ந்தவரும் அந்த பிரபல தொலைக்காட்சி ஒன்றின் ஊடகவியலாளர் ஸ்ரீவ் ஸ்மிற். ஆனால், அவருக்கு விசா வழங்குவதற்கு பொல்லாத, நியாயமற்ற நிபந்தனைகளை விதித் திருககிறது கடனாவில் உள்ள இலங்கைத் தூதரகம்.

விசா வழங்குமானால் கனடாவில் இலங்கைத தூதரகத்துடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்ய வேணடும் என்றும் அந்த ஒப்பந்தத்தை மீறும் பட்சத்தில் அதற்கு பொறுப்பு நிற்கக் கூடிய நிறுவனம் ஒன்றை முன்னிறுத்த வேண்டும் எனவும் ஸ்ரீவ் ஸ்மிற்றுக்கு நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது.

சம்பந்தப்பட்ட ஊடகவியலாளர் இலங்கையில் சுனாமிக்கும் பிந்திய மீள்கட்டமைப்பு, மீள்வாழ்வளித்தல் பணிகள் குறித்து விவரணம் எடுப்பதாயின் -

- அதனைத் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் அல்லது ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்திடம் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறவேண்டும்.

- கனடா திரும்பியதும் அவர் உருவாக்கிய திரைப்படத்தை திரையிடுவதற்கு ஒரு வாரத்துககு முன்னர் கனடாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் சமர்பித்து, அங்குள்ள அதிகாரிகள் தெரிவிக்கும் ஆட்சேபத்துக்கு ஏற்ப மாற்றி அமைக்க வேண்டும். இல்லையேல் விவரணச் சித்திரத்தில் வரும் ஆட்சேபத்துக்கு உரிய காட்சிகளுக்கு மறுப்புத் தெரிவிக்கும் உரிமை தூதரகத்துக்கு வழங்கப்படவேண்டும்.

- இலங்கையில் தேசிய நலனுக்குக் குந்தகமான அல்லது ஆட்சேபமான விடயங்கள் விவரணத்தில் இடம்பெற அனுமதிக்க முடியாது.

- என்றவாறே இலங்கைத் தூதரகத்தின் நிபந்தனைகள் அமைந்துள்ளன.

இத்தகைய நிபந்தனை, அனைத்துலக ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயக சுதந்திரத்துக்கான நடைமுறைகளையும் வரண் முறைகளையும் மீறுவதாக சுதந்திர ஊடக இயக்கம வன்மையாகக் கண்டித்துள்ளது. அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் 19 ஆவது சரத்தை இந்நிபந்தனைகள் அப்பட்டமாக மீறுவதாகவும் மேற்படி இயக்கத்தின் அமைப்பாளர் அனந்த தேசப்பிரிய வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கருத்துச் சுதந்திரம் மக்களுக்கான தகவலைத் திரட்டுவதற்கு உள்ள சுதந்திரம் ஆகியவற்றை மீறும் இந்த நிபந்தனைகளை நீக்குவதற்கு வெளிவிவகார அமைச்சு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்த அறிகையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ-204)

# படகு திருத்தும் நிலையம் திறப்பு

வடமராட்சி கிழக்கு, குடத்தனை வடக்கில் சுனாமி அனர்த்தம் காரணமாகச் சேதமடைந்த படகுகளைத் திருத்தும் நிலையம் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

வடமராட்சி கிழக்குக் கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தீபன் இந்த நிலையததை திறந்து வைக்கவுள்ளார்.

இதேபோன்று தும்பளை, பொலிகண்டி, மாதகல் ஆகிய இடங்களிலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட படகுகளைத்திருத்தும் நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-173-203)

# மருத்துவ மாணவரின் பிரச்சினைக்குத் தீர்வுகாண நடவடிக்கைக்குழு நியமிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்18

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதியாண்டு மாணவர்களின் சத்திரசிகிச்சைக் கற்கை நெறி இடைநிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பாக ஆராய்வதற்கு நடவடிக்கைக் குழு (Action Commitee) ஒன்றை அமைக்குமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் துணைவேந்தரிடம் கோரியுள்ளது.

இத்தகவலை மாணவர் ஒன்றியத் தலைவா எஸ்.செல்வக்குமார் தெரிவித்தார்.

நேற்றுக்காலை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மாணவர் ஒன்றியத்தின் செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமையவே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டதாக அவா கூறினார். நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள யாழ. பல்கலைக்கழகப் பேரவைக் கூட்டத்தின் போது இந்த நடவடிக்கைக்குழுவை அமைத்து அதன் மூலம் மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்களின் பிரச்சினைக்குத் தீவுக்கான ஆவன செய்யுமாறும் தாம் துணைவேந்தரிடம் கோரியுள்ளதாக மாணவர் ஒன்றியத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

மருத்துவ பீட இறுதியாண்டு மாணவர்களின் பிரச்சினை தொடர்பாக தம்மால் மேற்கொண்டு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க முடியாதென துணைவேந்தர் தமக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளதாக மருத்துவ பீட மாணவர் ஒன்றியத்தலைவர் காண்டீபன் தெரிவித்தார். இதனையடுத்து, தாம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவரை இன்று மாலை கொழும்பில் சந்தித்துப் பேசவுள்ளதாகவும் - இதற்கென 6 பேர் கொண்ட குழுவொன்று நேற்றுக் கொழும்பு புறப்பட்டுச் சென்றுள்ளதாகவும், வாய்ப்பு ஏற்பட்டால் கல்வியமைச்சின் செயலாளர் தாரா டி மெலையும் இக்குழுவினர் சந்திப்பர் எனவும் அவர் மேலும் சொன்னார்.

தமது பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காணப்படாவிட்டால் பல்கலைக்கழக செயற்பாடுகளை முடக்கும் நடவடிக்கையில் இறங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் எனவும் அவர் மேலும் கூறினார். (எ-8-7)

# குடாநாட்டில் வெப்பநிலை நாளுக்குநாள் அதிகரிக்கின்றது

குடாநாட்டில் வெப்பநிலை நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது என வளிமண்டலத் திணைக்களத்தின் யாழ். அலுவலகம் தெரிவிததது. கடந்த சில தினங்களாக வெப்பநிலை தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது என்றும் - இவ்வருடத்தில் அதிகூடிய வெப்பநிலையான 34.6 செல்சியஸ் நேற்றுமுன்தினம் பதிவாகியுள்ளது என்றும் இந்த அலுவலகப் பொறுப்பதிகாரி எஸ். பிரதீபன் தெரிவித்தார்.

எதிர்வரும் 23ஆம் திகதி சூரியன் உச்சக்கு வருவதால் வெப்பநிலை அதிகரித்துக் காணப்படும் என்றும் -

இந்த நிலை எதிர்வரும் 26ஆம் திகதி வரை நீடிக்கும் என்றும் - அவர் தெரிவித்தார்

சராசரி வெப்பநிலை 28 செல்சியஸ் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-3)

# கட்டுமரத்தில் மீன்பிடிக்கச் சென்றோரை கடற்படையினர் தாக்கியதாக முறைப்பாடு

மாதகல்,மார்ச்18

மாரீசன்கூடல், குசுமன்துறையில் இருந்து கட்டுமரத்தில் மீன் பிடிக்கச் சென்றோர் கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளனர் என அப்பகுதி மீனவர்கள்' முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை மீன்பிடிப்பதற்காக கட்டுமரங்களில் சென்ற 25இற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் கடற்படையினரால் வழிமறிக்கப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளனர்.

கரைதிரும்பிய கடற்றொழிலாளர்கள் மாதகல் கடற்படை அதிகாரியிடம் முறையிட்டுள்ளனர்.

கடற்றொழிலாளர்கள் கடற்படையினரால் தாக்கப்படுவதை தடுக்கக் கூடிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் -

அச்சமின்றி கடற்றொழிலாளர்கள் மீன்பிடிக்கச் செல்லலாம் என்றும் -

கடற்படை அதிகாரி அப்பகுதி மீனவர்களுக்கு உறுதியளித்துள்ளார் என்றும் - கூறப்பட்டது. (எ-3-95)

# வடக்கின் போரில் சென். ஜோன்ஸ் அணி 9 விக்கெட் இழப்புக்கு 216 ஓட்டங்கள்

## 97 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் சதத்தின் விளிம்பில் மயூரதன்

யாழ்ப்பாணம்,மார்ச்18

வடக்கின் போர் என அழைக்கப்படும் யாழ். மத்திய கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் ஆட்டத்தில நேற்றைய முதலாம் நாள் ஆட்டம் முடிவடைந்தபோது சென் ஜோன்ஸ் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 216 ஓட்டங்களைப் பெறறது.

சென். ஜோன்ஸ் அணி வீரன் ஏ.மயூரதன் ஆட்டம் இழக்காமல் 97 ஓட்டங்களைப் பெற்றமை நேற்றைய சிறப்பு அம்சமாக அமைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் அணி படிப்படியாக விக்கெட்டுக்களை இழந்தது. நாலாவது ஜோடியாகக் களம் இறங்கிய ஏ.மயூரதனின் அதிரடி ஆட்டத்தால் சென். ஜோன்ஸ் அணி ஓட்டங்களைக் குவிக்கத்தொடங்கியது. ஆட்டமிழக்காமல் மயூரதன் 97 ஓட்டங்களுடனும் கஜரூபன் 10 ஓட்டங்களுடனும் களத்தில் நிற்கின்றனர்.

நேற்றைய ஆட்டத்தில் டினேஷ் 18 ஓட்டங்களையும், சசிந்தன் 15 ஓட்டங்களையும், நவகீதன் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

மத்திய கல்லூரி வீரர்களான மதுப்பிரியன் 42 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் தயான் 24 ஓட்டங்களைக் கொடுதது 4 விக்கெட்டுக்களையும் வியாசன் 44 ஓட்டங்களைக்கொடுத்து ஒரு விக்கெட்டையும் மயூரன் 16 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இரண்டாவது ஆட்டம் இன்று முற்பகல் 10 மணி முதல் நடைபெறும்.

(முன்னர் வந்த செய்தி 06 ஆம் பக்கத்தில்)

(த.63-7-190)

## உதயன் அனுசரணையுடனான

# எல்லைப்படை மாவீரர் நினைவுக் கிண்ணம் நவசக்தி, கலைவாணி அணிகள் வெற்றி

வலி.வடக்கு,மார்ச்18

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் ஆதரவுடனும் உதயனின் அனுசரணையுடனும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் நவசக்தி விளையாட்டுக்கழகம் 4:1 என்ற கோல்கணக்கில் ஏ.எல் விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டது.

கந்தரோடை ஸ்கந்தரோதயக் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி இடம்பெற்றது.

பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் சமுகம் கொடுககாமையால் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த கலைவாணி விளையாட்டுக்கழகம் இரண்டாது சுற்றில் விளையாடத்தகுதி பெற்றுள்ளது.(த-க)

# பேரலை வதந்தியால் கல்முனையில் நேற்று மக்கள் பதறியடித்து ஓட்டம்!

கல்முனைக்குடி,மார்ச்18

மீண்டும் ஆழிப்பேரலை ஏற்பட்டுவிட்டதாக விஷமிகள் சிலரால் பரப்பிவிடப்பட்ட வதந்தியைத் தொடர்ந்து நேற்றுக்காலை கல்முனைப் பிரதேசம் பெரும் அல்லோலகல்லோலப்பட்டது. பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் சிதறியோடினர்.

பாடசாலை மாணவர்கள் ஓடியதைக்கண்டு பொதுமக்களும் தலைதெறிக்க ஓடினார்கள்.

கடற்பேரலை மீண்டும் ஊருக்குள் வருகிறது என விஷமிகளால் பரப்பப்பட்ட வதந்தியே மக்களும், மாணவர்களும் சிதறியோடக் காரணமாக அமைந்தது.

நேற்றுக்காலை வானொலிகளில் ஒலிபரப்பான கடற்பேரலை தொடர்பான செய்திகளும் வதந்தியை மக்கள் நம்புவதற்குக் காரணமாக அமைந்தன என்றும அப்பகுதி மக்கள் சிலர் கூறினர்.

கல்முனைப் பிரதேசத்தில் இவ்வாறு அடிக்கடி விஷமிகள் பரப்பும் வதந்திகளால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுகின்றது.

நேற்றைய வதந்தியைத் தொடர்ந்து கல்முனைப் பிரதேசத்தில் உள்ள பிரபல பாடசாலையான கல்முனை ஸாஹிறாக் கல்லூரியிலிருந்து மாணவர்கள் அவசர அவசரமாகச் சிதறியோடியதில் பலர் காயமடைந்தனர் என்று கூறப்பட்டது. மாணவர்கள் தங்களுடைய புத்தகப் பைகளையும் சைக்கிள்களையும் கூடக் கைவிட்டு ஓடியுள்ளார்கள்.

ஆழிப்பேரலை வருகிறது என்ற செய்தி வெறும் வதந்தி என்று தெரிந்து நிலைமை சுமூக நிலைக்கு வந்த பின்னரும்கூட அச்சம் காரணமாக பெற்றோர்கள் பாடசாலைகளுக்குள் பிரவேசித்து தங்கள் பிள்ளைகளை வீடுகளுககு அழைத்துச்சென்றனர்.

இவ்வாறான வதந்திகளைப்பரப்பி மக்களை பீதிக்குள்ளாக்கும் விஷமிகளை பொலீஸார் கைதுசெய்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் தரப்பில் கோரப்படுகின்றது.

இதற்கு முன்னரும் சில தடவைகள் கல்முனைப் பகுதியில் சுனாமி அனர்த்தம் தொடர்பாக பரவிய வதந்திகளால் மக்கள் பதறியடித்துக்கொண்டு ஓடியமை குறிப்பிடத்தக்கது. (த-க)

# குண்டு துளைக்காத சீருடை கொள்வனவில் இராணுவம் - திறைசேரி இடையே வடாய்!

## சர்வதேச நிறுவனத்துக்கு உயர் அதிகாரிகள் ஆதரவா?

இலங்கை இராணுவத்திற்குத் தேவையான குண்டுகள் துளைக்காத் சீருடைகளைக் கொள்வனவு செய்யும் விவகாரம் இராணுவ உயர்மடடங்களில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருப்பதுடன் பாதுகாப்பு அமைச்சிற்கும் திறைசேரிக்குமிடையில் இழுபறி நிலைமையொன்றையும் உருவாக்கியிருக்கிறது.

இந்திய - இலங்கை கடன்திட்டத்தின் கீழ் இந்தச் சீருடைகளை இறக்குமதி செய்வதற்கு இராணுவம் நடவடிக்கை எடுத்திருந்தது. அதே சமயம், இந்தச் சீருடைகளை தயாரித்து வழங்குவதற்கான அனுமதியை உள்ளூர் நிறுவனமொன்றுக்கு வழங்குமாறு திறைசேரி அண்மையில் பாதுகாப்பு அமைச்சைப் பணித்திருந்தது.

ஆனாலும் திறைசேரியின் பணிப்புரையை புறக்கணித்து, உள்ளூர் நிறுவனத்தைத் தவிர்தது சர்வதேச நிறுவனம் ஒன்றிடம் அந்தக் கொள்வனவுக் கட்டளையை வழங்குவதற்கு இராணுவத்தின் உயர்மட்டக்குழு ஒன்று தீவிரமாகச் செயற்படுவதாகத் தெரியவருகின்றது.

மேற்படி சர்வதேச நிறுவனத்தின் சார்பில் கடந்தவாரம் இறுதியில் நடத்தப்பட்ட இரகசிய பேச்சில் இராணுவ மற்றும் திறைசேரியின் உயர் அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

குண்டுகள் துளைக்காத சீருடைகள் சர்வதேச நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்தால் இராணுவ உயரதிகாரிகள் பலரும் அதில் பெருமலாபம் கிடைக்கும் என்ற காரணத்தினாலேயே இந்த விடயத்தில் திறை சேரியின் தலையீட்டை இராணுவ உயர்மட்டங்கள் எதிர்ப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (த-க)

# விமானம் விபத்துக்குள்ளானதில் ரஷ்யாவில் 49 பேர் உயிரிழப்பு!

மொஸ்கோ,மார்ச்18

ரஷ்யாவில் எண்ணெய் நிறுவனத் தொழிலாளர்களை ஏற்றிச்சென்ற விமானமொன்று நேற்று முன்தினம் திடீரெனத் தீப்பிடித்து விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த 49 பேரும் உடல் கருகிப் பரிதாபகரமாகப் பலியாகினர்.

உயிரிழந்தவர்களில் நால்வர் விமான ஊழியர்களாவர். ஏனையோர் எண்ணெய் நிறுவனத் தொழிலாளர்களாவர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

நடுவானில் விமானம் பறந்து கொண்டிருந்த வேளையில் திடீரெனத் தீப்பிடித்துக்கொண்டது. உடனே விமானம் தரையிறங்கியதும் அதன் கட்டுப்பாட்டை இழந்து, நிலத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது என்று பொதுமக்களும் பொலீஸாரும் தெரிவித்தனர்.

கோமி குடியரசின் உசிஸ்க் நகரத்திலிருந்து சென்ற விமானமே பராண்டே எனும் இடத்தில் விபத்துக்குள்ளானதாகப் பொலீஸார் கூறினர்.

ஏ.என்.49 என்ற இந்த விமானத்தின் வால் பகுதியிலேயே ஆரம்பத்தில் தீப்பிடித்துக்கொணடது என்றும் -

அதனால், விமானம் தரையிறங்க முற்பட்ட சமயம் கட்டுப்பாட்டை இழந்து நிலத்தில் விழுந்து நொறுங்கியது என்றும் -

ரஷ்ய போக்குவரத்து அமைச்சின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தலைநகர் மொஸ்கோவில் வைத்துச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மீட்புப் பணியில் மீட்புப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். (எ-க)

## இந்தோனேஷியாவில் மீண்டும் பூகம்பம் என எச்சரிக்கை

ஜகர்த்தா, மார்ச்18

இந்தோனேஷியாவில் மீண்டும் பெரியளவில் பூகம்பம் ஏற்படும் என்று பூகம்பவியல் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பத்தின் தொடர்ச்சியாகவே இந்தப் பூகம்பம் ஏற்படும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பூகம்பம் பண்டா அச்செ பகுதியில் மையம் கொண்டிருக்கும் என்றும் - இது 7.5 முதல் 8.5 ரிச்டர் புள்ளி அளவில் இருக்கும் என்றும் - நிபுணர்கள் மேலும் கூறினர்.

இந்தப் பூகம்பம் ஆழிப்பேரலைகளையும் ஏற்படுத்தலாம் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இந்தப் பூகம்பம் எப்போது ஏற்படும் என்று திட்டவட்டமாக அறிவிக்கப்படவில்லை. ஆனாலும், மிக விரைவில் இந்தப் பூகம்பம் ஏற்படுமென பிரிட்டனில் உள்ள அல்ஸ்டர் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானி ஜோன் மெக்குரோஸ்கி தெரிவித்துள்ளார். (எ-8)

# ஈ-ராக் புதிய நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் கூடியது!

பக்தாத்,மார்ச்18

ஈராக் பொதுத்தேர்தல் நடைபெற்று ஆறு வாரங்களின் பின்னர் நேற்றுமுன்தினம் புதிய நாடாளுமன்றம் கூடியது. எவ்வித ஆக்கபூர்வமான முடிவுகளும் நாடாளுமன்ற அவையில் எடுக்கப்படவில்லை.

ஈராக்கின் புதிய அரசை தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு நடத்தப்படாமலேயே நாடாளுமன்ற அமர்வுகள் நிறைவுபெற்றன.

ஜனாதிபதியையும் இரு துணை ஜனாதிபதிகளையும் தேர்ந்தெடுப்பதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம்வேண்டும். ஆனால், 275 உறுப்பினர்களைக் கொண்ட புதிய நாடாளுமன்றத்தில் அப்பெரும்பான்மைப் பலம் இல்லை. இதனால் எந்தவொரு கட்சியாலும் ஆட்சியமைக்க முடியவில்லை.

நாடாளுமன்றம் கூடியதையொட்டி பக்தாத் நகரின் பல பகுதிகளில் போக்குவரத்து நிறுத்தப்பட்டு, பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈராக் தேசிய பாதுகாப்புப் படையினர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (எ-க)

# ஜெரிக்கோ நகரைப் பலஸ்தீனிடம் இஸ்ரேல் அரசு ஒப்படைப்பு!

ஜெரிக்கோ, மார்ச் 18

மேற்குக்கரை நகரான ஜெரிக்கோவின் பாதுகாப்புப் பொறுப்பை பலஸ்தீன நிர்வாகத்திடம் நேற்றுமுன்தினம் இஸ்ரேலிய அரசு ஒப்படைத்துள்ளது.

இரு தரப்புக்கும் இடையிலான சமாதான முயற்சிகளின் ஒரு பகுதியாகவே ஜெரிக்கோ நகரின் பாதுகாப்புப் பொறுப்பு மீண்டும் பலஸ்தீனர்களிடமே ஒப்படைக்கப்பட்டிருப்பதாகும்.

எதிர்வரும் வாரங்களில் பலஸ்தீன நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்படவுள்ள 5 நகரங்களில் ஜெரிக்கோவும் ஒன்றாகும்.

ஜெரிக்கோ நகருக்குள் பலஸ்தீனர்கள் நுழைவது தடுக்கப்படாது என்றும் -

ஆனால், அவர்கள் நகரைவிட்டு வெளியேறும போது தமது சோதனைச் சாவடிகளில் சோதனையிடப்படுவர் என்றும் -

இஸ்ரேலிய இராணுவத்தினர் தெரிவித்தனர்.

பலஸ்தீன நிர்வாகத்தின்கீழ் இருந்த ஜெரிக்கோ 2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் இஸ்ரேலுக்கும் - பலஸ்தீனத்துக்கும் மூண்ட சண்டையில் இஸ்ரேல் வசமானது.

தற்போது சுமார் ஐந்து வருடங்களின் பின்னர் மீண்டும் அந்த நகரம் பலஸ்தீன நிர்வாகத்தின்கீழ் வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உலக அரங்கில்

# ஈராக் கிளர்ச்சியாளர்கள் மீது அமெரிக்கப் படையினர் தாக்குதல்

பக்தாத்,மார்ச்18

ஈராக் தலைநகர் பக்தாத்தின் வடக்கேயுள்ள சயீதா நகருக்கருகில் நேற்று அமெரிக்கப் படையினர் ஈராக்கிய கிளர்ச்சியாளர்களை நோக்கி நேற்றுக் காலை தாக்குதல் நடத்தினர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

சயீதா நகருக்கு அருகில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவ வாகனத்தின்மீது கிளர்ச்சியாளர்கள் கைக்குண்டு வீசித் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்தே மேற்படி தாக்குதலை அமெரிக்கப் படையினர் நடத்தியுள்ளனர். இந்தக் கைக்குண்டுத் தாக்குதலின்போது பல அமெரிக்கப் படையினர் காயமடைந்துள்ளனர் எனவும்.

அவர்கள் ஹெலிகொப்டர்கள் மூலமாக வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனா எனவும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத தாக்குதல் உள்ளூர் நேரப்படி காலை 8.30 மணியளவில் இடம்பெற்றதெனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-க)

# ஆப்கானில் குண்டுவெடிப்புகள்: 5 பேர் உயிரிழப்பு; 31 பேர் காயம்!

ஆப்கானிஸ்தானின் தெற்கு நகரமான கந்தகாரில் இடம்பெற்ற இரு குண்டுவெடிப்புகளில் 5 பேர் உயிரிழந்தனர்; 31 பேர் காயமடைந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொண்டலீசா ரைஸ் ஆப்கானுக்கு வருகைதந்து ஒரு மணித்தியாலத்திலேயே இந்தக் குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது.

இந்த இரு குண்டுகளும் தொலைவில் இருந்து இயங்கும் கருவிமூலம் இயக்கப்பட்டுள்ளன எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலைத் தலிபான்களே செய்தனர் என நகரப் பொலீஸ் உயர் அதிகாரி கான மொஹமட் தெரிவித்தார்.

ஒரு குண்டு நகரின் மத்திய பகுதியிலும் மற்றைய குண்டு நகரின் தெற்கிலும் வெடித்துள்ளதாக நகர வெளிவிவகாரத் தலைவர் காலேட் பஷ்டன் தெரிவித்தார்.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சராக ரைஸ் பதவியேற்றபின் ஆப்கானிஸ்தானுக்கு மேற்கொண்ட முதலாவது விஜயம் இதுவாகும். (எ-க)

# சீனாவில் பஸ்ஸில் கொண்டுசெல்லப்பட்ட வெடிமருந்துகள் வெடித்து 30 பேர் பலி!

பெய்ஜிங்,மார்ச்18

சீனாவில் பஸ் ஒன்றில் கொண்டுசெல்லப்பட்ட வெடிமருந்துகள் வெடித்துச் சிதறியதால் அந்த பஸ்ஸில் பயணித்த 30 பயணிகள் உயிரிழந்தனர்; ஏழு பேர் படுகாயமடைந்தனர்.

சீனாவின் தென்பகுதியில் அமைந்துள்ள ஷென்ஸென் நகரில் இருந்து கிழக்கு மாகாணமான ஸெ ஜிண்க் நகருக்குச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸிலேயே மேற்படி சம்பவம் நேற்று அதிகாலை வேளையில் இடம்பெற்றுள்ளது.

இந்த வெடிவிபத்துச் சம்பவத்தால் அருகிலிருந்த வீடுகள் சில சேதமடைந்தன என்றும் -

வீதியால் நடந்துசென்றவர்கள் சிலர் காயமுற்றனர் என்றும் -

பொலீஸார் தெரிவித்தனர்.

சீனாவில் வருடாந்தம் வெடிமருந்துக் கடத்தல் காரணமாக நூற்றுக்கும் அதிகமானவர்கள் உயிரிழக்கின்றனர் என்று அதிகாரிகள் கூறினர்.

தொழில்சார் ரீதியில் அதிகமாக இடம்பெறும் விபத்துச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தவென - குறைக்கவென - புதிய திட்டங்களைச் சீன அரசு அறிமுகப்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (எ-க)

# பசுபிக் டெனிஸின் 4 ஆம் சுற்றில் பெடரர்

பசுபிக் பகிரங்க டெனிஸ் தொடரின் மூன்றாவது சுற்றில் வெற்றிபெற்றார் ரோஜர் பெடரர்.

அமெரிக்காவின் இண்டியன் வெல்ஸ் நகரில் நடக்கும் இத்தொடரில் மூன்றாம் சுற்றுப்போட்டிகள் நேற்றுமுன்தினம் நடந்தன. இதில், உலகின் முதல்நிலை வீரரான சுவிட்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர், லக்ஸாம் பெர்க்கின் கைல்ஸ் முல்லரை எதிர்த்து விளையாடினார். 83 நிமிடங்கள் நடந்த இப்போட்டியில் 6-3, 6-2 என்ற இலகு செட்களில் பெடரர் வெற்றிபெற்று, நான்காவது சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு போட்டியில் ஆஸ்திரேலியாவின் லெய்டன் ஹெவிட் 6-2, 7-6 என்ற செட்களில் பிரான்ஸின் மைக்கல் லோட்ராவை வீழ்த்தினார்.

ஆஸ்திரேலிய பகிரங்க சாம்பியனான ரஷ்யாவின் மாரட்சபின் 5-7, 4-6 என்ற செட்களில் அமெரிக்காவின் டெய்லர் டென்டிடம் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். (க-3)

# டில்லி ஒருநாள் கிரிக்கெட்டைக் காண ஏப்ரலில் இந்தியா செல்கிறார் முஷாரப்



இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் தொடரின் இறுதி ஒருநாள் ஆட்டத்தைக் காண பாகிஸ்தான் அதிபர் முஷாரப் அடுத்த மாதம் இந்தியா செலகிறார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்திய அணியுடன் விளையாடி வருகிறது. இரு நாடுகளுக்குமிடையே நடைபெறும் கிரிக்கெட் போட்டியைக்காண பாகிஸ்தான் அதிபர் முஷாரப் விருப்பம் தெரிவித்திருந்தார். ஆனால், அழைப்பு இல்லாமல் எங்கும் செல்லமாட்டேன் என்று பத்திரிகைக்கு பேட்டியளித்திருந்தார்.

இஸ்லாமாபாத்தில் உள்ள இந்தியத் தூதர் சிவசங்கர் மேனன் மூலமாக அதிபர் முஷாரப்புக்கு இந்தியா அழைப்பு விடுத்தது. இந்த அழைப்பை ஏற்று இந்தியா-பாகிஸ்தான் இடையே நடைபெறும் கடைசி ஒருநாள் ஆட்டத்தை நேரில் காண விருப்பம் தெரிவித்து முஷாரப் இந்திய அரசுக்கு கடிதம் அனுப்பினார் எனக் கூறப்படுகிறது. கடைசி ஒருநாள் போட்டி ஏப்ரல் 17ஆம் திகதி டில்லியில் நடக்கிறது. இப்போட்டியைக் காண ஏப்ரல் 16 ஆம் திகதி அவர் இந்தியா வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க-3)

# மினி உலகக் கிரிக்கெட்டுக்கு வரிவிலக்குத்தர இந்தியாவுக்கு ஐ.சி.சி. 2 நாள்கள் கெடு

மினி உலகக் கிண்ணப் போட்டியை நடத்துவது தொடர்பாக இந்தியாவுக்கு ஐ.சி.சி. கெடு விதித்துள்ளது. வரிவிலக்கு அளிப்பது குறித்து மத்திய அரசு இரண்டு நாள்களுக்குள் முடிவை அறிவிக்கத் தவறினால் போட்டி வேறு இடத்துக்கு மாற்றப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

2006 ஆம் ஆண்டு மினி உலகக்கிண்ணப் போட்டியை நடத்த இந்தியா விருப்பம் தெரிவிதது. ஆனால், வரிவிலக்கு அளிப்பதில் சிக்கல் நீடிக்கிறது. இதுதொடர்பாக மத்திய அமைச்சர் சிதம்பரம், சுனில் தத் ஆகியோரைக் கடந்த மாதம் ஐ.சி.சி. தலைவர் ஈசான் மனி சந்தித்துப் பேசினார். இதற்குப் பலன் எதுவும் கிடைத்ததாகத் தெரியவில்லை.

இந்திய அரசு தொடர்ந்தும் மௌனம் காத்து வருவதால் அரிய வாய்ப்பு கைநழுவிப் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சூழலில் சர்வதேசக் கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.)இரண்டுநாள் செயற்குழுக் கூட்டம் நேற்று புதுடில்லியில் ஆரம்பித்தது. இதில் மினி உலகக் கிண்ணம், ஐ.சி.சி. தலைமையகத்தை லண்டனிலிருந்து டுபாய்க்கு மாற்றுவது, கென்யக் கிரிக்கெட் நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினை, சர்வதேச அளவிலான போட்டி அட்டவணை, வளர்ச்சிப் பணிகள் உட்பட பல்வேறு விடயங்கள் பற்றி விவாதிக்கப்பட்டு வருகின்றன.

இக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக நேற்றுமுன்தினம் டில்லி வந்த ஈஷான மனி, வரிவிலக்கு அளிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து அதிருப்தி தெரிவித்தார். (3-க)






## சர்வதேச விளையாட்டுக் களம்

# கொல்கத்தா ரெஸ்ட் துளிகள்

★ கொல்கத்தா ரெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தைக் காண 33 ஆயிரம் ரசிகர்கள்தான் வந்திருந்தனர். 93 ஆயிரம் பேர் அமரும் வசதி கொண்ட பிரமாண்டமான ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் பல பகுதிகள் காலியாகக் கிடந்தன. டிக்கெட் கட்டணம் அதிகமாக உயர்த்தப்பட்டுள்ளதே கூட்டம் மிகவும் குறைந்ததற்கு காரணம் என்று கூறப்படுகிறது.

★ ரெஸ்ட்டில் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில்தத் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

★ கொல்கத்தாவில் முதல்நாள் ஆட்டத்தில் சுட்டெரித்த வெயிலில் பாகிஸ்தான் அணித் தலைவர் இன்சமாம் பாதிப்புக்குள்ளானார். கடும் வெயிலால் தலைவலி கண்ட அவர் தேநீர் இடைவேளைக்குக்குப் பிறகு களத்தடுப்பு செய்யாமல் ஓய்வெடுத்தார். அவருக்கு பதிலாக யூனுஸ்கான் தலைவராக கடமையாற்றினார்.

★ தசைப்பிடிப்பு காரணமாக இந்திய சுற்றுப் பயணத்தில் இடம்பெறாத பாகிஸ்தான் அணி வேகப்பந்துவீச்சாளர் சொயிப் அக்தர் உடல் தகுதி பெற்றுவிட்டாரா? என அந்த அணி பயிற்சியாளர் பாப் வூல்மர், கிரிக்கெட்சபைத் தலைவர் ஷாரியர்கானுக்கு மின்னஞ்சல் அனுப்பித் தகவல் கேட்டிருக்கிறார்.

★ இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கரை சந்தித்துத் துடுப்பாட்ட ஆலோசனைபெற இருக்கிறார் என பாகிஸ்தான் அணி வீரர் யாசிர் ஹமீது தெரிவித்துள்ளார். (க-3)

# யாழ்ற்ரன் கல்லூரியில் சஞ்சிகை வெளியீட்டு விழா

காரைநகர்,மார்ச்18

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி இந்து மாணவர் மன்றத்தின் 'யாழ்ற்ரன் ஞான ஒளி' சஞ்சிகை வெளியீட்டுவிழா இன்று வெள்ளிக் கிழமை காலை 9.30 மணிக்குக் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செல்வன் பொ.ஸ்ரீராமன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் ப.சத்தியசீலனும் சிறப்பு விருந்தினராகத் தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேஸ்வரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

முன்னாள் அதிபர் சி.பொன்னம்பலம் சஞ்சிகையை வெளியிட்டு வைத்து வெளியீட்டுரை நிகழ்த்த முதற் பிரதியை மகாராணி புடைவையக உரிமையாளர் க.சோமசேகரம் பெற்றுக்கொள்வார். தொடர்ந்து ஆசிரியர், மாணவர்களின் கலைநிகழ்வு இடம்பெறும். (எ-73)





தமிழீழ விடுதலைப் புலிகளின்
அரசியல் ஆலோசகரும்
தத்துவாசிரியருமான
கலாநிதி
அன்ரன் பாலசிங்கம்
அவர்கள் எழுதிய

**போரும் சமாதானமும்**
**(WAR AND PEACE)**
எனும் நூலின்

**அறிமுக விழா அழைப்பு**

இடம்: **கைலாசபதி கலையரங்கு, யாழ்.பல்கலைக்கழகம்**
காலம்: **நாளை (19.03.2005) சனிக்கிழமை**
நேரம்: **மாலை 3.00 மணிக்கு (தாயக நேரம்)**

**தங்களை இந்நூல் அறிமுக விழாவிற்கு அழைப்பதில் பெருமிதம் கொள்கின்றோம்.**

**போரும் சமாதானமும் நூல் அறிமுகவிழா நிகழ்ச்சி நிரல்**

பொதுச் சுடரேற்றல்:
**பேராசிரியர் சு.மோகனதாஸ்**
(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

தேசியக் கொடியேற்றல்:
**திரு.சோ.தங்கன்**
(அரசியல்துறை துணைப்பொறுப்பாளர், தமிழீழம்)

**அகவணக்கம்**

வரவேற்புரை:
**திரு.செல்வக்குமார்**
(தலைவர் – மாணவர் ஒன்றியம், யாழ். பல்கலைக்கழகம்)

தலைமையுரை:
**திரு.இ.புவிராஜ்**
(சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை)

***வாழ்த்துரை:***
**1.பேராசிரியர் சு.மோகனதாஸ்**
(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)
**2.திரு.செ.கஜேந்திரன்**
(முன்னாள் தலைவர், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை)

***நூல் பற்றிய சிறப்புரைகள்:***
**1.கே.ரி.கணேசலிங்கம்**
(விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)
**2.திரு.சி.இளம்பரிதி**
(பொறுப்பாளர் – அரசியல்துறை, யாழ்.மாவட்டம்)
**3.திரு.க.வே.பாலகுமாரன்**
(மூத்த உறுப்பினர், தமிழீழ விடுதலைப் புலிகள்)

***நூல் அறிமுக உரை:***
**1.திரு.மு.திருநாவுக்கரசு**
(அரசியல் ஆய்வாளர்)

***முதற்பிரதி வழங்குதல்***
**வழங்குபவர்: திரு.சோ.தங்கன்**
(அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் – தமிழீழம்)
**பெறுபவர்: பேராசிரியர் வி.பி.சிவநாதன்**
(தலைவர் – பொருளியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

***சிறப்புப் பிரதி வழங்கல்:***
**செல்வி கலைவிழி**
(மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர், யாழ்.மாவட்டம்)

***நன்றியுரை:***
**திரு.கோ.நிறைஞ்சனன்**
(சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை)

**சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை.**

(சி.41555)(42-14-15-24)


## அழகெழல் போட்டிகள்

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் நுண்கலைத் துறையினரால் நடத்தப்படும் அழகெழல் போட்டிகள் இன்று காலை 9.30 மணிக்குக் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.குருகுலராஜா, தமிழீழக் கல்விக்கழகத் துணைப்பொறுப்பாளர் அருண்மாஸ்ரர், தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி பா.தனபாலன், நுண்கலைத்துறை இணைப்பாளர் கரட்ணேஸ்வரன் ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்கவுள்ளனர்.முதன் முறையாகக் கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறவுள்ள இந்தப் போட்டிகளில் பல மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர்.(எ-203)

## தையல் இயந்திரங்கள்

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 37 குடும்பங்களுக்கு அண்மையில் தையல் இயந்திரங்கள் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன. புனர்வாழ்வு மீள் குடியமர்வு அகதிகள் விவகார அமைச்சு இந்த தையல் இயந்திரங்கள் பிரதேச செயலகத்திற்கு வழங்கியிருந்தது. (எ-117)

# திரைக் கலைச் சங்கங்களை பிரதேச ரீதியாக நிறுவ முடிவு

யாழ்ப்பாணம்,மார்ச்18

யாழ். மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ரீதியாகவும் திரைக் கலைச் சங்கங்கள் அமைக்கப்படவேண்டும்.

- இவ்வாறு சலன சித்திர அமைப்பினர் இலங்கை தேசியத் திரைப்படக் கூட்டுத் தாபனப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் பணிப்பாளருக்குப் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

அந்த மகஜரில் உள்ள கோரிக்கைகள் வருமாறு:-

★ திரைக் கலைச் சங்கங்களைப் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக உடனடியாக எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் அமைத்தல்.

★ பிரதேச திரைப்படச் சங்கங்கள் கிராம சேவகர் பிரிவு ரீதியாகத் திரைக் கலைஞர்களின் விவரம் திரட்டி காப்புறுதி, ஓய்வூதியம் பெற்றுக்கொடுக்க சிபார்சு செய்தல் -

★ திரைக்கதைச் சங்கங்கள் இணைந்து மாவட்ட சமாசத்தை உருவாக்குதல்.

★ மாதாந்த சினிமாச் சொற்பொழிவும் கலந்துரையாடலும் நடத்துதல்.

★ திரைப்பட விழாக்கள் நடத்துதல்.

★ திரையரங்கு மற்றும் நவீன வசதிகள் கொண்ட கலாசார மண்டபம் ஒன்றை அமைத்தல் -

★ திரைப்பட அலகை உருவாக்குதல்.

★ திரைக் கலை நூலகம் அமைத்தல்.

(ஜ-202)


**தையல் பயிற்சி நிலையத் திறப்பு விழா**

ROTARACT CLUB

3220 மாவட்ட இலக்க
றோட்டறக்ட் கழகங்களினால்
ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும்
இளைஞர், யுவதிகளுக்கான விசேட தையல்
பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வும்
மேற்படி நிலையத் திறப்பு விழாவும்
இன்று நடைபெறுகின்றன.




இடம்:
**கோப்பாய் வடக்கு இளைஞர் கழகம்**

காலம்:
**இன்று (18.03.2005) வெள்ளிக்கிழமை**



நேரம்:
**பி.ப. 4. மணி (பு.நே.)**

**குறிப்பு:**
இப்பயிற்சி நெறியில் கலந்து பயன்பெறவிரும்பும்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"மக்கள் சேவையில் றோட்டறக்ட் கழகத்தினர்"

(C-41554) (24-14-15)



**எங்கள் அன்புக்குரிய வாடிக்கையாளர்களுக்கு**
**ஒரு நற்செய்தி**

எங்கள் தலைமைக் காரியாலயம் சில தவிர்க்கமுடியாத காரணங்களால் மூடவேண்டி ஏற்பட்டுவிட்டது. அதன் நிமித்தம் அங்கிருந்து கொண்டுவரப்பட்ட ஒரு தொகை (ஒதுக்கப்பட்ட குறிப்பிட்ட புத்தகங்கள்) பாவனையாளர்களின் நன்மைகருதி கடந்த 01.04.2004 தொடக்கம் இன்றுவரை எம்மிடம் பொருள்கள் கொள்வனவு செய்த சிட்டை (Bill) வைத்திருப்பவர்களுக்கு 250.00 ரூபாவுக்குக் குறையாத புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்படும். நேரில் வரவும்.

**குறிப்பு 18ஆம், 19ஆம், 21ஆம் திகதிகள் மட்டுமே.**

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

**எண். 212–214, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

*நிர்வாகி*
**ACD.**

(சி-41548) (24-14-15)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## முரண்பாட்டுடன் பிறந்த கூட்டமைப்பு

நாட்டின் தேசியப் பிரச்சினையான இனப்பூசலுக்கு - பிணக்குக்கு - அமைதித் தீர்வுகாணும் முயற்சிகள் குழம்பிப் போய் தேக்கமுற்றிருப்பதற்கு யார் காரணம் என்பது அந்தத் தரப்பின் ஒப்புதல் வாக்குமூலமாகவே வெளியாகியிருக்கின்றது.

நேற்றுமுன்தினம் கொழும்பில் தமது கட்சியின் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ஜே.வி.பியின் தலைவர்களான சோமவன்ஸ அமரசிங்க, விமல் வீரவன்ஸ ஆகியோர் இதற்கான தனிப் பாந்தயத்தை - உரிமையை - கோரியிருக்கின்றார்கள்.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்று வந்த அமைதிப் பேச்சுகள் மூலம் நாட்டைப் பிளவுபடுத்தும் வகையில், வெளிநாடுகள் இலங்கை மீது திணிக்க முயன்ற தீர்வுத் திட்டத்தைத் தாங்கள் திட்டமிட்டு முறியடித்தார்கள் என்று அவர்கள் இருவரும் இந்தக் கூட்டத்தில் தங்களுக்குத் தாங்களே புகழ்மாலை சூட்டிக் கொண்டார்கள்.

''வெளிநாடுகள் திணிக்க முயன்ற சதியை நாம் திட்டமிட்டு முறியடித்தோம். எமது இந்த முயற்சிக்கு ஏனையவர்கள் (ஏனைய கட்சிகள்) தாங்கள் உதவுகின்றார்கள் என்று தெரியாமலேயே எமது வலைக்குள் விழுந்து எம்மோடு சேர்ந்து இயங்கி உதவினார்கள். அதனால் ஐ.தே.கட்சி தலைமையிலான அரசு புலிகளுடன் இணக்கம் காண இருந்த இடைக்கால அதிகாரசபை உட்படச் சகல திட்டங்களையும் வெற்றிகரமாக முறியடித்தோம்'' - என்று 'தற்பெருமை'யோடு பீற்றிக்கொள்கின்றார்கள் ஜே.வி.பி. தலைவர்கள்.

ஆக, ரணிலின் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சமாதானப் பேச்சுக்களின்போது இடைக்கால நிர்வாகம் தொடர்பாக இணக்கம் ஏற்படுவதைத் தடுப்பதற்கு ஜே.வி.பி. விரித்த சதிவலைக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அவரது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் அதனோடு சேர்ந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினரும் - தெரிந்தோ தெரியாமலேயோ - சேர்ந்து இயங்கி, ஒத்துழைத்திருக்கின்றார்கள் என்று ஜே.வி.பி. இப்போது 'நையாண்டி' பண்ணுகின்றது. இதற்கு ஜனாதிபதியும் அவரது தரப்பினரும் என்ன பதில் கூறப்போகின்றார்கள்?

வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பாக ரணிலின் அரசும் விடுதலைப் புலிகளும் ஓர் இணக்கத்துக்கு வருவதை அந்தக் காலகட்டத்தில் மிக மோசமாக விமர்சித்து வந்தவர்களுள் ஜனாதிபதி குமாரதுங்கவும் ஒருவர் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

எனவே, 'நாமும் அந்த இணக்கம் ஏற்படாமல் அதனை உடைக்கவே திட்டமிட்டோம். அதற்கு ஜே.வி.பியை முன்னிறுத்தி அதன் மூலம் காரியத்தைச் சாதிக்க எண்ணினோம். நாம் பின்னிய வலையில் ஜே.வி.பி. விழுந்து அந்த இணக்கத்தை ஏற்படவிடாமல் முறிக்க வழி செய்தது. எமது நிலைப்பாடு அதுதான். ஆனால், சர்வதேச சமூகத்தைச் சமாளிப்பதற்கு ஏதோ அமைதிமுறையில் - சமாதான வழியில் - தீர்வு காண்பதில் ஆர்வம் உள்ளவர்கள்போல நடிக்கின்றோம்' - என்று தனது மறைந்திருக்கும் நிகழ்த்தித் திட்டம் குறித்து ஜனாதிபதி குமாரதுங்கவும் கருத்துக் கொண்டுள்ளாரோ என்னவோ தெரியவில்லை.

ஆனாலும் ரணிலின் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக இணக்கம் ஏற்படாமல் அதை முறியடிப்பதில் சு.க.- ஜே.வி.பி. இரு தரப்பினருமே மிகுந்த முனைப்பாக இருந்தார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

கடந்த பொதுத்தேர்தலில் சு.க. - ஜே.வி.பி. கூட்டணியான ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு வென்று ஆட்சி அமைத்தது.

இந்தத் தேர்தல் முடிவுகளின்படி அதிகாரப் பகிர்வுமூலம் தீர்வு காண்பதற்கு சிங்கள மக்கள் ஆணை வழங்கவில்லை என்று ஜே.வி.பி. இப்போது சுட்டிக்காட்டுகின்றது. அது ஒரு வகையில் சரியானதுதான்.

இந்தக் கூட்டமைப்பு உருவானபோதே, இரு தரப்புக்கும் இடையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வழி முறையில் முரண்பாடு இருப்பது அப்பட்டமாக எழுத்தில் - கறுப்பு, வெள்ளையில் - வெளிப்படுத்தப்பட்டது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கான ஒப்பந்தத்திலேயே இந்தக் கருத்துநிலை வேறுபாடு உள்ளது என்பதை இரு தரப்பினருமே ஒப்புக்கொண்டு தெளிவாக அதில் வெளிப்படுத்தியிருந்தனர்.

இனப்பிரச்சினைக்குத் தேசிய ரீதியில் அதிகாரப்பகிர்வு மூலம் தீர்வு என்று சுதந்திரக் கட்சியும் -

கிராமம் வரை நிர்வாகத்தைப் பன்முகப்படுத்துவதன் மூலமே தீர்வு காணலாம் என்று ஜே.வி.பியும் -

தங்களின் முரணான நிலைப்பாட்டை அதில் தெளிவுபடுத்தியிருந்தன.

இந்தக் கருத்து முரண்பாட்டை எழுத்தில் -அந்த உடன்பாட்டில் - ஒப்புக்கொண்ட இரு கட்சிகளுமே அந்த முரண்பாட்டை எப்படித் தீர்க்கப்போகின்றன என்பதை அதில் தெளிவுபடுத்தவில்லை. அதற்கான ஒரு முடிவையும் அவை எட்டவேயில்லை.

அந்த முரண்பாட்டைவிட, ஐ.தே.க. அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடைக்கால அதிகாரசபை தொடர்பாக ஏற்படக்கூடிய இணக்கப்பாட்டைச் செயலுருப் பெறவிடாமல் முறியடிப்பதே தமக்கு முக்கியமானது எனத் தாங்கள் கருதுவதாக அவை இரண்டுமே அந்த ஒப்பந்தத்தில் தெரிவித்திருந்தன.

அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் தயாரான தேர்தல் விஞ்ஞாபனத்தை முன்வைத்தே அவை போட்டியிட்டு ஆட்சியையும் பிடித்தன. எனவே, அந்த முரண்பாடான நிலைப்பாட்டிற்குத்தான் மக்கள் ஆணை கிடைத்துள்ளது என ஜே.வி.பி. கூறுவதில் என்ன தப்பு - தவறு - இருக்க முடியும்?

தீர்க்கப்படாத அந்தக் கருத்து முரண்பாட்டின் விளைவுதான் இப்போது அரசுக் கூட்டமைப்புக்குள் பெரும் இழுபறியாகத் தொடர்கின்றது.

# சுன்னாகத்தை நகர சபையாகத் தரம் உயர்த்தக் கோரித் தீர்மானம்

## தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கச் செயற்குழு

வலிகாமம் தெற்கு.மார்ச்18

பட்டினசபை அந்தஸ்துடன் விளங்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபையினை (சுன்னாகம்) நகரசபை அந்தஸ்துக்கு உயர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கக் கோரும் என்ற தீர்மானம் வலிகாமம் தெற்கு பிரதேச செயலக திணைக்களத் தலைவர்கள் கலந்துகொண்ட ஒரு கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சுன்னாகம் நகரத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பாகப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போது இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வலிகாமம் பொது அமைப்புகள் ஒன்றியத் தலைவர் சி.குமாரவேலு, மனித நேய அமைப்புகளின் ஒன்றியத்தைச் சேர்ந்த சு.பரமநாதன், சுன்னாகம் பிரதேச சபை செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம், சுன்னாகம் தபாலதிபர், சுன்னாகம் வர்த்தக சங்கத் தலைவர் உட்படப் பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

சுன்னாகம் பட்டின சபை, உடுவில் கிராம சபை என்பன ஒரு காலத்தில் உன்னத நிலையில் விளங்கின. இன்றும் கூட சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை போன்ற நகரசபை அந்தஸ்துடைய சபைகளைக் காட்டிலும் கூடிய வருமானத்தைச் சுன்னாகம் பட்டினசபை பெற்று வருகின்றது. எனவே, இதனை நகர சபை அந்தஸ்துக்குத் தரம் உயர்த்துவதில் நாம் அக்கறை செலுத்த வேண்டும் என வலிகாமம் பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சி.குமாரவேல் வலியுறுத்திக் கூறினார்.

யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, கருத்துத் தெரிவிக்கையில் சுன்னாகம் பட்டினத்தில் சந்தை, வீதிகள், கடைகள், வடிகால்கள், பாதை அமைப்புகள் போன்றவை மிக நெருக்கமாக உள்ளன. இவை பற்றிய பின்னணித் தகவல்களைத் தந்தால் நகர சபையாக்கும் முயற்சியினை வேகமாக முன்னெடுக்கலாம். இது தொடர்பாக இப்பகுதியில் உள்ள வணிகர் மன்றங்கள், வரி இறுப்பாளர்கள், விவசாயிகள் போன்ற பல்வேறு தரப்பினர்களதும் அபிப்பிராயங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும் – என்று கூறினார்.

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் கருத்துத் தெரிவிக்கையில் -

நகர சபையாகத் தரம் உயர்த்தும் வேளையில் எவ்வளவு பிரதேசம் உள்ளடக்கக் கூடியதாக இருக்கும் என ஆராயப்பட வேண்டும் எனவும் இதற்கான எல்லைப் பரப்புகள் வரையறுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இறுதியாக, சுன்னாகம்பிரதேசசபையை நகர சபையாகத் தரம் உயர்த்த உரிய நடவடிக்கை எடுப்பதெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு. அதன் எல்லைகள் வகுக்கப்பட்டு எவ்வளவு பிரதேசம் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதைப் பல்வேறு அமைப்புகளுடன் கலந்துரையாடி முன்னெடுப்பதற்காக 11 பேர் அடங் கிய செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (ஐ-152)

# சுகாதாரத்துறையின் மீள் கட்டமைப்பு: செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பேற்றது

## இது தொடர்பான உடன்பாடு கைச்சாத்து

யாழ்ப்பாணம்.மார்ச்18

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள சுகாதாரத்துறையை மீள்கட்டுமானம் செய்வதில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் பங்களிப்புச் செய்யவுள்ளது.

இதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் அண்மையில் கொழும்பில் வைத்து சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசாக்கு அமைச்சுக்கும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செஞ்சிலுவைச் சம்மேளனத்துக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின்படி சுனாமியால் இலங்கை முழுவதும் பாதிக்கப்பட்டுள்ள பொது ஆதார, மாவட்ட, கிராம, சுற்றயல் வைத்தியசாலைகளையும் மத்திய மருந்தகங்களையும் மீளக் கட்டித்தருவது, திருத்த வேலை செய்வது அல்லது முழு ஆற்றலுடன் இயங்கச் செய்வது ஆகிய பொறுப்புக்களை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, புத்தளம், திருகோணமலை, காலி, களுத்துறை, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்கள் உள்ளடக்கப்படுகின்றன.

மேற்படி சுகாதாரத்துறையை புனர்நிர்மாணிப்பதுடன் 5 வருடங்களுக்கு அவற்றைப் பராமரிக்கவும் சங்கம் உடன்பட்டுள்ளது.

இலங்கை அரசின் சார்பில் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசாக்கு அமைச்சின் பதில் செயலாளர் டாக்டர் நிகால் ஜெயவர்த்தனவும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் சார்பில் ஜகத் அபேயசிங்கவும் சர்வதேச செஞ்சிலுவைச் சம்மேளனத்தின் சார்பில் வதிவிடப் பிரதிநிதி அலஸ்டர் கொடன் கிப்சனும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இத்திட்டமானது சுகாதார அமைச்சின் வழிகாட்டல், தரப்படுத்தல், வடிவமைப்புக்கமைய நடைமுறைப்படுத்தப்படும். மத்திய பொறியியல் ஆலோசனைச் சபையானது அமைச்சின் ஆலோசனைத் திட்டத்தை வரையவுள்ளது. இத்திட்டத்தை மேற்பார்வை செய்ய 5 பேர் அடங்கிய நிபுணர்குழு நியமிக்கப்படவுள்ளது.

(ஐ-202)

# கலாசார சபை அமைப்பதற்கு 15 பேர் கொண்ட குழு தெரிவு

யாழ்ப்பாணம்.மார்ச்18

யாழ்.மாவட்டத்தில் கலாசார சபை ஒன்றை அமைப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று கடந்த செவ்வாயன்று யாழ்.செயலகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் 15 பேரைக் கொண்ட குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

அரச அதிபர் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள இக்குழுவில் கலாசார உத்தியோகத்தர், கலைஞர்கள், நாடக ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், மன்றப் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்படப் பலர் அடங்குவர். இவர்களுள் கலாசார சபை உறுப்பினரைத் தெரிவுசெய்யும் நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

தமது காலம் முழுவதையும் கலைக்கென அர்ப்பணித்த கலைஞர்களைக் கௌரவிக்கவும் கலாசார விழுமியங்கள் ஊடாகச் சமூகச் சீர்கேடுகளை நிவர்த்தி செய்யவும் இனப்பாரம்பரியங்களை அழிந்து போகாது காக்கவும் இச்சபை உதவும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சபை செயற்படுவதற்கான நிதி உதவியைப் பெற்றுத்தருவதாக அரச அதிபர் உறுதி அளித்தார்.

அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் இக்கூட்டத்தில் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, பிரதேச செயலகங்களைச் சேர்ந்த கலாசார உத்தியோகத்தர்கள், திருமறைக் கலாமன்றப் பிரதிநிதிகள், பேரவைப் பிரதிநிதிகள், எழுத்தாளர்கள், மாணவர் ஒன்றிய ஆலோசகர் கலா.புவனேஸ்வரன், கலைஞர்கள், நாடக ஆசிரியர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

(ஐ-203-202)

## வலிகாமம் கல்வி வலயத்தில்

# முதலாம் தர மாணவருக்கு போஷாக்கு உணவுத் திட்டம்

வலிகாமம் தெற்கு.மார்ச்18

வலிகாமம் கல்வி வலயத்தில் இவ்வருடம் முதலாம் வருட மாணவர்களுக்குப் போஷாக்கு உணவு செயற்றிட்டத்தை அமுல்படுத்த வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

போஷாக்குணவு வழங்குவதற்கென இவ்வருடம் வலிகாமம் கல்வி வலயத்தில் 24 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுடன் கோட்ட ரீதியான கலந்துரையாடல்களை வலயக் கல்விப்பணிப்பாளர் நடத்திவருகிறார்.

உடுவில் கல்விக் கோட்டத்தில் உள்ள சங்குவேலி அ.த.க.பா., உடுவில் மல்வத்தை அ.த.க.பா., உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை, ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாசாலை, குப்பிளான் விக்கினேஸ்வர வித்தியாசாலை, கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை, சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை, புன்னாலைக்கட்டுவன் அ.த.க.பா., கோட்டைக்காடு அ.த.க.பாடசாலை ஆகியவை இவ்வருடம் போஷாக்குணவு வழங்கும் செயற்றிட்டத்துக்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.(ஐ-152)

### உதயவாக்கு

வாழ்க்கை என்பது இனிய கதையோட்டம் உள்ள நாவல் அல்ல படிப்பதையே திருப்பித் திருப்பிப் படிக்க வேண்டிய கணக்குப் புத்தகம்.

- மணிவாக்.

### நாளை

பங்குனி 06
சனிக்கிழமை
19.03.2005
திதி : நவமி
மாலை 6.13 வரை
நட்சத்திரம் : திருவாதிரை
முற்பகல் 11.58 வரை
கரிநாள்
சுபநேரம் : 03.18 - 04.48
ராகுகாலம் : 09.18 - 10.48
(யாவும் பழைய நேரப்படி)

# வாகனங்களில் மணல் கடத்த புதுவிதமான தந்திரோபாயம்

அரியாலை.மார்ச்18


வரணிப் பிரதேசத்திலிருந்து வாகனங்களில் சட்டவிரோதமாக மணலை ஏற்றிச் செல்வோர் தற்போது புதுவிதமான தந்திரோபாயங்களைக் கையாண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உழவு இயந்திரங்கள், ஹன்ரர் வாகனங்கள் போன்றவற்றில் சட்டவிரோதமாக மணலை ஏற்றிவருவதால் பொலிஸாரிடமும் கலாசாரத்தைப் பேணும் குழுவினரிடமும் அகப்பட்டுக்கொள்ளும் சம்பவங்கள் தினமும் இடம்பெற்று வருகின்றன.

இதனையடுத்து உழவு இயந்திரங்கள், ஹன்ரர் வாகனங்கள் ஆகியவற்றில் மணலை ஏற்றிய பின்னர் அதன் மேல் வைக்கோலை அடுக்கி மணல் கடத்தும் புதிய யுக்தி கையாளப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு மணலை ஏற்றிய பின்னர் அதன் மேல் வைக்கோலைப் போட்டு மூடி மணல் கடத்தும் முயற்சியில் ஈடுபட்ட வாகனம் ஒன்று தென்மராட்சியில் கலாசாரத்தைப் பேணும் குழுவினரால் பிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(8-17)



யாழ்.மத்திய கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிகளுக்கிடையிலான மோதலில், சென்.ஜோன்ஸ் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் பந்தை அடித்து ஆடும் காட்சி

# வழமையான ஆரவாரம் ஏதுமின்றி

# வடக்கின் பெரும்போர் ஆரம்பம்!

## வீதிக் களியாட்டங்கள் ரத்து; பார்வையாளர்களுக்கும் கட்டுப்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச்18

நூறாண்டு வரலாற்றை எட்டியிருக்கும் 'வடக்கின் பெரும் கிரிக்கெட் மோதல்' நேற்று வழமையான ஆரவாரங்கள் ஏதும் இன்றி மிக அமைதியான முறையில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகியது.

யாழ்.மத்திய கல்லூரி - சென். ஜோன்ஸ் கல்லூரி ஆகியனவற்றின் வீரர்கள் பங்குபற்றும் இந்தப் பாரம்பரியக் கிரிக்கெட் ஆட்டத்தை அண்மையில் இடம்பெற்ற 'சுனாமி' பேரனர்த்தத்தைக் கருத்திற் கொண்டு மிக அமைதியான முறையில் நடத்துவது என்று இரண்டு கல்லூரி நிர்வாகங்களும் தீர்மானித்தன.

இதன்படி, இந்தக் கிரிக்கெட் ஆட்டத்துக்கு சில வாரங்கள் முன்னரே களைகட்ட ஆரம்பித்துவிடும் வீதிக் களியாட்டங்கள், அணி ஆதரவுப் பிரசாரங்கள், விளம்பரப்படுத்தல்கள் அனைத்துமே இம்முறை தவிர்க்கப்பட்டிருக்கின்றன.

கல்லூரிக் கொடிகளுடன் வீதிகளில் ஆடிப்பாடிக் குதூகலிக்கும் மாணவர் குழுக்களை இம்முறை காண முடியவில்லை.

தேவையற்ற ஆடம்பரங்கள் தவிர்க்கப்பட்ட அதேவேளை, போட்டி நடைபெறும் மைதானத்தில் பார்வையாளர்களுக்கும் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு முழு அளவில் அமைதி பேண ஏற்பாடாகி உள்ளது.

மைதானத்தின் மேற்குப் பக்கமாக ஆள்கள் எவரும் நுழைய முடியாதபடி மறிப்புப் போடப்பட்டிருந்தது. அந்தப் பகுதியில் இருந்து மட்டும் ரசிகர்கள் போட்டியைக் கண்டுகளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மைதானத்துக்குள் இரண்டு கல்லூரிகளின் மாணவர்களும் பழைய மாணவர்களும் அமர்ந்திருப்பதற்குத் தனித்தனியாகக் கொட்டகைகள் அமைக்கப்பட்டிருந்தன.

கடந்தவருடம் போட்டியின் இறுதி நாளன்று ரசிகர் கும்பல் ஒன்று மைதானத்தின் மையப்பகுதிக்குச் சென்று அட்டகாசம் புரிந்த சம்பவங்கள் போன்ற விரும்பத்தகாத சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுக்கும் நோக்குடன் விசேட செயலணி ஒன்று மைதானத்தில் செயற்பட்டுவருகிறது.

விடுதலைப் புலிகளின் ஏற்பாட்டில 20 உறுப்பினர்கள் கொண்டதாக இந்தச் செயலணி பணியில் ஈடுபட்டிருந்தது.

கல்லூரிகளின் மாணவர்கள் கல்லூரிச் சீருடையுடனேயே போட்டியைப் பார்வையிட அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று முற்பகல் 10 மணிக்கு இரு அணிகளும் களமிறங்கின. பூவா, தலையா நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணித தலைவர் றொகான், சென்.ஜோன்ஸ் கல்லூரியைத் துடுப்பாட்டத்தில் ஈடுபடுமாறு கேட்டுக்கொண்டார்.

இதையடுத்து ஆட்டம் ஆரம்பமானது.

(ஐ-3-86-190)

**உதயன் அனுசரணையுடனான**

## எல்லைப்படை மாவீரர் உதைபந்தாட்டம்

## கரணவாய் - மாவத்தை அணிகள் மோதல்

யாழ்ப்பாணம்,மார்ச்18

எல்லைப்படை மாவீரர் நினைவுக் கிண்ணத்துக்காகத் தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.மாவட்ட பிரிவின் ஆதரவில் வலிகாமம் லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கரணவாய் மத்தி வி.கவும் மாவத்தை வி.கவும் இன்று மோதுகின்றன.

'உதயன்' ஊடக அனுசரணையுடன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடக்கும் ஆட்டத்திலேயே இந்த அணிகள் மோதுகின்றன.

பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும் மற்றோர் ஆட்டத்தில் சென். தோமஸ் வி.கவும் விநாயகர் வி.கவும் மோதுகின்றன.

(3-86-190)

**பொதுநலவாய அமைப்பு துப்பாக்கி சுடுதலில் இந்தியாவுக்கு 3 தங்கம்**

மெல்போர்னில் இடம்பெற்று வரும் 6ஆவது பொதுநலவாய அமைப்பு துப்பாக்கி சுடுதல் சம்பியன் போட்டியில் இந்தியா மேலும் ஒரு தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளது.

திங்களன்று இடம்பெற்ற ஆண்களுக்கான ஸ்டான்டட் பிஸ்ரல் போட்டியில் இந்தியாவுக்கு தங்கம் கிடைத்தது. இதில் இங்கிலாந்து வெள்ளியையும், ஆஸ்திரேலியா வெண்கலப் பதக்கங்களையும் பெற்றுக்கொண்டன.

(க-3)

## முதல்நாள் நடந்த இரு ஆட்டங்களில் சில்வஸ்ரார் - ஞானமுருகன் வெற்றி

வலி.வடக்கு,மார்ச்18

எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்தமாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் ஆதரவுட



னும் 'உதயன்' அனுசரணையுடனும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் முதல் நாள் ஆட்டத்தில் சில்வஸ்ரார் விளையாட்டுக் கழகமும், ஞானமுருகன் விளையாட்டுக் கழகமும் வெற்றிபெற்றுக்கொண்டன.

கந்தரோடை ஸ்கந்தவரோயக் கலலூரி மைதானத்தில் இடம்பெறும் இப்போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் இரு ஆட்டங்கள் இடம்பெற்றன.

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கைச் சேர்ந்த சில்வஸ்ரார் அணிக்கும் பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த கம்பனஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் சில்வஸ்ரார் வி.கழக அணி 4 இற்கு 0 என்ற கோல் கணக்கில் யங்கமபன்ஸ் வி.க அணியை வெற்றி கொண்டது.

முதல் பாதி ஆட்டம் முடிவடையும் போது சில்வஸ்ரார், அணிவீரன் தீனரூபன் அடித்த ஒரு கோலுடன் முன்னணியில் நின்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் சில்வஸ்ரார் அணி வீரன் தீனரூபன் கொன்கெந்து அடித்த பந்து ஒன்று யங்கமபன்ஸ் கழக அணிவீரன் தடுத்த போதிலும்கூட அவரில் பட்டு இரண்டாவது கோல் பெறப்பட்டது.

மூன்றாவது கோலை சில்வஸ்ரார் அணி தனக்குக் கிடைத்த தண்டனை உதை மூலம் பெற்றுக்கொண்டது.

நான்காவது கோலையும் சில்வஸ்ரார் அணியைச் சேர்ந்த பிரசாந்தன் அடித்தார்.

இதேநேரம், யங்கம்பன்ஸ் கழக அணியினருக்குக் கோல்பெறும் வாய்ப்புகள் பல கிடைக்கப்பெற்ற போதிலும் அவ்கள் அதனைக் கோலாக்கத் தவறியமையும் சுட்டிக்காட்டக் கூடியதாகும்.


இரண்டாவது ஆட்டத்தில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த ஞானமுருகன் விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் லீக்கைச் சேர்ந்த பொற்பதி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டதில் ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் சமநிலை உடைப்பு உதைகள் மூலம் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டனர்.

ஆரம்ப முதல் இரு அணியினரும் மிகவும் விறுவிறுப்பாக விளையாடினார்கள். இரு அணிகளும் கோல் பெறும் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டனர். ஆட்டம் முடிவடையும் வரை இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறவில்லை.

இந்நிலைமையில், வெற்றி தோல்வியைத் தீமானிப்பதற்காகச் சமநிலை உடைப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் தனக்குக் கிடைத்த நான்கு உதைகளைக் கோலாக்கிக்கொண்டது. இதேநேரம், பொற்பதி விளையாட்டுக் கழகம் தமக்குக் கிடைத்த ஐந்து உதைகள்ல் மூன்று மட்டுமே கோலாக்க முடிந்தது. ஆட்டமுடிவில் ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் பொற்பதி விளையாட்டுக் கழகத்தை 4 இற்கு 3 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டு அடுத்த சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

(3-86)



சில்வஸ்ரார் வி.கவும் கம்பன்ஸ் வி.கவும் மோதும் காட்சி

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்18

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வேலணை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்மாவட்ட மேலதிக அரசஅதிபர் ஆ.சிவசுவாமி கலந்துகொள்வார்.

(8-204-202)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம்,மார்ச்18

யாழுபல்கலைக்கழக விளையாட்டு அவைக் கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்கு உடற்கல்வி அலகு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கடந்த ஆண்டுக்கான சகல உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு அவை இணைப்பாளர் கேட்டுள்ளார். (8-202)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம்,மார்ச்18

வண்ணார்பண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயத்தின் மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் இ.நாகராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக எரிக்கணேஷ் உரிமையாளர் வகணேசலிங்கம் கலந்துகொள்வார். (3-204)

✦ ✦ ✦

வலி.தெற்கு,மார்ச்18

வலிகாமம் கல்விவலய பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 21,22,23 ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

முதல் இரு நாள்களும் போட்டிகள் காலை 8.30 மணிக்கும் மூன்றாம் நாள் போட்டிகள் பிற்பகல் ஒரு மணிக்கும் ஆரம்பமாகவிருக்கின்றன.

(3-152-90)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம்,மார்ச்18

தீவகக கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட உடற்பயிற்சிப் போட்டிகள் எதிர்வரும் 21 ஆம் தி...நி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

கல்வி, அபிவிருத்திப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.ஏ.ஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக வேலணைக் கோட்ட கோட்டக் கல்விப்பணிப்பாளர் சோ.தில்லைநாதன் கலந்துகொள்வார். (3-202)

## தீவக வலயத்தில் நடந்த பெரு விளையாட்டுக்களின் முடிவு

யாழ்ப்பாணம்,மார்ச்18

தீவக வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடந்த பெரு விளையாட்டுக்கள் முடிவடைந்துள்ளன.

மெனபந்து, கரபந்தாட்டம், வலைபபந்தாட்டம், உதைபந்தாட்டம் ஆகிய பெருவிளையாட்டுக்கள் முடிவடைந்து முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

முடிவுகள் வருமாறு:

**மென்பந்து கிரிக்கெட்**

வேலணை சேர் வை.து.ம.ம.வி., நயினாதீவு ஸ்ரீ கணேசா வித்தி., புனித அந்தோனியார் கல்லூரி.

**கரபந்தாட்டம் - ஆண்கள்**

**15 வயதுப் பிரிவு**

புனித அந்தோனியார் கல்லூரி, காரைநகர் யாழ்ரன் கல்லூரி, வேலணை சேர்.வை.து.ம.ம.வி.,

**17 வயதுப் பிரிவு**

நயினாதீவு ஸ்ரீ கணேசா வித்தி., புனித அந்தோனியார் கல்லூரி, யாழ்ரன் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு**

நயினாதீவு ஸ்ரீ கணேசா வித்தி., புனித அந்தோனியார் கல்லூரி, வேலணை சேர்.வை.து.ம.ம.வித்தி.,

**வலைப்பந்தாட்டம்**

**15 வயதுப் பிரிவு**

கரம்பன் சிறிய புஸ்ப ம.வித்தி., நயினாதீவு ஸ்ரீ கணேசா வித்தி., வேலணை சேர்.வை.து.ம.ம.வித்தி.

**17 வயதுப் பிரிவு**

கரம்பன் சிறிய புஸ்ப ம.வித்தி., வேலணை சேர்.வை.து.ம.ம.வித்தி., யாழ்ரன் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு**

கரம்பன் சிறிய புஸ்ப ம.வித்தி., யாழ்ரன் கல்லூரி, வேலணை சேர்.வை.து.ம.ம.வித்தி.

**உதைபந்தாட்டம்**

**14வயதுப் பிரிவு**

புங்குடுதீவு மகா வித்தி., புனித அந்தோனியார் கல்லூரி, வேலணை சேர்.வை.து.ம.ம.வித்தி.

**16 வயதுப் பிரிவு**

நயினாதீவு ஸ்ரீ கணேசா வித்தி., புங்குடுதீவு மகா வித்தி., புனித அந்தோனியார் கல்லூரி.

**18 வயதுப் பிரிவு**

வேலணை சேர் வைதுமமவித்தி., புங்குடுதீவு மகா வித்தி., புனித அந்தோனியார் கல்லூரி. (3)

# சைவப்புலவர் கந்தசாமியின் சேவைநலன் பாராட்டு விழா

## ஞாயிறன்று வண்ணை நாவலர் பாடசாலையில் நடைபெறும்

யாழ்ப்பாணம்,மார்ச்18

சைவப்புலவர் வல்லிபுரம் கந்தசாமியின் பவளவிழாவும், சேவைநலன் பாராட்டுவிழாவும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 330 மணிமுதல் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

வண்ணை. சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய தர்மபரிபாலன சபையின் தலைவர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவினை சைவப்புலவர் கந்தசாமியின் 12 அமைப்புக்களைக் கொண்ட பாராட்டுவிழாச்சபை ஏற்பாடு செய்துள்ளது.

நிகழ்வில் முன்னதாக, பிற்பகல் 3.30 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறும். தொடர்ந்து மங்கள வாத்தியங்கள் சகிதம் பவளவிழா நாயகர் விழா நடைபெறும் நாவலர் மகா வித்தியாலய மண்டபத்துக்கு அழைத்துவரப் படுவார். ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், கரணவாய் ஆதீன முதல்வர் சிவஸ்ரீ கை.திருஞானசம்பந்தக் குருக்கள், சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ ஐ. மகேஸ்வரக்குருக்கள், சாந்தையர்மடம் கற்பக விநாயகர் ஆலயத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ கா. சதானந்தசர்மா ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

தொடர்ந்து பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் திருமதி நா.செல்வநாயகம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர். பின்னர் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் பவளவிழா மலரினை வெளியிட்டுவைத்து உரையாற்றுவார். நயப்புரையினைச் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் நிகழ்த்துவார்.

மாலை 6.10 மணியளவில் அறக்கொடை நிதியம் வழங்கும் நிகழ்வு இடம்பெறும். தொடர்ந்து பாராட்டுரைகளை வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், சைவசமய அபிவிருத்திக்கழகத் தலைவர் இ.விஜயரட்ணம், சிவனருட் செல்வர் இரா.செல்வவடிவேல், சைவப்புலவர் கந்தசத்தியதாசன் ஆகியோர் நிகழ்த்துவர். சிறப்புரையை பேராசிரியர் இ. குமாரவடிவேலும், மலராசிரியருரையை சைவப்புலவர் சு.செல்லத்துரையும் ஆற்றுவர். தொடர்ந்து விழாநாயகர் சைவப்புலவர் வ.கந்தசாமி உரை நிகழ்த்துவார். (எ)

## கசூரினா கடற்கரை மீண்டும் களை கட்டுகிறது

காரைநகர்,மார்ச்18

காரைநகர் கசூரினா கடற்கரைக்கு வரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளது.

கடந்த வருட இறுதிப்பகுதியில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தினால் உல்லாசப் பயணிகளின் வரவு வீழ்ச்சியடைந்து காணப்பட்ட கசூரினா கடற்கரைக்கு மீண்டும் உல்லாசப் பயணிகள் பெருமளவில் வருகைதரத் தொடங்கியுள்ளனர்.

வார இறுதி நாள்களில் பெருமளவில் வருகை தரும் உல்லாசப் பயணிகளில் சிலர் கசூரினாக் கடற்கரைப் பகுதியில் மதுபோதையில் அட்டகாசம் புரிவதுடன், குழுக்களாகப் பிரிந்து கைகலப்பில் ஈடுபடுவதாகவும் கூறப்படுகின்றது.

அத்துடன், கசூரினா கடற்கரைக்குச் செல்லும் சில வாகனங்களின் சாரதிகள் வீதிகளில் மதுபோதையில் வாகனங்களைச் செலுத்துகின்றனர் என்றும் -

இதனால் வீதி விபத்துகள் ஏற்படும் வாய்ப்பு இருப்பதாகவும் இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (எ-73)

# காரைநகரில் அடிக்கடி தடைப்படும் மின்சாரம்

காரைநகர்,மார்ச்18

காரைநகர்ப் பகுதியில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதனால், மின் பாவனையாளர்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

காரைநகரில் மின்சாரசபையின் அலுவலகம் இல்லாத காரணத்தினால் தாம் நீண்ட தூரம் சென்று சித்தன்கேணியிலுள்ள அலுவலகத்திலேயே இது விடயமாக முறைப்பாடு செய்யவேண்டியுள்ளதாகவும் -

இதனால், தடைப்படும் மின்சார விநியோகத்தை மீளப்பெறக் காலதாமதம் ஏற்படுவதாகவும் மின்பாவனையாளர் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - காரைநகரில் உள்ள பல கிராமங்களுக்கு இதுவரை மின் விநியோகம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் -

இதனால், மீளக்குடியமர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் - தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், மின் இணைப்பைப் பெற பணம் ஒதுக்கி பல மாதங்கள் கடந்த நிலையிலும் கருங்காலிப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கவில்லை என்றும் - இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (எ-73)

# பொன்னாலைச் சோதனைச் சாவடியில் மீண்டும் பயணிகள் மீது கெடுபிடி

காரைநகர்,மார்ச்18

பொன்னாலைச் சந்தியில் உள்ள கடற்படையினரின் சோதனைச் சாவடியூடாக காரைநகர் செல்லும் பொதுமக்கள் மீதான சோதனை நடவடிக்கைகள் கடந்த சில நாள்களாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

கடந்த பல மாதங்களாகத் தளர்வுற்றிருந்த கடற்படையினரின் சோதனை நடவடிக்கைகள் தற்போது அதிகரித்துள்ளதுடன் -

இந்தச் சோதனைச்சாவடி ஊடாகச் செல்லும் அனைத்துப் போக்குவரத்து வாகனங்களும் நிறுத்தப்பட்டு அரச உத்தியோகத்தர், பெண்கள், வயோதிபர்கள் என்ற வேறுபாடின்றி அனைவரும் வாகனங்களிலிருந்து இறக்கிவிடப்படுகின்றனர்.

பின்னர் அடையாள அட்டை, பயணப் பொதிகள் என்பன சோதனையிடப்பட்டு அவர்கள் தொடர்ந்து பயணிக்க அனுமதிக்கப்படுகின்றனர். (எ-73)

# தன்னலம் கருதா உதவி செய்வோம்

**தவக்காலச் சிந்தனை**

**முப்பத்தெட்டாம் நாள்**

எமது அன்றாட வாழ்வில் புலவித உதவிகளைப் பெறுகிறோம், அதனை நாமும் செய்கின்றோம். இவ்வுதவிகள் எந்த நேரத்தில் எந்த நோக்கத்தில் அமைகின்றன? சில உதவிகள் எமக்கு வேண்டியவர்கள், உறவினர் என்ற ரீதியல் மேற்கொள்ளப்படுகிறது. இன்னும் சில உதவிகள் பெயர், புகழ், தலைமைத்துவம் என்பவற்றை நிலைநிறுத்தும் நோக்கில் இடம்பெறுகிறது. பிரதியுபகாரத்தை எதிர்பார்த்து செய்யும் உதவிகளும் உள்ளன. உதவி செய்வதாகக் கூறி உபத்திரவம் கொடுப்பவர்களும் உண்டு. பிறரன்போடு செய்யும் சேவை உள்ளங்களும் இல்லாமலில்லை.

இவற்றுள் நாம் எந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள்? சுமையைக் குறைக்கும் சுமைதாங்கிகளா? கழுத்தை நெரிக்கும் நுகத்தடிகளா? மேலே செல்ல உதவும் ஏணியைத் தூக்கி எறிபவர்களா? சிந்திப்போம்.

வாழ்வின் சுமைகளாலும், இயற்கையின்சீற்றங்களாலும், அடக்குமுறை, வறுமை, போரின் தாக்கங்களாலும் நொந்துபோன பல்லாயிரம் மனித உள்ளங்கள் பல்வேறு உதவிகளை எதிர்பார்த்து எம் அயலிலும் சமூகத்திலும் வாழ்கிறார்கள். தமது உள்ளச் சுமைகளைப் பகிர்ந்து கொள்ளச் சந்தர்ப்பமின்றி மௌனித்துள்ளார்கள்.

அன்பின்றி, ஆறுதலின்றி, சமாதானமின்றி, ஆதரவின்றி கைவிடப்பட்ட நிலையில் வாழ்வோர் எம்மிடையே அனேகம் உளர்.

எனவே சீமானைப்போல, நல்ல சமாரியன் போல உதவ முன்வருவோம். எம்மை அன்பு செய்வோருக்கு மட்டுமன்றி பகைவருக்கும் முகவரி தெரியாதோருக்கும், புறவினத்தாருக்கும் பலனை எதிர்பாராது பணி புரிவோம். உறவுகளைப் பலப்படுத்துவோம் தகுந்த சன்மானத்தை இறைவன் எமக்கு அளிப்பார்.

-எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை.

# கல்விச்சாலைக் காட்சிகள்



வரணி, இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய பரிசில்நாள் நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், முன்னாள் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, கரவெட்டி கோட்டக் கல்வி அலுவலர் க.அம்பலவாணர் ஆகியோர் விழா மேடைக்கு அழைத்துச்செல்லப்படுவதைப படத்தில் காணலாம். *(படம்: தென்மராட்சிச் செய்தியாளர்)*



யாழ. சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள் விழாவில் கலந்துகொண்ட மாணவர்கள், பெற்றோர்கள், அதிபர் த.ஞானப்பிரகாசம், பிரதம அதிதியாக கலந்துகொண்ட குருநகர் புனித யாகப்பர் ஆலய உதவிப் பங்குத்தந்தை வண. பிதா யஸ்ரின் அடிகளார் மற்றும் ஆசிரியர்களைப் படத்தில் காணலாம். (படம்: குருநகர்ச் செய்தியாளர்)



யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரியின் உயர் வகுப்பு மாணவர்களின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அமெரிக்கப் பல்கலைக்கழக விரிவுரையாளர் பேனாட் பேற் உரையாற்றுவதையும் அருகில் கல்லூரி அதிபர் எஸ்.தனபாலன் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். *(படம்: கொழும்புத்துறைச் செய்தியாளர்)*



மீசாலை இந்து இளைஞர் சங்க அறநெறிப் பாடசாலையின் ஆண்டுவிழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட இந்து காலாசாரஉதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் மங்கள விளக்கேற்றுவதையும் அறநெறிப் பாடசாலை அதிபர் திருமதி ந.பொன்னம்பலம் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் நிற்பதையும்படத்தில் காணலாம். *(ஐ-208)*



ஆசிரிய சேவையில் 32 வருடங்களாக கடமையாற்றி கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலையில் இருந்து ஓய்வுபெற்றுச் சென்றுள்ளார் திருமதி ம.கதிர்காமநாதன். அந்தப் பாடசாலையில் நடைபெற்ற சேவைநலன் பாராட்டு விழாவில் ஓய்வுபெற்ற ஆசிரியை உரையாற்றுகிறார். பாடசாலையின் அதிபர், ஓர் ஆசிரியை ஆகியோர் மேடையில் காணப்படுகின்றனர். *(படம்: கோப்பாய்ச் செய்தியாளர்)*

## பணிநிலைக்கான வேண்டுகை

கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்கள் தன்வரலாறடங்கிய (சுயவிவரம்) வேண்டுகைகளை 28.03.2005 ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

**✪ பணிநிலைகள்:**

1) ஆளுகை அலுவலர்
2) எழுதுநர்
3) கணக்குப் பதிவாளர்
4) கணக்காய்வாளர்
5) கணனித் தரவுப் பதியுநர்
6) சிற்றூழியர்

**✪ கல்வித்தகைமைகள்:**

பணிநிலை: 01, 02 – க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

பணிநிலை: 03, 04 – க.பொ.த. (உ/த) தரத்தில் வர்த்தகப் பிரிவில் கணக்கியல் உட்பட 3 பாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

பணிநிலை:05- க.பொ.த. (சா/த) தேர்வில் தேறியிருத்தல் வேண்டும். அத்துடன் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிறுவனமொன்றில் கணனித் தேர்வில் தேறியிருத்தல் வேண்டும்.

பணிநிலை: 06- ஆண்டு 8 கல்வி கற்றிருப்பதுடன், பணிப்பட்டறிவும் இருத்தல் வேண்டும்.

**✪ வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி:**

பொறுப்பாளர்,
**மனிதவள மேம்பாட்டுப் பகுதி,**
**நாகதம்பிரான் வீதி,**
**கிளிநொச்சி.**

✪ நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள்: 02.04.2005 காலை 10.00மணி.

✪ நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம்:
**மனிதவள மேம்பாட்டுப் பகுதி,**
**நாகதம்பிரான் வீதி,**
**கிளிநொச்சி.**

குறிப்பு: 01. நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளிப்பவர்கள் கல்வித் தகைமைச் சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், ஏனைய சான்றிதழ்கள், அடையாள அட்டை ஆகியவற்றின் படிகளுடன் வருகை தருக.

02. பணிநிலை வேண்டுகையில் பணிநிலைகளைக் குறிப்பிட்டு அனுப்புக.

**ஆளுகை**
**மனிதவள மேம்பாட்டுப் பகுதி**

(1530)(39-14-42)


# ஐ.தே.கட்சி எம்.பிக்கு பிடியாணை பிறப்பிப்பு

கொழும்பு,மார்ச்18

வழக்கு ஒன்றில் சாட்சியான கண்டி மாவட்ட ஐ.தே.கட்சி எம்பியான கெஹலிய ரம்புக் வெல்ல சாட்சியமளிக்க நீதிமன்றுக்குச் சமுகம் தராததால் அவரைக் கைதுசெய்து மன்றில் ஆஜர் செய்யுமாறு கொழும்பு பிரதான மாஜிஸ்திரேட் எம்.இஸ்ஸதீன் உத்தரவிட்டுள்ளார்.

வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்ததில் மோசடி இடம்பெற்றது எனத் தெரிவித்து இருவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் பிரதிவாதி ஒருவருக்கு ரப்புக் வெல்ல எம்.பி. சாட்சியாவார்.

எனினும், வழக்கு விசாரணைகள் பலவற்றுக்கு அவர் ஆஜராகவில்லை. இது தொடர்பிலேயே அவருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

(க-3)

# பாலியல் நோய் பிரிவுக்கு வைத்திய நிபுணர் நியமனம்

யாழ்ப்பாணம்,மார்ச்18

யாழ்.போதனா வைத்தியசாலை பாலியல் நோய்த் தடுப்புச் சிகிச்சைப் பிரிவுக்கு பாலியல நோய்கள் சிகிச்சை நிபுணர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பிரிவு நீண்டகாலமாக நிபுணத்துவ வைத்தியர் ஒருவர் இல்லாத நிலையில் இயங்கி வந்தது. தற்போது இக்குறைபாடு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மத்திய பாலியல் நோய்கள் தடுப்புச் சிகிச்சைப் பிரிவில் வைதததிய நிபுணராகப் பணிபுரிந்த டாக்டர் திருமதி பிரியதர்சினி தயாபரன் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 14 ஆம் திகதி முதல் யாழ். போதனா வைத்தியசாலை பாலியல் நோய்கள் சிகச்சைப் பிரிவில் தனது பணியினைப் பொறுப்பேற்றுள்ளார்.

(3-15)


## விற்பனைக்கு

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அழுதாரி துணி வகைகள், கவுஸ் கோட் துணி வகைகள், அழுதாரி, புடைவை வகைகள், முகூர்த்தப் புடைவைகள், லேடீஸ் ஸ்கேட் அன் பிளவுஸ், கவுண்கள், பரிசுப் பொருள்கள், பான்சிப் பொருள்கள் என்பன விற்பனைக்குண்டு.

**பபு கொமினிக்கேஷன்**
30,வளாக வீதி, திருநெல்வேலி.
(42688) (39-14-42)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 31 |  | 18 |
| – | | – |
| 12 | | 03 |
| – | | – |
| 1929 | | 2004 |

## திருமதி மகேஸ்வரி காசிநாதர்

*சிரார்த்த திதி: பங்குனி மாத அபரபக்க திரயோதசி (6.4.2005)*

கெட்டித்தனமாய்ச் சுற்றம் நண்பரெனச் சுவையோடு உணவளித்து
அட்டிற் கலையில் துறை தோய்ந்த எம் குடும்ப விளக்கே!
மீட்டிப் பார்க்கின்றோம் கனிவான உங்கள் உபசரிப்பை
கிட்டியதோ ஓராண்டு நீங்கள் வானத்தவர்க்கு நல்விருந்தாகி?

தற்காலிக முகவரி:
மயிலணி, சுன்னாகம்.
*நிரந்தர முகவரி:*
*கொல்லங்கலட்டி,*
*தெல்லிப்பழை.*

உங்கள் ஆன்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
**அன்புக் கணவர், அருமைப் புதல்வர், மருமக்கள், பாசமிகு பேரப்பிள்ளைகள்.**

(43205)(42-14)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

| மலர்வு | | மறைவு |
|---|---|---|
| 23 |  | 22 |
| – | | – |
| 05 | | 03 |
| – | | – |
| 1940 | | 2002 |

## அமரர் கந்தையா இராசமணி

**திதி: 18.03.2005**

அன்பின் இலக்கணமாய்ப் பண்பின்
பிறப்பிடமாய் எம் குலத்தின்
அகல்விளக்காய் எம் நெஞ்சங்களில்
பாங்குடன் வீற்றிருக்கும் மணிவிளக்கே!
மூன்றாண்டுகள் விரைந்தோடிச் சென்றாலும்
முத்தான உன் எழில் முகத்தை நாம்
மறக்கத்தான் முடிந்திடுமா– அம்மா
மீண்டும் தான் எம்மிடம் நீ வாராயோ?

24/2, பாரதி வீதி,
கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்.

– **குடும்பத்தினர்.**

(43155)(39-14-42)





கோபம் வந்தால் என்ன பேசுகிறோம் என்று
நாம் நினைத்துப் பார்ப்பதில்லை.
வார்த்தைகள் கத்திபோல மனதைக் காயப்படுத்தும்
காயங்கள் ஆறாத புண்களாக மாறும்.

**நீங்கள் சிந்திக்க வேண்டிய தருணம் இதுவே!**
**வாழ்க்கை இனிமையாக வாழ்வதற்கே!**
**சித்திரவதைப் படுவதற்கு அல்ல!**

**உங்களால் மற்றொருவர் மனம்**
**சித்திரவதைப் பட்டுத் துன்பப்படுகிறதா என்பதை**
**யோசித்துப் பாருங்கள்.**
**வன்முறைகள் இல்லாத இல்லத்தை உருவாக்க**
**நீங்களும் உதவுங்கள்**

**இல்லத்து வன்முறைகளை**
**இல்லாதொழிக்க ஒன்றிணைவோம்.**

THOMPSON ASSOCIATES

எச்சரிக்கை: வார்த்தைகள் அபாயகரமானவை.
அவதானமாய்க் கையாளுங்கள்.

நாம் இணைந்து
பெண்கள் மீதான வன்முறைகளை ஒழிப்போம்

பெண்கள் மீதான
வன்முறைகளை இல்லாதொழிக்கும்
இலங்கைப் பிரசாரத்திட்டம்
த.பெ. 2006, கொழும்பு.

# கதாப்பிரசங்கம் செய்தே சைவம் வளர்த்தவர்

சைவமும் தமிழும் செழிப்புற்று விளங்க அதனைத் தமது கண்களெனப் போற்றிப் பணிபுரிந்தவர் நல்லைக்குருமணி அவர்கள். யாழ்ப்பாணத்தில் இன்று சைவப்பண்பாடு நிலவுவதற்கு மூலகாரணராயிருந்த ஸ்ரீலஸ்ரீ



ஆறுமுகநாவலர் பெருமான் அவதரித்த நல்லூரிலே தான் இவரும் தோன்றினார். உருவ ஒற்றுமையுடைய இவர்களிருவரும் சைவத்துக்கேத் தம்மை அர்ப்பணித்த பெருந்தகைகளாவர்.

**காகூஷாயம் பெற்றார்**

தமது இனிய குரலினாலே கதாப்பிரசங்கம் செய்து அனைவரையும் தம்பால் ஈர்த்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் சைவத்தின் வளர்ச்சிக்காகவே அயராது உழைத்தார். இவர் இந்தியா சென்று மதுரை ஆதீனத்தில் காகூஷாயம் பெற்றுத் துறவுபூண்டு ஈழம் திரும்பி நல்லூரிலேயே தமது சைவப்பணிக்கென ஓர் ஆதீனத்தை நிறுவினார்.

அதுதான் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம். சைவ சமயப் பணிகளை ஆற்றுவதற்குக் களம் அமைத்துக்கொண்ட சுவாமிகள், பல்வேறு வழிகளிலும் சைவம் வளர தம்மாலான மட்டும பாடுபட்டார். தேவாரப் பண்ணிசை வகுப்புகள், பாலர் வகுப்புகள், கோலம் போடுதல் வகுப்புகள், சங்கீத வகுப்புகள், வயலின் - மிருதங்க வகுப்புகள் முதலானவற்றை ஆரம்பித்து நடத்தி மாணவர்களிடையே நன்மதிப்பைப் பெற்றார். வெள்ளிக்கிழமைகளில் சமயதீட்சையை ஒழுங்குசெய்து மக்களை நல்வழிப் படுத்தினார்.

**சைவமணம் கமழச் செய்தார்**

புராண இதிகாசக் கதைகளை இரத்தினச் சுருக்கமாக எடுத்துக்கூறிக் கதாப்பிரசங்கம் செய்து அறிவொளியூட்டினார். 'அருளமுதம்' என்று ஒரு சஞ்சிகையை வெளியிட்டு சைவ மணம் கமழச்செய்தார். ஒவ்வொரு கோயில் திருவிழாக்களுக்கும் சென்று அங்கு வருகின்ற அடியார்களுக்குக் கதாப்பிரசங்கம் மூலம் அறிவு புகட்டிச் சைவத்தின் பெருமையை நிலைநாட்டினார்.

## இன்று 24ஆவது குருபூசைத் தினம்

**இவருக்கு நிகர் இவரே**

ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் ஈழத்தில் மட்டுமல்ல இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, கோலாலம்பூர் முதலிய இடங்களுக்கும் சென்று தமிழ்பரப்பி கதாப்பிரசங்கம் மூலம் சைவம் வளர்த்தார்.

இவருடைய கதாப்பிரசங்கம் கேட்பதற்காக அடியார் கூட்டம் அலை மோதும். எங்கு இவருடைய கதை நடந்தாலும் மக்கள் முண்டியடித்துக் கொண்டு முன்னுக்கு இடம்பிடிக்க விரைவர். கதை சொல்லும்போது சம்பவங்களை அப்படியே படம்பிடித்துக் காட்டுவது

## நல்லைக் குருமணி

போலச் சொல்லுவதில் இவருக்கு நிகர் இவரே.

மகாபாரதம், கம்பராமாயணம், திருவிளையாடற்புராணம், பெரியபுராணம், கந்தரனுபூதி, கந்தரலங்காரம் என்றெல்லாம் சுவாமிகள் மணிக்கணக்காகப் பேசிக் கொண்டேயிருப்பார். கேட்பவர்களும் ஆவலுடன் ரசித்துக் கேட்பர்.

**திருநீறு துலங்கச் செய்தவர்**

இப்பொழுது இவரைப் போலக் கதை சொலபவர்கள் இல்லையென்றே கூறலாம். நல்ல சாரீரம் படைத்த இவர், சங்கீத உருப்படிகளைப் பாடும்போது கேட்பதற்கு இனிமையாக இருக்கும். இன்றைய காலகட்டத்தில் நெற்றியில் திருநீறு துலங்க இளைஞர்கள் வலம் வருகிறார்கள் என்றால் அது சுவாமியின் தூண்டுதலின் வெளிப்பாடே.

வாழ்த்தவாயும் நினைக்கமட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்தது இறைவன் எதற்காகத் தம்மை வாழ்த்திப் பாடுவதற்கே யாகும். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனதை ஸ்தாபித்து மக்கள் சேவையே மகேசன் சேவையென கடமைசெய்த ஸ்ரீலஸ்ரீ சுவாமியின் இன்றைய குருபூசை நன்னாளில் நாம் ஒரு பிரதிக்ஞை எடுத்துக்கொள்வோம். அதாவது, சைவசமயக் கோட்பாடுகளையும் வேதாந்த உடபொருளையும் கருத்திற்கொண்டு சேவையாற்றுதல் வேண்டும். உண்மையான பக்தியின் மூலமே ஆன்ம ஈடேற்றம் பெறமுடியும் என்பதை உணர்ந்து மற்றவர்களுக்காக எமது தேவைகளைத் தியாகஞ்செய்து வாழத் தலைப் படவேண்டும்.

அவ்வாறு வாழ்ந்தால்தான் ஆத்மஈடேற்றம் கிடைக்கும். நல்லைக் குருமணியின் புத்திமதிகள் எமது வாழ்க்கைக்கு உயர்வைத் தரக் கூடியவை.

அவரது பிரசங்கம் உண்மையில் மக்களை நல்வழிப்படுத்தக் கூடியது. எனவே, இன்றைய குருபூஜை நாளில் நல்லைக் கந்தனின் பாதக் கமலங்களைப் பணிந்து, வழிபாடியற்றி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்தப் பரமாசார்ய சுவாமிகளின் உபதேசங்களை வாழ்விற் கடைப்பிடித்து நற்கதியடைய முயல்வோமாக. ☆

**இராசையா ஸ்ரீதரன்**

# யாழ்ப்பாண விவசாயிகளின் வெங்காயத்தை நேரடியாகப் பெற்றுச் சந்தைப்படுத்துங்கள்!

## கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்திடம் கோரிக்கை

வலிதென்மேற்கு,மார்ச்18

யாழ்.குடாநாட்டில் - குறிப்பாக வலி.தென் மேற்குப் பிரதேசத்தில் - விவசாயிகள் உற்பத்தி செய்யும் வெங்காயத்தைக் கொழும்பிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் (CWC) நேரடியாக வந்து கொள்வனவு செய்து கொழும்பிலும் தென்னிலங்கையிலும் சந்தைப் படுத்துவதற்கு முன்வரவேண்டும். இதன் மூலம் எமது பகுதி விவசாயிகள் வெங்காயச் செய்கையில் நஷ்டமடையாது நியாயமான விலையைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபைக்கூட்டம் அண்மையில் சங்கத்தலைவர் வி.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றபோது மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை ஊடாகக் கொழும்பிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்திடம் (ச.தோ.ச.) இந்தக் கோரிக்கையை அனுப்புவது என்று சங்க இயக்குநர் சபை தீர்மானித்துள்ளது.

கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் இந்தியாவிலிருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்து இங்கு விற்பனை செய்து வருகின்றது. உள்நாட்டில் யாழ்.மாவட்ட விவசாயிகள் வெங்காயம் அறுவடை செய்யும் காலத்தில் இறக்குமதியை நிறுத்தி, இங்கு உற்பத்தி செய்யும் வெங்காயத்தை இந்த நிறுவனம் கொள்வனவு செய்யுமானால் எமது விவசாயிகள் நன்மையடைவார்கள். அத்துடன், தனிப்பட்ட வியாபாரிகள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அறுவடைக் காலங்களில் குறைந்த விலைக்கு வெங்காயத்தைக் கொள்வனவு செய்து ஏனைய மாவட்டங்களுக்குக் கொண்டுசென்று விற்று அதிக லாபம் பெற்றுவருகின்றனர். உற்பத்திச் செலவுகள், கூலித்தொழிலாளர்களின் சம்பளங்கள் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் வெங்காயச் செய்கையில் நஷ்டமடையும்நிலை இங்கு ஏற்படுகின்றது. ஆகவே, கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் இப்பகுதி விவசாயிகளின் நலன்கருதி நேரடியாக வெங்காயத்தைக் கொள்வனவு செய்து சந்தைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு இத்தீர்மானத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்மாவட்ட கூட்டுறவுச் சபை ஊடாக இத்தீர்மானம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை அதனைச் சிபார்சு செய்து கொழும்பிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத் தலைவருக்கு அண்மையில் அனுப்பிவைத்துள்ளது. இதன் பிரதிகள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எஸ்.சிவநேசன், யாழ்.மாவட்ட அரச அதிபர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ஐ-135)

## பெரிய நீலாவணையில் இளைஞர் சுட்டுக்கொலை

பெரியநீலாவணை,மார்ச்18

மருதமுனை - பெரிய நீலாவணை வீதியில் பெண்ணொருவரோடு மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை 6.20 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பெற்றோல் நிலையத்திற்கு முன்னால் நடந்த இந்தச் சம்பவத்தில் தம்பிராசா ஜெயநாதன் (வயது 27) என்பவரே உயிரிழந்தார்.

இவரை மற்றொரு மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து வந்த இருவர் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். சுடப்பட்டவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவர் மரணமானார் எனக் கல்முனைப் பொலீஸார் தெரிவித்தனர்.

(எ-க)

# முருங்கைக்காயின் விலை கிலோ 400 ரூபாவாக உயர்வு

## என்றும் இருந்திராத விலையேற்றம்

வலி.தெற்கு,மார்ச்18

யாழ்ப்பாணக் குடாநாட்டில் முருங்கைக் காயின் விலை என்றுமில்லாதவாறு உயர்வடைந்துள்ளது. மருதனார்மடம் சந்தையில் ஒருகிலோ முருங்கைக்காய் நானூறு ரூபாவுக்கும் கூடுதலாக விற்பனையாகின்றது. வழமையாக நாற்பது ரூபா வரை விற்கக்கூடிய முருங்கைக்காய் இம்முறை மரங்களில் உற்பத்தி குறைவடைந்தமையால் நாநூறு ரூபாவுக்கும் மேல் அதிகரித்துள்ளது. இதன் விலை உயர்வு காரணமாக நோயாளிகள், பத்தியக்கறி சாப்பிடுவோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதேநேரத்தில் ஏனைய மரக்கறிகளின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளன. இஞ்சிக் கிழங்குகூட ஒருகிலோ 80 ரூபாவாக விற்பனையாகின்றது.

தம்புள்ள போன்ற தென் இலங்கை பகுதி சநதைகளிலிருந்து கொண்டுவரப்படும் மரக்கறிகளின் தொகை அதிகரித்து இருப்பதால் குடாநாட்டு மரக்கறிகளின் விலையும் வெகுவாகக் குறைவடைந்துள்ளது.

இதனால், பாவனையாளர்கள் நன்மையடைந்துள்ள போதிலும், குடாநாட்டு மரக்கறி உற்பத்தியாளர்களும், விவசாயிகளும் பாதிப்படைந்துள்ளனர். (ஐ-152)

## உயிர்த்தஞாயிறு வழிபாடு

கொழும்புத்துறை,மார்ச்18

கத்தோலிக்க மக்கள் அனுசரித்து வரும் தவக்காலத்தின் புனித வாரத்தின் ஆரம்ப வழிபாடான குருத்தோலை ஞாயிறு ஆராதனைகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை அனைத்துக் கத்தோலிக்க தேவாலயத்திலும் நடைபெறவுள்ளன.

இந்த விசேட வழிபாடுகளில் குருத்தோலைப்பவனி, திருப்பாடுகளின் வரலாற்று நற்செய்திகள் என்பன இடம்பெறும்.

பெரியவியாழன் வழிபாடுகளை 24 ஆம் திகதியும் பெரியவெள்ளி வழிபாடுகளை 25ஆம் திகதியும் கத்தோலிக்க மக்கள் நிறைவேற்றுவர். (ஐ-30)

# பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சேவை

**கிளிநொச்சி,மார்ச்18**

**இங்கிலாந்தைச் சேர்ந்த பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணர் பிலிப் ஜோன் கிளிநொச்சிக்கு வந்துள்ளார்.**

**கிளிநொச்சி வைத்தியசாலையில் இரு மாதங்கள் தங்கியிருக்கும் இவர், தீக்காயங்கள், எலும்பு முறிவுக்காயங்கள், பிளவுபட்ட அண்ணங்கள், யுத்தத்தால் ஏற்பட்ட காய வடுக்கள் ஆகியவற்றைப் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை மூலம் சீராக்கும் சிகிச்சைக்கு ஆள்களை இனம்காண்பர்.**

**இத்தகைய பாதிப்புக்குள்ளாவோரை இனங் காண்பதற்கான சிகிச்சை நாளை 19ஆம் திகதி கிளிநொச்சி வைத்தியசாலையில் இடம் பெறும்.**

**கிளிநொச்சி தவிர்ந்த ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் கிளிநொச்சி வைத்தியசாலைப் பொறுப்பாளரிடம் பதிவுசெய்து பயன்பெறலாம் எனத் தெரிவிக்கப் பட்டது. (ஐ-3)**

# கனேடிய எம்.பிக்கள் - புலிகள் கிளிநொச்சியில் சந்திப்பு

கொழும்பு, மார்ச்18

கொழும்புக்கு விஜயம் மேற்கொண்டுள்ள கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு, புலிகள் தொடர்பாகத் தமக்கிருந்த சந்தேகத்தை அவர்களிடமே கேட்டுப்போக்கியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் கனேடிய எம்.பிக்கள் குழுவினர் புலிகளின் முக்கிய உறுப்பினர்களைக் கிளிநொச்சியில் திட்டமிடல் செயலகத்தில் சந்தித்தனர்.

சிறுவர்களைப் படையில் சேர்த்தல், மிதிவெடி புதைத்தல், சமாதானச் செயற்பாட்டின் தற்போதையநிலை போன்றவற்றில் தமக்கிருந்த விளக்கங்களைப் பெற்று தமது சந்தேகங்களை அவர்கள் போக்கிக்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

"இலங்கை அரசு திணித்த போரில், சிறுவர்கள் பெரிதும் பாதிப்புற்றனர். பாதிக்கப்பட்டவர்களை நாம் பராமரித்து வருகிறோம்.

"எம்முடன் சேரவரும் சிறுவர்களை நாம் அவர்களின் குடும்பத்துடன் மீளச் சேர்த்து விடுகிறோம். உங்களுக்குத் தவறுதலான தகவல் சிறுவர்கள் பற்றித் தரப்பட்டுள்ளது.

"சிறுவர்கள் பற்றி எம்மீது விமர்சிப்பவர்களிடம் அச்சிறுவர்களைப் பராமரிப்பதற்கான ஒழுங்கான - மாற்று - திட்டம் ஒன்று இல்லை. ஆனால், நாம் சிறுவர்கள் தொடர்பில் காத்திரமான செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகின்றோம்" - என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

புலிகளின் சார்பில் அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், சிரேஷ்ட உறுப்பினர் பாலகுமரன், 'சிரான்' அமைப்பின் பணிப்பாளர் இரேனியஸ் செல்வன் ஆகியோர் பங்குகொண்டனர். (எ-க-13)

# நிறுத்தல், அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடுமாறு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,மார்ச்18

நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரை இடாத வணிக நிலையங்கள் மீது நிறுவைகள், அளவைகள் திணைக்களத்தின் பரிசோதகர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் பரவலாகப் பல்வேறு இடங்களில், பரிசோதகர்கள் மேற்கொண்ட நடவடிக்கையின்போது முத்திரை இடப்படாத நிறுத்தல், அளவை உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றை வைத்திருந்த உரிமையாளர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் நிறுத்தல், அளவைகள் குறித்து மக்கள் அரச அதிபருக்கு முறைப்பாடுகள் செய்திருந்தனர். இதனையடுத்து நிறுவைகள், அளவைகள் திணைக்களத்தின் பணிப்பாளரின் பணிப்பின் பேரில் பரிசோதகர் குழுவால் திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரை இடாதவர்கள் உடனடியாகத் தமது உபகரணங்களுக்கு முத்திரை இடுத்கொள்ளுமாறும், அவ்வாறு செயற்படாத பட்சத்தில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும், இதனால் உபகரணங்களுக்குரிய முத்திரைகளை இட்டு அசெளகரியங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் அரச அதிபர் கேட்டுள்ளார்.

இதேவேளை -

நிறுத்தல் அளவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பிரதி புதன்கிழமை தோறும் யாழ். செயலகத்தில் உபகரணங்களுக்கு முத்திரை இடும் பணிகள் நடைபெற்று வருகின்றன. (ஐ-204-202)

An Indian Leading Enterprise in Computer & Electronics has
Introduced their marvellous Technology in Jaffna along with their team



Woofers
1500/-
முதல்

முழு டிஸ்
அன்டெனா செட்
12999/- முதல்

பிரத்தியேகமாக இறக்குமதி
செய்யப்பட்ட யப்பான்
டெலிவிசன்கள் மற்றும்
ஓடியோ வீடியோ சாதனங்கள்
டிஸ் எல்என்பி மற்றும் ரிசீவர்

* All with 3 years immediate
Replacement warranty

எலக்ட்ரோணிக் மற்றும் கம்பியூட்டர்
பொருட்கள் யாவும் கொழும்பை
ஒத்த விலைக்கே

Institutions, Schools
& Dealers க்கு விசேட
சலுகைகள் உண்டு

Our New introduction Specia Stellite
Channel interfaces with Computer

தரம் தாராதரம் மற்றும் நிரந்தரம் எமது தாரக மந்திரம்

CeSCO

56/15, Stanly Road,
Jaffna.
(Behind Bank of Ceylon)

# அரச சேவை நிர்வாகப் பிரச்சினைகளை விசாரித்துத் தீர்க்கப் புலனாய்வுப் பணியகம்

கொழும்பு, மார்ச் 18

அரச சேவையில் நிலவும் நிர்வாகப் பிரச்சினைகள் மற்றும் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைகளை நடத்தி அவற்றுக்கான தீர்வுகளை வழங்குவதற்காக அரச முகாமைத்துவப் புலனாய்வுப் பணியகமொன்றைப் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு ஆரம்பித்துள்ளது.

நேற்றுமுன்தினம் பொது நிர்வாக அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் மேற்படி தகவலை வெளியிட்டார் அமைச்சர் அமரசிறி தொடங்கொட. இதன் மூலம் அரச ஊழியர்கள் பெரும் நன்மைகளை அடைவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது:-

அரச முகாமைத்துவப் புலனாய்வுப் பணியகம் பொது நிர்வாக அமைச்சுச் செயலாளரின் தலைமையின் கீழ் இயங்கும் அரச சேவையாளர்கள் தாங்கள் எதிர்நோக்கும் நிர்வாகப் பிரச்சினைகள் மற்றும் சேவையுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறித்து இந்தப் பணியகத்தில் முறையிடமுடியும். அவ்வாறான முறைப்பாடுகள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு உரிய தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படும்.

பிரதேச செயலாளர் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிவர்த்திசெய்வது குறித்தும் ஆராயப்பட்டு வருகிறது. நாடளாவிய ரீதியில் கிராம சேவையாளர் பதவிக்கு ஆயிரத்து 300 வெற்றிடங்கள் இருக்கின்றன. மிகவிரைவில் அந்த வெற்றிடங்களும் நிரப்பப்படும்.

- இவ்வாறு அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (க-8)

## திருக்கோயில் பகுதியில் மக்கள் ஆர்ப்பாட்டம்

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட திருக்கோயில் 4ஆம் கொலணி காயததிரி கிராம மக்களுக்கு அரசினால் வழங்கப்படும் நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்கத் தவறினார் என்று கூறிக் கிராம சேவகருக்கு எதிராக இக்கிராம மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தினர்.

ஆழிப்பேரலைக்கு முன் ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணமும் இக்கிராம மக்களுக்குக் கிடைக்கவில்லை. தொடர்ச்சியாக ஏற்பட்ட ஆழிப்பேரலையினால் இக்கிராம மக்களின் மீனபிடிப் படகுகளும் வலைகளும் வயல் மறறும் விவசாயக் காணிகளும் பெருமளவில் பாதிக்கப்பட்டு மீண்டும் தொழில் செய்யமுடியாத நிலையில் இருக்கின்றன.

திருக்கோயில் பிரதேச சபைச் செயலாளர் தவராசா இவ்விடயம் தொடர்பாக விசாரணை நடத்த ஆவண செய்யப்படும் என உறுதியளித்ததைத் தொடர்ந்து அந்த ஆர்ப்பாட்டம் கைவிடபட்டது. (க-8)

## வாழும் கலைப் பயிற்சி

யாழ்ப்பாணம்,மார்ச்18

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் ஏற்பாடடில் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜீயின் வாழும் கலைப்பயிற்சி நாளை சனிக்கிழமை தொடக்கம் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 5 தினங்களுக்கு முதல் வகுப்பும் எதிர்வரும் 24ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்து 5 தினங்களுக்கு இரண்டாவது வகுப்பும் நடத்தப்படவுள்ளது.

இவ்வகுப்புகள் யாவும் ஆனைப்பந்தியிலுள்ள ஒன்றியத்தின் தலைமைச் செயலகத்தில் நடைபெறும். (ஐ-202)

## நல்லைக்குருமணியின் குருபூசை விழா இன்று

யாழ்ப்பாணம்,மார்ச்18

நல்லைக் குருமணியின் 24 ஆவது ஆண்டு குருபூசை ஆராதனை விழா இன்று வெள்ளிக்கிழமை நல்லூரில் உள்ள குருமூர்த்தி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதலாவது குருமுதல்வர் நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளின் இக்குருபூசை விழாவில் முற்பகல் 10 மணிக்கு யாக பூசையும் 11 மணிக்கு சங்காபிஷேகமும் நண்பகல் 12 மணிக்குத் திருமுறை அர்ச்சனையும் கோ பூசையும் இடம்பெறும். பிற்பகல் 12.30 மணிக்கு மாகேசுவர பூசையும் ஆதீன சிவாசார்யர்களால் நடத்தப்படும்.

மாலை நிகழ்வுகளாக பிற்பகல் 4 மணிக்குப் பாட்டுக் கச்சேரியும் தொடர்ந்து பண்ணிசைக் கச்சேரி, இசைக்கச்சேரி என்பனவும் இடம் பெறும். (ஐ-202)

## விதவைகளுக்கு தையல் இயந்திரங்கள்

அரியாலை,மார்ச்18

யாழ். செயலகப் புனர்வாழ்வுப் பகுதியினருக்குத் தென்பகுதியிலிருந்து எடுத்துவரப்பட்ட 600 தையல் இயந்திரங்கள், விதவைளுக்கு வழங்கப்பட்டு வருவதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் விதவைகளுக்கே இந்தத் தையல் இயந்திரங்கள் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (8-17)

## கருத்தரங்கும் செயல்முறைக் கல்வியும்

யாழ்ப்பாணம்,மார்ச்18

'யுசிமாஸ்' கல்வி நிறுவன யாழ். கிளையின் ஏற்பாட்டில் 'யுசிமாஸ்' மனக்கணிதம் பற்றிய கருத்தரங்கும் செயல்முறைக் கல்வியும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குநெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. (8-202)


**தேவை**

உரும்பிராயிலுள்ள கணனி மையம் ஒன்றிற்கு MS Office, DTP தெரிந்தவர்கள் தேவை. பழக விரும்புவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுதிகதி: 20.03.2005

விளம்பர இல. 2529,
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம். (34195) (39-14-15-24)

**31ஆம் நாள் நினைவஞ்சலி**



தோற்றம் 17 - 07 - 1949

மறைவு 16 - 02 - 2005

**க.சிதம்பரநாதன்**

மாதம் ஒன்று அவசரமாய் கடந்தாலும்
மாண்டியிட்டீர் என்று சொல்ல மனசு மறுக்குதையா
யோசிக்க யோசிக்க நிமிசம் கடந்தாலும் - உம்
சிரித்த முகத்தோற்றம் எம் நெஞ்சகத்தைக் கடக்காது.

மனைவி: சரஸ்வதி, மகள்: சிவாஜினி
மகன்மார்: சிவராஜன் (லண்டன்), சிவகணேஸ் (லண்டன்), மருமகன்: சந்திரலிங்கம,
மருமகள்: ரிசானா, பேர்த்தி, பேரன்: கார்த்திகா, டஸ்சன் (லண்டன்).

குடவத்தை,
துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.
(43224) (24-14-15)

**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**



அன்புடையீர்!
கடந்த 16.02.2005 இல் இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர்.

அமரர்

**சங்கரப்பிள்ளை தவராசா**

[ரக்சி சாரதி சாமியார்]

அவர்களின் அந்தியேட்டிக்கிரியை, ஆத்மசாந்திப்பிரார்த் தனை ஆகியன இன்று (18.03.2005) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. ஆகவே, இந்த நிகழ்வுகளில் கலந்து அமரரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திப்பதோடு, மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

வழக்கம்பரை அம்மன் கோயிலடி,
சுழிபுரம். (43210) (24-14-15)

மகன்மார், மகள்மார்.

**5ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 22 - 10 - 1932

மறைவு 13 - 03 - 2000

**திருமதி மனோன்மணி ஒப்பிலாமணி**

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே – அம்மா!
நீங்கள் எங்களைப் பிரிந்து ஐந்தாண்டுகள் சென்றாலும்
உங்கள் பிரிவாலே வாடுகிறோம் – இன்று
தங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

'விஜய வாசம்',
உசன், மிருசுவில். (43203) (24-14-15)

**அருள்மிகு அண்ணமார் மகேஸ்வரர் ஆலய கட்டட வளர்ச்சி நிதிக்காக**

**மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி**

காலம்: 20.03.2005 ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.00 மணி

இடம்: நீர்வேலி சவாரித்திடல்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

பிரவேசம்: 10/=

கலை ஒளி வீதி,
சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி. (43156) (39-14-15-24)

– ஆலய பரிபாலன சபை.

**கண்ணீர் அஞ்சலி**

திரு.கு.பாலகிருஸ்ணன (புனர்வாழ்வு அமைச்சு, திருகோணமலை) அவர்களின் அன்பு மாமியாரும் திருமதி உமாராணி பாலகிருஸ்ணன (புனர்வாழ்வு அபிவிருத்தி அமைச்சு, வன்னி) அவர்களின் அன்புத் தாயாரும், சிறந்த பண்பாளரும், மிகுந்த இறைபக்தி கொண்டவரும், இறை தொண்டில் மிகுந்த ஈடுபாடுடையவருமான


**திருமதி கனகம்மா கதிரேசு**

அவர்களது மறைவிற்காகக் கண்ணீர் அஞ்சலி செலுத்துகின்றோம். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கேற்பதுடன், ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

இல. 32/4, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (43191) (39-14-15-24)

சபா விநாயகமூர்த்தி
குடும்பத்தினர்.

**ஈராண்டு நினைவஞ்சலி**



தோற்றம்
1941.04.12

மறைவு
2003.03.18

அமரர்

**செல்லப்பா தங்கராசா**

திதி: அபரபக்க பிரதமை
26.03.2005

ஆண்டுகள் இரண்டு மறைந்தாலும் ஆறவில்லை எம்மிதயம்
ஈண்டு உங்களை நினைத்தே இப்பூவுலகில் வாழ்கின்றோம்.

தும்பளை வீதி,
பருத்தித்துறை. (43102) (39-14-15-24)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

**மரண அறிவித்தல்**

**வெ.கேதாரநாதன்**

M.B.B.S. (Cey.), L.R.C.P. (Lond), F.R.A.C.S.,
F.R.C.S. (Eng.), M.R.C.S. (Eng.)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் Melbourne, Australiaவை வசிப்பிடமாகவும் கொண்ட Royal Melbourne வைத்தியசாலையில் உதவி மார்பு, இருதய சத்திரசிகிச்சை நிபுணராகக் கடமைபுரிந்த வெ. கேதாரநாதன் 03.03.2005இல் Melbourneஇல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அ.வெற்றிவேற்பிள்ளை (தலைமை ஆசிரியர், HBE) - திருமதி R.வெற்றிவேற்பிள்ளை (தலைமை ஆசிரியை, இராமநாதன் கல்லூரி, ஆரம்பப் பிரிவு) தம்பதிகளின் அன்பு மகனும் வெ.ஏகாம்பரநாதனின் (உடுவில் மகளிர் கல்லூரி) அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Melbourne இல் நடைபெற்றன.

2ஆம் ஒழுங்கை,
மருதனார்மடம்,
சுன்னாகம். (43214) (24-14-15)

தகவல்:
வெ.ஏகாம்பரநாதன்
(சகோதரன்).

### பாரிய பொறுமையைக் கடைப்பிடித்துவிட்டோம்

# மீண்டும் போர் திணிக்கப்படுமானால் அதனை எதிர்கொள்வது புலிகளின் வரலாற்றுக்கடமை

### மட்டு.-அம்பாறை அரசியற்றுறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

காரைதீவு, மார்ச் 18

சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படவேண்டுமென்பதால் கடந்த 3ஆண்டு



காலமாக விடுதலைப் புலிகள் பாரிய பொறுமையைக் கடைப் பிடித்து வந்துள்ளனர். ஆனால், அதற்கு மாறாக மீண்டும் ஒரு போர் திணிக்கப்படுமானால் அதனை எதிர் கொள்ள வேண்டியது விடுதலைப் புலிகளின் வரலாற்றுக் கடமை.

- இவ்வாறு கொக்கட்டிச்சோலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற உள்ளூர் ஊடகவிய லாளர் சந்திப்பிஃபோது விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் இளந்திரையன் (மார்ஷல்) குறிப் பிட்டார்.

அந்தச் செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

படையினரின் நெருக்கடிகளை, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எதிர்நோக்கி வந்த நாம், தற்போது புதியதொரு வீண்பழியை எதிா நோக்க வேண்டியுள்ளது.

அண்மைக்காலமாகத் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் இனவிரிசலை ஏற்படுத்த சில தீய சக்திகளும் பேரினவாதிகளும் முயற்சி மேற் கொண்டு வருகிறார்கள். ஓட்டமாவடி முஸ்லிம் இளைஞர் கொலை தொடர்பாக எம்மைச் சாடிவருகின்றனர். உண்மையில் அந்தச் சம் பவத்திற்கும் எமக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. இதனைத் திட்டமிட்டுப் பேரினவாதி களே மேற்கொண்டுள்ளார்கள் என்பதைச் சகோதர முஸ்லிம் புத்திஜீவிகள் புரிந்து கொள்ளவேண்டும்.

மலர்ந்துவரும் தமிழ் - முஸ்லிம் இன உற வைக் காணச் சகிக்காத பேரினவாதிகள், இப்படியாக அப்பாவி முஸ்லிம் மக்கள் மீது தாக்குதலை நடத்திவிட்டு எம்மீது பழியைப் போட்டுவிடுகிறார்கள்.

உண்மைநிலையைச் சகோதர முஸ்லிம் களுக்குத் தெரியப்படுத்த விரைவாக ஓட்டமாவடி முஸ்லிம் தலைவர்களைச் சந்தித்துப் பேச விருக்கின்றோம்.

அவ்வேளை -

இக்கொலையின் பின்னணி யார் என்பதை ஆதாரபூர்வமாகத் தெரிவிப்போம். அப்போது யார் இந்தக் கொலையின் சூத்திரதாரி என் பதை ஓட்டமாவடி முஸ்லிம்கள் புரிந்துகொள்வார் கள்.

பொலன்னறுவை செவனப்பிட்டியவில் நடை பெற்ற கொலைக்கும் அவர்களே சூத்திரதாரி கள். விறகுவெட்டச் சென்ற இளைஞர்களின் கொலை முயற்சியும் இதற்குள் அடங்குகின் றது. அப்போதும் எம்மைக் குற்றஞ்சாட்டினார் கள். இறுதியில் அந்த முஸ்லிம்கள் வீடுவந்து சேர்ந்துவிட்டனர்.

எனவே, வீண் வதந்திகளுக்கு முஸ்லிம் கள் இரையாகக்கூடாது. எமது தேசியத் தலைவரின் போராட்டம் சர்வதேச அங்கீகாரம் பெற்றது. அதனைச் சீர்குலைக்க எவருக்கும் இடமளிக்கப்படமாட்டாது. - என்றார். (எ-84)

## காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்துக்கு நேரடி பஸ் சேவை

காரைநகர்,மார்ச்18

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்திற்கான நேரடி பஸ்சேவையை வடபிராந்திய போக்கு வரத்துச் சபையின் காரைநகர் சாலை நேற்று முன்தினம் புதன்கிழமை தொடக்கம் ஆரம்பித் துள்ளது.

ஈழத்துச் சிதம்பரத்தில் பெருந்திருவிழா நடைபெற்று, வருவதால் குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும் வருகைதரும் அடியார் களின் வசதிகருதி யாழ்.மத்திய பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து ஆலயம் வரை இந்த விசேட பஸ்சேவை நடத்தப்பட்டு வருகின் றது.

நீண்ட காலமாக நடைபெற்றுவந்த இந்த ஆலயத்திற்கான நேரடி பஸ்சேவை கடந்த சில மாதங்களாக இடைநிறுத்தி வைக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-73)

# பண்டா பரம்பரை இல்லம் உல்லாச விடுதியாகின்றது!

கொழும்பு,மார்ச்18

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பூர் வீக இல்லம் உல்லாச விடுதியாக மாறுகிறது. அவரது அக்கா சுனேத்திராவால் அந்த வீட் டில் தனித்து வாழமுடியாத காரணத்தால் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

ஜனாதிபதியும் அவரது சகோதரர் அமைச சர் அநுரா பண்டாரநாயக்கவும்கூட தமது பரம் பரை வீட்டை உல்லாச விடுதியாக்க இணங் கியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

பண்டாரநாயக்க குடும்பத்தின் பரம்பரைக் குச் சொந்தமாகக் கொழும்பு றொஸ்மிட் பிளேஸில் உள்ள பாரிய வீடு 1929ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

லூசன் சில்வா என்பவரால் கட்டப்பட்ட இந்த வீட்டை ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவின் பாட்டனார் சொலமன் டயஸ் பண் டாரநாயக்க 1940 ஆம் ஆண்டு வாங்கினார். 101 பேர்ச் நிலப்பரப்பைக் கொண்ட இந்த வீடு அப்போது ஆக ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபாவுக்கே கொள்வனவு செய்யப்பட்டது.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க பிர தமராகப் பதவி வகித்தபோது இந்த வீட்டில் வைத்தே சுட்டுக்கொல்லப்பட்டார் என்பது குறிப் பிடத்தக்கது.

மிகவும் விசாலமான இந்த வீடு, இப்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அநுரா பண்டாரநாயக்க, சுனேத்திரா பண்டாரநாயக்க ஆகிய மூவருக்கும் உரித்துடையது.

மிகவும் கலை நுட்பத்துடன் வடிவமைக் கப்பட்ட இந்த வீடு பிரித்தானியக் கட்டடக் கலைஞர்களால் வடிவமைக்கப்பட்டது.

உல்லாச விடுதியாக்கப்படும் இந்த வீட்டில் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு விஜ யம் செய்யும் அதிமுக்கிய நபர்களும் அரசி யல் தலைவர்களும் மட்டுமே தங்க அனுமதிக் கப்படுவர்.

பிரிட்டிஷ், பிரான்ஸ் போன்ற மேற்கத்தேய நாடுகளை ஆட்சி செய்தவர்களின் மாளிகை கள் இதுபோன்ற உல்லாச விடுதியாக்கப்பட் டுள்ளன. அதனால், அவை பேணிப்பாதுகாக் கப்படுகின்றன. எனவே, இலங்கையில் வர லாற்று முக்கியத்தும் வாய்ந்த இந்த வீட்டை யும் பேணிப்பாதுகாப்பதற்கு இதைத்தவிர வேறு வழியில்லை எனச் சுனேத்திரா பண் டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தப் பெரிய வீட்டில் தான் மட்டும் தனித்து வாழமுடியாத நிலையில் இருக்கிறார் எனத் தெரிவித்துள்ள அவர், தனிமையாக இருக் கும் சமயத்தில் கடந்தகால நினைவுகள் கண்முன்னே தோன்றுவதால் மனோரீதியான தாக்கமும் தமக்கு ஏற்படுகிறது எனவும் தெரி வித்துள்ளாராம்.

இம்மாத முடிவில் இந்த வீடு புதிய மெரு குடன் உல்லா விடுதியாகத் திறந்துவைக்கப் படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-க)



வட்டுக்கோட்டை கிராமிய வைத்தியசாலை வைத்திய அதிகாரி விடுதி திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வடக்கு - கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.குமரவேற்பிள்ளை விடுதியைத் திறந்துவைப்பதையும் அருகில் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் பொருளாளர் க.சுந்தரலிங்கம், உறுப்பினர் எஸ்.செல்வரெத்தினம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: வட்டுக்கோட்டைச் செய்தியாளர்)

# உதவிக் கல்விப் பணிப்பாளர்களின் நிரந்தர நியமனத்துக்கு நடவடிக்கை

### கல்வியமைச்சின் மேலதிக செயலர் தகவல்

அம்பாறை,மார்ச்18

நாடுமுழுவதும் 424 கடமைநிறைவேற்று உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் சேவை யிலுள்ளனர். இவர்களில் மூன்று வருடகால சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்து உரிய தகைமைகளுடடை உள்ளோர் இலங்கைக் கல்வி நிர்வாக சேவையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

- இவ்வாறு அம்பாறையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் உடுவை எஸ்.தில்லைநடராசா தெரிவித்தார்.

சுனாமியின் பின்புள்ள கல்வி நிலைபற்றி ஆராய்வதற்கான அம்பாறை மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கான கூட்டமொன்று அம்பாறை வலயக் கல்விப் பணிமனையில் நடைபெற்றது.

கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் உடுவை எஸ்.தில்லைநடராஜா, மேலதிக செய லாளர் ஏ.எஸ்.குணரத்ன ஆகியோர் இந்தக் கூட்டத்துக்குக் கொழும்பிலிருந்து விசேடமாக வருகை தந்திருந்தனர்.

இக்கலந்துரையாடல் பிற்பகல்2 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5 மணிவரை நடைபெற் றது. ஆசிரியர் பற்றாக்குறை முதல் காணிப் பற்றாக்குறை வரையிலான வேறு விடயங்கள் இதில் ஆராயப்பட்டன.

சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ.தௌபீக், கடமைநிறைவேற்று உதவிக் கல்விப் பணிப்பாளர்களின் எதிர்காலம் பற்றிக் கேள்வியெழுப்பியபோதே கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் தில்லைநடராசா இவ் வாறு பதிலளித்தார்.

இந்த நியமனம் ஒரு நேர்முகப் பரீட்சை யினூடாகவே வழங்கப்படும். பொதுச் சேவை ஆணைக்குழுவின் அனுமதியை எதிர்பார்த்துக் கடிதம் எழுதப்பட்டுள்ளது. பெரும்பாலும் சாத கமான பதில் கிடைக்கும் - என்றார்.

கடமை நிறைவேற்று அதிபர்களின் நிரந் தர நியமன விவகாரம் தொடர்பாகக் கருத் துத் தெரிவித்த கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் -

பாடசாலையின் தரம், அதிபரின் தரம் என பவற்றைப் பொறுத்து இந்த நிரந்தர நியமனம் மேற்கொள்ளப்படும். இலங்கை அதிபர் சேவைக குள் இவர்கள் உள்ளீர்க்கப்படவுள்ளனர் - என்று தெரிவித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை மீளப் புதிய இடத்தில் அமைப்பது தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளர்கள் எதிர்நோக் கும் பிரச்சினைகள் பற்றியும் இந்தக் கூட்டத் தில் விரிவாக ஆராயப்பட்டது. (எ-84)

# சுனாமி பாதித்தவர்களின் உளநலனை மேம்படுத்த விரைவில் வீடியோ இறுவட்டு

### யாழ். பல்கலை. மாணவர் வெளியிடுவர்

யாழ்ப்பாணம்,மார்ச்.18

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக் களின் பாதிப்புக்களை உளவழிப்படுத்து முக மாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் வீடியோ இறுவட்டு ஒன்றினை வெளியிடவுள்ளனர்.

ஆழிப்பேரலையால் அழிந்து, சிதைந்து போயுள்ள மக்களின் உளரீதியான தாக்கத் தைக் களையும் பொருட்டுத் தயாரிக்கப்பட்ட பாடல்களையும் அதற்கான காட்சிகளையும் இணைதது்த் தயாரிக்கப்படவுள்ள இந்த வீடியோ இறுவட்டினை அடுத்தமாத முற்பகுதியில் நாடளாவிய ரீதியில் வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஈழத்தின் பிரபல கவிஞர்களின் எண்ணத் தில உருவான மனத்தாக்கத்தை நீக்கும் பாடல்களுடனும் மற்றும் பிரபல நாட்டியக் கலைஞர்களின் நடனங்களுடனும் இந்த இறுவட்டு வெளிவரவுள்ளது.

இதற்கான முன்னேற்பாடுகள் தயாரான நிலையிலுள்ளன என்றும் -

பாடல்களுக்கேற்ற காட்சிகள் சுனாமி பாதித்த இடங்களில் வைத்து வீடியோப் பட மாக்கப்பட்டு வருவதாகவும் இறுவட்டு வெளி யீட்டுத் தயாரிப்பாளர் ஜெ.ஜெயராஜ் தெரிவித் தார். (எ-13)

# சுவாமி தந்திரதேவா ஞாயிறன்று அம்பாறைக்கு விஜயம் செய்வார்

காரைதீவு,மார்ச்18

இலங்கை இந்துசமய அபிவிருத்திச் சங் கத் தலைவர் சுவாமி தந்திரதேவா மஹராஜ் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை அம் பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்யவுள் ளார்.

அன்று காலை வீரமுனை திருஞானசம்பந் தர் அறநெறிப் பாடசாலையில் நடைபெறும் அறநெறி விழாவில் கலந்துகொள்வதுடன், வீரமுனை சீபாததேவி சிறுவர் இல்லத்திற்குக் கணனியொன்றையும் சுவாமி தந்திரதேவா அன்பளிப்புச் செய்வார்.

நண்பகல் 12மணிக்கு அக்கரைப்பற்று அம்மன் மகளிர் இல்லத்திற்கு விஜயம் செய் யும் அவர், குளிர்சாதனப்பெட்டி ஒன்றை அதற்கு அன்பளிப்புச் செய்வதுடன் உடுபுடைவை களையும் வழங்குவார்.

பிற்பகல் 3 மணியளவில் கோமாரி, மணற் சேனையில் பாலர் பாடசாலையொன்றுக்கும், தங்க வேலாயுதபுரத்தில் அறநெறிப் பாட சாலையொன்றுக்கும் இவர் அடிக்கல் நடுவார். அப்பாடசாலையை நிர்மாணிக்க சுவாமி பூரண உதவியையும் வழங்கவிருப்பது குறிப்பிடத் தக்கது. (எ-84)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அம்பாறையில் இரண்டாம் கட்டக் கொடுப்பனவு

காரைதீவு,மார்ச்18

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட அம்பாறைக் கரையோரப் பிரதேச மக்களுக்கு இரண்டாம் கட்ட ஐயாயிரம் ரூபாக் கொடுப்பனவு மக்கள் வங்கிக் கிளையினூடாகத் தற்போது வழங்கப் பட்டு வருகின்றது.

இதனையொட்டி கடந்த புதனன்று அதிகாலை முதல் வங்கிக்கிளைகளின் முன்னால் மக்கள் நீண்ட வரிசையில் நின்றதைக் காணமுடிந்தது.

இந்தக் கொடுப்பனவு தொடர்ந்து 6 மாதங் களுக்கு வழங்கப்படவிருக்கிறது. சேமிப்புக் கணக்கில் இக்கொடுப்பனவு இடப்படுவதால் மக்கள் முண்டியடிக்கவேண்டிய அவசியம் இல்லை என்று கூறப்படுகின்றது.

காரைதீவு மக்கள் வங்கி முகாமையாளர் ஜே.கே.பிராண்சிஸ் இது விடயமாகத் தகவல் தருகையில்:-

முதல் நாளே சுமார் ஆயிரம் பேர் இந்தக் கொடுப்பனவைப் பெற்றுள்ளனர். இதற்கெனப் பிரத்தியேக ஏற்பாடுகளைச் செய்திருந்தோம் - என்றார்.

சேமிப்புக் கணக்கில் ஒரு தொகைப்பணம் எஞ்சியிருக்க வேண்டும் என்ற நியதியின் கீழ் கடந்த தடவை எவரும் ஐயாயிரம் ரூபாவை முழுமையாகப் பெறவில்லையென்பது குறிப்பிடத் தக்கது. (எ-84)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

வீட்டிற்குப் பயன்படுத்தக்கூடிய தரமான பாலை மர இரண்டு வெளியன்னல் நிலைகள் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: இ.தேவ ராஜா, நுணாவில் கிழக்கு, கல்வயல், சாவகச்சேரி. (சி-41529)

NPGK xxxx இலக்கமுடைய Press Cub 50 (Japan) மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0773144569 (43194)

நல்ல நிலையிலுள்ள 3 ஸ்ரீ xxx தொடரிலக்கமுடைய Peugeot - 403 கார் விற்பனைக்குண்டு தொடர்பு: R.தேவராஜா இல.188, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள் கோயிலுக்கு அண்மையில்) (43229)

## காணி விற்பனைக்கு

சுதுமலை வடக்கு, மானிப்பாயில் 12 பரப்புக்காணி பகுதி பகுதியாக அல்லது முழுமையாக விற்பனைக்குண்டு. தொடர்பு: செல்வன். 222 7226, 077 6011135, 0777 488157 (பிற்பகல் 4 மணிக்கு பின்) (43157)

## The Royal College of Jaffna

ஆண்டு 1 இல் இருந்து 5 வரை ஆங்கில மூலம் ஆங்கில வகுப்புக்கள் நடைபெறுகின்றன. By விக்கினேஸ்வரன் ஆச்சாரி. 426 (302), K.K.S வீதி. யாழ்ப்பாணம். (43220)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள போட்டோ பிரதி மெசின்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு :

**ராம் CD வேல்ட் & எலக்ரோனிக்,**
**220, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

(32-21-11-45) **T.P.: 0777 423612** (43230)

## லொறி விற்பனைக்கு

எம்மிடம் 27 ஸ்ரீ XXXX தொடர் இலக்கமுடைய நல்ல நிலையிலுள்ள லொறி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :

**எஸ்.பாலசுந்தரம் ,**
அம்பாள் வீதி, கொக்குவில் மேற்கு.
**T.P.:077 6354157**

(32-21-11-45) (43192)

## தவறிவிட்டது

பாலன் குகன் எனப் பெயரிடப்பட்ட மோட்டார் சைக்கிள் இன்சூரன்ஸ், ரக்ஸ் புத்தகம் என்பன அடங்கிய பை றக்கா வீதிக்கும் நெடுங்குளம் சந்திக்கும் இடையில் 14.03.2005 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஸ்ரனிஸ்லாஸ், 23/5, A.V. றோட், கொழும்புத்துறை என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (43202)

தங்க கைச்சங்கிலி ஒன்று சுன்னாகம் சந்திக்கும் மருதனார்மடச் சந்திக்கும் இடையில் 14.03.2005 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சுன்னாகம் ஐயனார் தேவஸ்தான நிர்வாக சபையினரிடம் ஒப்படைக்கவும். T.P.: 0776102977. (43207)

## வேலையாள்கள் தேவை

1. ஒட்டுநர் (Welders)
2. பொருத்துநர் (Fitters/ Fabricators)
3. பயிலுநர் (Trainees)

எமது ஸ்தாபனத்தில் வேலை செய்வதற்கு மேற்கூறப்பட்ட வேலையாள்கள் உடனடியாகத் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். வேலை பயில விரும்பு பவர்களும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு:

**திட்ட முகாமையாளர்**
**புறோமோட்டேர்ஸ்**
**என்ஜினியரிங் கம்பனி**
**844. பருத்தித்துறை வீதி, நல்லூர்.**
தொலைபேசி 021 222 5780

(சி/41535) (21-11-45)

## துயர் பகிர்வு

எமது பள்ளியின் ஆசிரியர்
திருமதி ஜெ.கந்தவேள்
அவர்களின் தந்தை

**கந்தையா இராமநாதன்**

அவர்களின் மறைவையொட்டி
எமது ஆழ்ந்த இரங்கலைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.
யா/பெரியபுலம் ம.வி.,
பள்ளிக்குழுமம்.

(43209)

## "SOFT LOGIC"






எம்மிடம்
கையடக்கத் தொலைபேசிக்குரிய உதிரிப்பாகங்கள்
அனைத்தும்
பெற்றுக் கொள்ளலாம்
Mobile Phone + SLT Phone
Service and Repair
Phone Lock Relese
Dialog.kit Sim CARD,
MORO Mobital Sim CARD.
உங்களது பெயர்களிலே பதிவுசெய்து
வழங்கப்படும்



**வானகம்**
**போன் சிற்றி**
இல. 6, கே.கே.எஸ். வீதி,
(அன்னை நாகாபூட்சிற்றிமுன்பாக)
☎: 077 3151411

**டோரா**
**மல்ரி கொம்பிளெக்ஸ்**
பிரதான வீதி, நெல்லியடி.
☎: 021 226 3432

## உணவுப் பொருள் அன்பளிப்பு

அரியாலை,மார்ச்18

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டு நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினரால் உணவு மற்றும் உடுபுடைவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

குடத்தனையில் உள்ள நலன்புரி முகாமில் தங்கியிருக்கும் மக்களுக்குக் கடந்த திங்களன்று பால்மா, பிஸ்கட் வகைகள் மற்றும் உடுபுடைவைகள் என்பன வழங்கப்பட்டன. (எ-17)

## சிறப்புற நடைபெற்ற அரங்க நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச்18

கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் மற்றும் சன சமூக நிலைய, கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் மாணவர் அரங்க நிகழ்வு ஒன்று அண்மையில் நடைபெற்றது.

சரணிகா நாகராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாணவர் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுபவர் தாயா, தந்தையா? என்னும் தலைப்பில் பட்டிமன்றமும் 'சுனாமி' பற்றிய கவியரங்கமும் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (ஜ-204)

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச்18

சிறுவன் ஒருவனைக காணவில்லையெனத தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

றக்காவீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பதின்மூன்று வயதுடைய மதியழகன் ரவி என்ற சிறுவனே காணாமற் போனவராவார்.

கடந்த முதலாம் திகதி வீட்டிலிருந்து வெளியில் சென்றவர் பின்னர் வீடு திரும்பவில்லை என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-7)

## வலைகள் அன்பளிப்பு

மாதகல்,மார்ச்18

கனடா - மாதகல் கல்விக்கழக நலன்புரி நிலையம் மாதகல் புனித சூசையப்பர் கடற்றொழிலாளர் சங்கத்திற்கு ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான வலைகளை வழங்கியுள்ளது.

கனடா மாதகல் கல்விக்கழகத் தலைவர் வி.சிற்றம்பலம் கடற்றொழில் சங்கத் தலைவர் அ.பீ. அமலதாசிடம் மேற்படி வலைகளைக் கையளித்தார். (3-95)

## சுன்னாகத்தில் ஆலோசனைக் கூட்டம்

வலி.தெற்கு,மார்ச்18

சுன்னாகம் பிரதேச சபையை நகரசபையாகத் தரம் உயர்த்தும் பணிகளை முன்னெடுப்பதற்காக அமைக்கப்பட்ட செயற்குழுவினரின் ஆலோசனைக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு வலிகாமம் தெற்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஜ-152)

## ஓட்டோ சாரதி தேவை

எமது ஸ்தாபனத்தில் வேலை செய்வதற்கு ஓட்டோ சாரதி அனுமதிப்பத்திரம் உடையவரும் அனுபவமுள்ளவரும் உடனடியாகத் தேவை.

தொடர்பு:

**திட்ட முகாமையாளர்**
**புறோமோட்டேர்ஸ்**
**என்ஜினியரிங் கம்பனி**
**844. பருத்தித்துறை வீதி, நல்லூர்.**
தொலைபேசி 021 222 5780

(சி/41535) (21-11-45)

## பொதுக் கூட்டம்

யா/கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை மறுதினம் (20.03.2005)ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். அனைத்துப் பழைய மாணவர்களும் தவறாது சமூகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**ந.திருச்செல்வம்,**
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.

(சி.41545) (21-11-45)

## தேவை

1. புத்தகங்கள், பேப்பர் வகைகள், உபகரணங்கள் விற்பனையில் அனுபவமிக்கவர்களும்
2. இரும்பு, சிமெந்து, மரம் கட்டடப் பொருள்கள் ஆகியவற்றில் விற்பனை அனுபவமிக்கவர்களும்
3. டீசல் என்ஜின், மா அரைக்கும் இயந்திரம், நெல் குற்றும் இயந்திரங்களும் அதன் உதிரிப்பாகங்களும் விற்பனையில் அனுபவமிக்கவர்கள் உடன் நேரில் வரவும்.

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
**212, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி/41547) (21-11-45)

## நேர்முகத் தேர்வு


24.02.2005 திகதி ஈழநாதம் பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் கணக்காளர், கணக்குப்பதிவாளர், கணக்காய்வாளர் பணிநிலை வேண்டுகைகளுக்கான நேர்முகத் தேர்வுகள் எதிர்வரும் 20.03.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் இடம்பெறும். விண்ணப்பித்தவர்கள் கல்விச்சான்றிதழ்களுடன் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**ஆளணி நிர்வாகம்,**
**தமிழர் புனர்வாழ்வுக் கழகம்**
**நடுவப் பணியகம்,**
**கிளிநொச்சி.**

(சி.41544) (21-11-45)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 - 04 - 1944



மறைவு 11 - 03 - 2003

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் சின்னத்துரை அமிர்தலிங்கம்**

திதி - அட்டமி (18.03.2005)

ஆண்டுகள் இரண்டு கடந்தாலும்
உங்கள் நினைவுகள்
நாம் வாழும் வரை - எங்கள்
நெஞ்சங்களில் நிலைத்திருக்கும்.

அன்புடன் மனைவி,
பிள்ளைகள்.

இணுவில் கிழக்கு,
இணுவில்.

(43233)(21-11-45-32)

# புதுக்குடியிருப்பில் நாளை வரை கண்சிகிச்சை

கிளிநொச்சி,மார்ச்18

புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் மருத்துவமனையில் நாளை சனிக்கிழமை வரை கண் கற்றாக் சத்திரசிகிச்சை நடைபெறவுள்ளது.

இங்கிலாந்து வருகை தந்துள்ள கண் சத்திர சிகிச்சை நிபுணர் புவனச்சந்திரன் தலைமையிலான குழுவே இச்சிகிச்சையை மேற்கொண்டு வருவதால் கண் கற்றாக் நோயினால் பாதிக்கப்பட்டோர் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

பார்வைக்குறைபாடு உள்ளவர்களுக்கு நவீன கருவிகள் மூலம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படவுள்ளன என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுவரை, நடைபெற்ற சிகிச்சையின் மூலம நூற்றுக்குமேற்பட்டோர் பயனடைந்துள்ளனர் எனவும், மேலும் நூறு பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (3-202)

# உயர்தர மாணவருக்குக் கருத்தரங்குகள்

கிளிநொச்சி,மார்ச்18

தமிழீழ மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் ஜி.சீ.ஈ.உயர்தர கணித விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கான இரசாயனவியல் பாட இலவசக் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

பிரபல ஆசிரியர் அன்பழகனால் நடத்தப்படவுள்ள இக்கருத்தரங்குகள், நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன. (8-202)




கிராமிய அபிவிருத்தி வங்கியின் 12 ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் பூநகரி கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் தேசியக் கொடியை ஏற்றி வைப்பதையும், பயனாளி ஒருவருக்கு நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை வழங்குவதையும் படங்களில் காணலாம்.
*(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)*

# சமாதான முயற்சிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு கண்காணிப்புக்குழு தனது பங்களிப்பை வழங்க வேண்டும்

## அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் வேண்டுகோள்

கிளிநொச்சி,மார்ச்18

சமாதான முயற்சிகளில் எந்தவகையிலும் பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தனது முழுப்பங்களிப்பையும் வழங்கவேண்டும்.

- இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரச படைகளின் செயற்பாடுகளினால் சமாதான ஒப்பந்தம் தொடர்ச்சியாக மீறப்படுகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் மூலம் இயல்பு அரசியல் நடவடிக்கைகளுக்குத் திரும்பியுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளை வலுச் சண்டைக்கு இழுப்பதன் மூலம், சமாதானத்துக்காக 3 ஆண்டுகளாகப் போடப்பட்ட அத்திபாரத்தினைத் தகர்த்து விடுமோ என போரினால் பாதிக்கப்பட்டு நலிவடைந்து சமாதானத்தில் நம்பிக்கை வைத்துள்ள மக்களுக்குப் புனர்வாழ்வுப்பணி செய்துவரும் அரசசார்பற்ற நிறுவனங்களினுடைய இணையம் பெரும் கவலையடைகின்றது.

28.02.2005 அன்று மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரையும் உதவிப் பொறுப்பாளரையும் போராளி ஒருவரையும் சுட்டுக் காயப்படுத்தியவர்கள் அதிரடிப் படையினரின் முன்னரங்க நிலையூடாக வந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்து மீளவும் அதே வழியாகச் சென்றுள்ளனர். தற்போது இவர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிகின்றோம். இதிலிருந்து இதுவரை காலமும் நடைபெற்ற கொலைகளுக்கும், கொலை முயற்சிகளுக்கும அரசினுடைய ஆயுதப்படையினரே பொறுப்பென்று ஏற்கனவே எம்மால் தங்களுக்கும், ஜனாதிபதிக்கும் கையளிக்கப்பட்ட மகஜரில் தெரிவித்து வந்துள்ளோம்.

தமிழ் மக்களாகிய நாங்கள் சுயமரியாதையுடன் நீதியோடு கூடிய உரிமையுடன் சமாதானமாக வாழ்வதற்குத் தாங்கள் உதவிபுரிய வேண்டும். அத்துடன் கொலைகளையும், கொலை முயற்சிகளையும் நிறுத்தி, தமிழீழ விடுதலைப் புலிகள் இயல்பான அரசியல் வேலை செய்வதற்குத் தாங்கள் முழுப் பாதுகாப்பையும், ஒத்துழைப்பையும் நல்குவதுடன், சமாதான நடவடிக்கை எந்தவகையிலும் பாதிக்கப்படாமல் இருப்பதற்குப் பூரண பங்கேற்புடன் செயற்பட வேண்டும் - என்றுள்ளது. (8-202)

# தமிழீழ பொருண்மிய நிறுவனத்தினால் அன்னாசிப் பயிர்த்துண்டங்கள் விநியோகம்

பரந்தன்,மார்ச்18

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு அன்னாசிப் பயிர்த்துண்டங்களை விநியோகித்து வருகின்றது.

விவசாயிகளின் நன்மை கருதி நிறுவனத்தால் தென்னிலங்கையிலிருந்து அன்னாசிப் பயிர்த துண்டங்கள் தருவிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இத்துண்டங்களுக்குக் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் மத்தியில் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளதாகவும் இவை மீண்டும் தருவிக்கப்பட்டு தொடர்ந்து விநியோகிக்கப்படவுள்ளதாகவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் மு.செந்தில் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது தாயகப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யக்கூடிய பயிரினங்களை வேறு இடங்களிலிருந்து தருவித்து விநியோகிக்கவுள்ளோம். இதன் மூலம் எமது பிரதேச வளத்தைப் பெருக்குவதே எமது நிறுவனத்தின் நோக்கம்.

இத்திட்டத்தின் முதல் நடவடிக்கையாக 10 ஆயிரம் அன்னாசிப்பயிர்த் துண்டங்கள் தருவிக்கப்பட்டு உற்பத்தியாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு பிரதேசங்களிலும் உள்ள உற்பத்தியாளர்கள் தமது பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளருடன் தொடர்பு கொண்டு அன்னாசிப் பயிர்த்துண்டங்களைப் பெற்றுக்கொள்ளலாம் - என்றார். (8-352-202)

## கற்சிலை மடுவிலுள்ள

# திலீபன் மருத்துவமனையின் 3 ஆம் ஆண்டு நிறைவு விழா

ஒட்டுசுட்டான்,மார்ச்18

கற்சிலைமடுவில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் மருத்துவமனையின் 3 ஆம் ஆண்டு நிறைவு விழா வெகுசிறப்பாக நடைபெற்றது.

திலீபன் மருத்துவமனைக் குழுச் செயலாளர் வே.தயா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பொதுச் சுடரை முல்லைத்தீவு மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் மூர்த்தி ஏற்றிவைக்கத் தமிழீழத் தேசியக் கொடியினை முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து திலீபனின் உருவப்படத்திற்கான ஈகச்சுடரை முத்தையன்கட்டுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் உதவிப் பொது முகாமையாளர் கனகசபாபதி ஏற்றிவைக்க, மலர்மாலையினை திலீபன் மருத்துவமனை மருத்துவர் செவ்வானம் அணிவித்தார்.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் மூர்த்தி மருத்துவமனைக்குத் தேவையான உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கினார்.

திலீபன் மருத்துவமனை மருத்துவர் செவ்வானம் உட்படப் பலர் இந்நிகழ்வில் கருத்துரைகள் வழங்கினார்கள். (8-341-203)

# கிளிநொச்சி பாரதிபுரத்தில் படகு உற்பத்திமையம் திறப்பு

தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் கடல்சார் இயந்திரவியல் சேவை நிறுவனமும் இணைந்து மற்றுமொரு படகு உற்பத்திமையமொன்றை நிறுவியுள்ளது.

கிளிநொச்சி, பாரதிபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தமையத்தின் திறப்புவிழா கல்வித் தொழிற்பயிற்சி அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் யோகன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்தத் திறப்புவிழா நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியைக் கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் விநாயகம் ஏற்றிவைத்தார். மையத்தின் பெயர்ப்பலகையைத் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் டென்மார்க் கிளையின் பணிப்பாளர் ஆனந்தன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் றீகன் நாடாவெட்டித் தொழிற்சாலையைத் திறந்துவைத்தார். பயிற்சியைக் கடற்புலிகளின் உறுப்பினர் குபேரன் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

இந்நிகழ்வில் றீடோ நிறுவனப் பணிப்பாளர் ராணி மைந்தன், கிளிநொச்சி சிற்பக் கலைக்கூட சிற்பாசிரியர் விக்கிமாஸ்ரர், கடல்சார் இயந்திரவியல் நிறுவனத்தைச்சேர்ந்த ஆனந்தி, வேலாயுதம் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (3-202)

கிளிநொச்சி
வன்னிச் செய்திகள்

# அன்னை பூபதியின் 17ஆவது நினைவு நிகழ்வுகள் தமிழர் பிரதேசங்களில் நாளை ஆரம்பமாகின்றன

கிளிநொச்சி,மார்ச்18

தியாக தீபம் அன்னை பூபதியின் 17ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை தமிழர் பிரதேசங்களில் ஆரம்பமாகின்றன.

நாளை காலை 9 மணிக்குப் பல்வேறு இடங்களிலும் தமிழீழத் தேசியக் கொடியேற்றப்பட்டு நினைவு தின நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

அடுத்த மாதம் 19ஆம் திகதி வரை நடைபெறவுள்ள நினைவு நிகழ்வுகளை முன்னிட்டு சிரமதானங்கள், கருத்தரங்குகள் என்பனவற்றுடன் கிராமங்கள் தோறும் உண்ணாவிரதங்களை நடத்துவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இறுதி நாள்களான ஏப்ரல் 17ஆம், 18ஆம், 19ஆம் திகதிகளில் காலை 9 மணிக்கு சகல இடங்களிலும் உண்ணாவிரத நிகழ்வுகள் இடம் பெறும்.

இறுதிநாளான ஏப்ரல் 19ஆம் திகதி மாலை உண்ணாவிரதம் நிறைவு செய்யப்பட்டு நினைவுக் கூட்டம் நடத்தப்படும். (எ-202)

# சட்டவிரோதக் கடைகளை அகற்றும் நடவடிக்கை தீவிரம்

கிளிநொச்சி,மார்ச்18

கிளிநொச்சி நகரில் ஏ-9 வீதியின் இரு புறமும் 66 அடி எல்லைக்குள் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோதக் கடைகளை, கரைச்சிப் பிரதேச சபையினர் காவல்துறையினர் சகிதம் சென்று அகற்றி வருகின்றனர்.

கிளிநொச்சி நகரில் நாளாந்தம் அதிகரித்து வரும் சன நெரிசலால் ஏற்படும் விபத்துக்களைத தடுக்கும் பொருட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை குறித்துப் பிரதேச சபையினரும், வர்த்தகர் சங்க நிர்வாகமும் ஏற்கனவே அறிவுறுத்தல்களை வியாபாரிகளுக்கு வழங்கியிருக்கின்றனர். அவர்கள் தாங்களாகக் கடைகளை அகற்றாத காரணத்தினாலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (3-301)

# நெல் கொள்வனவு திருப்தியில்லை; விவசாயிகள் நட்டமடையும் நிலை

ஒட்டுசுட்டான்,மார்ச்18

காலபோக நெற்செய்கையின் நெல் கொள்வனவு திருப்திகரமாக நடைபெறாததால் நட்டமடையும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச விவசாயிகளால் காலபோகத்தில் பெறப்பட்ட நெல்லை, பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் முழுமையாகக் கொள்வனவு செய்யவில்லை. இதனால், விவசாயிகள் தனியார் நிறுவனங்களுக்கு மிகக்குறைந்த விலையில் நெல்லை விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், காலபோகத்திற்கு ஏற்பட்ட செலவைக் கூட மீளப் பெறமுடியாத நிலையில் விவசாயிகள் நட்டமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (8-341-202)

# சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிச் சேவை வகுப்புகள்

## வன்னியில் நடைபெறுகின்றன

கிளிநொச்சி,மார்ச்18

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவினர் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் முதலுதவிச் சேவை வகுப்புகளை நடத்தி வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வெண்புறா நிறுவனத்திலும் நிதித்துறை சார்ந்த நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தைச சேர்ந்த தனியார் நிறுவனங்களிலும் இந்த வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதேவேளை, சிவராத்திரியை முன்னிட்டு உருத்திரீச்சரத்தில் முதலுதவிச் சேவை நிலையம் ஒன்றை அமைத்துச் சேவை வழங்கினர்.

அத்துடன், கண்பரிசோதனை முகாம்கள், சிரமதானப் பணிகள், வணிக நிறுவனங்களுக்கான செயலமர்வுகள், பயிற்சி நெறிகள் என்பவற்றையும் நடத்திவருகின்றனர்.

எதிர்வரும் 25ஆம் திகதி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழாவில் முதலுதவிச் சிகிச்சை நிலையம் அமைத்து முதலுதவிச் சேவைகள் செய்வதற்கான ஒழுங்குகளையும் இவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். (8-203)

ஆழிப்பேரலையால் சிதைந்த

# காலி மாவட்டத்தை ரணிலிடம் ஒப்படையுங்கள்

# இரண்டே மாதத்தில் அபிவிருத்தி செய்துகாட்டுவார்

## ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் வஜிரவின் கருத்து இது

கொழும்பு,மார்ச்18

தென்மாகாணத்தில் ஆழிப்பேரலையால் பெரிதும் பாதிக்கப்பட்ட காலி மாவட்டத்தை ரணிலிடம் ஒப்படையுங்கள். இரண்டே மாதத்தில் அதனை அவர் புதிய நகரமாக ஆக்கிக் காட்டுவார் எனச் சவால் விடுக்கின்றார் காலி மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரான வஜிர அபேவர்தன.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இப்படிக் கூறினார்.

காலி மாவட்டத்தில் சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மீட்டியாகொடையில் அடித்துச்செல்லப்பட்ட ரயிலில் பயணம் செய்த ஆயிரத்து 880 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்கள் எந்த ஊரைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரியாது. அவர்களுடைய மரணங்கள் எந்தவோர் இடத்திலும் பதிவுசெய்யப்படவில்லை. அவர்கள் பற்றிய விவரங்களைக் கண்டறிய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பாதிக்கப்பட்ட மக்களின் மீள்குடியேற்றத்திற்கான எந்தவொரு நடவடிக்கையையும் அரசு மேற்கொள்ளவில்லை. தொண்டர் நிறுவனங்களால் கட்டிக்கொடுக்கப்படும் வீடுகளில் குடியேறுபவர்களுக்கு அரசின் எந்தவிதமான உதவியும் கிடைக்காது என்று வேறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஐ.தே.க. இதுவரை தனிப்பட்ட முறையில் 300 நிரந்தரமான வீடுகளை அமைத்துள்ளது. இம்மாத இறுதிக்குள் இந்த வீடுகள் பாதிக்கப்பட்டவர்களிடம் ஒப்படைக்கப்படும். ஜுன் மாத இறுதிக்குள் மேலும் ஆயிரம் வீடுகளைக் கட்டிக்கொடுக்க கட்சி திட்டமிட்டுள்ளது.

காலி மாவட்டத்தில் அனர்த்தத்தால் மூவாயிரம் வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தனிப்பட்ட முறையில் காலி நகரில் மட்டும் 900 வர்த்தகர்கள் தமது உடைமைகள் முழுவதையும் இழந்துள்ளனர். அவர்களுக்குத் தேவையான கடன் உதவிகள் கூட இதுவரை வழங்கப்படவில்லை.

எனவே, காலி மாவட்டத்தின் அபிவிருத்திப் பொறுப்பை ஐ.தே.க. தலைவரிடம் அரசு ஒப்படைக்கட்டும். அரச பதவிகளும் வேண்டாம். அரசின் உதவிகளும் தேவையில்லை. எண்ணி இரண்டே மாதத்தில் காலி நகரை ஒரு நவீன நகரமாக்கிக் காட்டுவார் அவர்.

இதே அடிப்படையில் அம்பாந்தோட்டை மாவட்ட அபிவிருத்திப் பொறுப்பை ஜே.வி.பியினரிடம் ஒப்படைக்கட்டும். இதே அடிப்படையில் ஏனைய கட்சிகளிடமும் ஒப்படைக்கட்டும். நாடு தானாகவே அபிவிருத்தியடையும். ஆனால், ஜனாதிபதி அதைக் கடைசி வரை செய்யவேமாட்டார் என்று மேலும் கூறினார் வஜிர அபேவர்த்தன.

(க-3)


சர்வதேச மகளிர்-தினத்தை முன்னிட்டு

சுகவாழ்வு நிலையத்தால் நடத்தப்படும்

## மகளிர் தினம்

காலம் : 20.03.2005 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப. 1.30 மணி
இடம் : யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
தலைவர் : வண.பிதா சூ.டேமியன்
இயக்குநர், சுகவாழ்வு நிலையம்
பிரதம விருந்தினர் : திருமதி நாச்சியார் செல்வநாயகம்
(தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்கள் : திருமதி கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
திருமதி கோகிலா மகேந்திரராஜா
(உதவிக்கல்விப் பணிப்பாளர்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பெற்ற ஓவியப் போட்டியின் முடிவுகள்

முதலாம் இடம் : திரு.R.வித்தியானந்தன் (யாழ்ப்பாணம்)
இரண்டாம் இடம்: ர.பிரகாஸ் (கோப்பாய்)
மூன்றாம் இடம் : சாரூபா சரவணபவான் (யாழ்ப்பாணம்)

ஆறுதல் பரிசு பெறுவோர்:
தேவராசா – அகிலன் (இணுவில்)
கார்த்திகேயினி – திருநாவுக்கரசு (சுன்னாகம்)
ம.கணேஷானந்தன் (யாழ்ப்பாணம்)
சாரூபா – சரவணபவான் (யாழ்ப்பாணம்)
க.சதுஷ்ரதி (நல்லூர்)

இப்போட்டியில் கலந்துகொண்டோருக்கான சான்றிதழ் இந்நிகழ்வில் வழங்கப்படும்.
தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பணிப்பாளர்
இணைப்பாளர், உளசமூக ஊக்குவிப்பாளர்,
சுகவாழ்வு நிலையம். (43243)(33-45-16)



16.03.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 1590

01 16 22 42 | சுப்பர் எண் 10

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.1,17,89,400/- வெல்லப்பட்டுள்ளது

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 01 | 1,17,89,400/- | 1,17,89,400/- |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 40 | 5,000/- | 2,00,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 508 | 1,000/- | 5,08,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,600 | 500/- | 8,00,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 25,140 | 40/- | 10,05,600/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 23,989 | 20/- | 4,79,780/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,56,348 | 10/- | 35,63,480/- |

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 2,00,0000/-

200164800-2-64
200156882-5-80
200162496-6-18
200169616-3-95
200154806-7-32



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

பல்கலைக்கழக சேவையில் உதவிப்பதிவாளராகப் பதவியுயர்வு பெற்ற எமது ஒன்றிய அங்கத்தவர்

### திரு.ந.சி.செந்திற்செல்வன்

அவர்கள் மேலும் பல உயர் பதவிகள் பெற்று நீடூழிகாலம் வாழவேண்டும் என வாழ்த்துகின்றோம்.

யாழ். பல்கலைக்கழக எழுதுவினைஞர் தொழில்நுட்ப அலுவலர் ஒன்றியம்.

(43245)(33-45-16)



உ

## ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்



இந்தியாவிலிருந்து வந்துள்ள

ராமகிருஸ்ண் சாஸ்திரிகள்



கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன் - மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு, கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள்ரேகை, எண்கணிதம் - கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்புகொள்ளவேண்டியது.

அறை எண் 5, பிள்ளையார் இன்,
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
Room No. 5, Pillaiyar Inn,
31, Manipay Road, Jaffna.
(சி-41558)(33-45-16) Phone: 021 222 2839 Mobile: 0776 923623.


## மரண அறிவித்தல்

### விஜயவாசன் இந்திராணி

(ஸ்ரூடியோ விஜேந்திரா உரிமையாளர்)

முதலாம் கட்டை, டச்சுவீதியைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி வடக்கு, மீசாலையை (சோலை அம்மன் கோவிலடி) வசிப்பிடமாகவும் கொண்ட விஜயவாசன் இந்திராணி 14.03.2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் செல்லத்துரை - அன்னப்பிள்ளையின் அன்பு மகளும் கனகரட்ணம் - செல்லம்மாவின் அன்பு மருமகளும் கனகரட்ணம் விஜயவாசனின் (ஊழியர், சாவகச்சேரி நகரசபை நூலகம்) அன்பு மனைவியும் விஜயரூபன், விஜேந்திரன், விஜயரூபி, விஜயராஜ் (சாவ. இந்துக்கல்லூரி மாணவர்கள்), விஜயதாஸ் (சாவகச்சேரி அமிர்தாம்பிகை வித்தியாலய மாணவன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவசுப்பிரமணியம் (வாசன் -நெதர்லாந்து), செல்வராணி (கனடா), வசந்தகுமாரி (நோர்வே), தவமலர் (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரோகினி (நெதர்லாந்து), துரைராஜசிங்கம் (கனடா), துரைராசா (நோர்வே), சச்சி (நெதர்லாந்து), வைகுந்தவாசன் (டென்மார்க்), விஜயகுமாரி, ஜெயக்குமார் (நுணாவில்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (சி-41557)(33-45-16)

சாவகச்சேரி வடக்கு,
மீசாலை (சோலையம்மன் கோவிலடி).
தொ.பே. 0776136575 0776102603

தகவல்:
விஜயவாசன் (கணவன்)
(ஊழியர் சாவகச்சேரி நகரசபை).

## யோகர் சுவாமிகள் குருபூசை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்18

யோகர் சுவாமிகளின் 40ஆவது குருபூசை தினத்தை முன்னிட்டு நாளை சனிக்கிழமை தொடக்கம் மூன்று தினங்கள் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள சிவத்தொண்டன் நிலையத்தில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன.

திருவடிபூசை, தியானம், நற்சிந்தனை உரை விளக்கம், நற்சிந்தனை பூரண பாராயணம், ஆச்சிரமவாழ்வு போன்ற நிகழ்வுகள் வழமை போல் இடம்பெறும்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை யோகர் சுவாமிகளின் குருபூசை நாளான அன்று காலை சுவாமிகளது திருவுருவத்திற்கும் திருவடிக்கும் சிறப்பான பூசைகள் நடைபெறும். அத்துடன் நண்பகல் மாகேஸ்வர பூசையும் இடம்பெறும். (3-203)

## கல்வாரி திறப்பு

வலி.தென்மேற்கு,மார்ச்18

இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட வியாகுல மாதாவின் கல்வாரி கடந்த 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இளவாலை பங்குத் தந்தை அருட்திரு. பி.பொனிபொஸ் அடிகளார் இதனை ஆசீர்வதித்துத் திறந்துவைத்தார்

இதேவேளை, இந்த ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை ஆறாம் வெள்ளியை முன்னிட்டு காலை 7மணிக்கு திருப்பலியும், இன்று மாலை 6 மணிக்கு திருச்சிலுவைப் பாதையும் நடைபெறும். (எ-135)

## சமய சந்நிதிகளில்

காரைநகர்,மார்ச்18

காரைநகர் ஈழத்துச் சிதம்பர வருடாந்த பங்குனி மகோற்சவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பதினொரு தினங்கள் திருவிழா நடைபெறும்.

இம்மகோற்சவத்தில் நாளை சனிக்கிழமை இரவு 7 மணிக்கு கைலாச வாகன உற்சவமும், 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணியளவில் வேட்டைத்திருவிழாவும், 23ஆம் திகதி புதன்கிழமை இரவு 7மணிக்கு சப்பரத்திருவிழா இடம்பெறும்.

24ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும் தேர்த்திருவிழாவில் காலை 8மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் முற்பகல் 10 மணிக்கு பஞ்சரத பவனியும் இடம்பெறும்.

எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7மணிக்கு நடேசர் உற்சவமும், முற்பகல் 10 மணிக்கு சமுத்திர தீர்த்தமும் மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறும்.

26ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும். (எ-73)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்18

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்தத் திருக்குளிர்த்திவிழா எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இதேவேளை, தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் புதிய சித்திரத்தேரின் பவளக்கால் நாட்டு விழா எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது. (எ-202)

★ ★ ★

கோண்டாவில்,மார்ச்18

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் பங்குனி உத்தர இலட்ச அர்ச்சனை கடந்த செவ்வாயன்று ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்துத்தினங்கள் இலட்ச அர்ச்சனை நடைபெறும். எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் சங்காபிஷேகம் நடைபெற்று நண்பகலளவில் மாகேஸ்வர பூசை (அன்னதானம்) இடம்பெறும்.

பிற்பகல் 6 மணிக்கு திருவிளக்குப் பூசையும் திருவூஞ்சலும் நடைபெற்று, இறைவி திருவீதியுலா வருங்காட்சியும இடம்பெறும். (எ-49)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்18

புங்குடுதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா அடுத்தமாதம் 8ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

அன்றையதினம் பிற்பகல் 4மணிக்குக் கொடியேற்றமும் தொடர்ந்து ஆலய ஆன்மீக வழிகாட்டி அருள்தந்தை அ.இம்மானுவேல் (அ.ம.தி.) தலைமையில் குழந்தைகளுக்கான வேண்டுதல், கூட்டுவழிபாடு என்பன இடம்பெற்றுப் பிற்பகல் 5.30 மணிக்குத் திருப்பலியும் இடம்பெறும்.

அடுத்தமாதம் 9ஆம் திகதி சனிக்கிழமை நற்கருணை விழா நடைபெறும். கலாநிதி அருட்தந்தை ஜே.ஈ.ஜெயசீலனின் நெறிப்படுத்தலில் நோயாளர்களுக்கான வேண்டுதல், கூட்டு வழிபாடு என்பன இடம்பெறும்.

பிற்பகல் 5.30 மணிக்குத் திருப்பலியும் தொடர்ந்து நற்கருணை வழிபாடு, பவனி, அருளாசி என்பன நடைபெற்று,

மறுநாள் காலை 8.30 மணிக்குத் திருவிழாத் திருப்பலியும் தேர்ப்பவனி, அருளாசி என்பனவும் இடம்பெறும். (எ-202)

# இந்தியாவிலிருந்து திரும்பியோர் விவரங்களைப் பதிவு செய்யலாம்

யாழ்ப்பாணம், மார்ச்18

இந்தியாவிலிருந்து 2003 ஆம் ஆண்டு தாயகம் திரும்பியவர்கள் தமது பெயர்களை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் புலம்பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச நிறுவனத்தில் (ஐ.ஓ.எம்) பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மேற்படி நிறுவனமானது 2003 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கான தொழில்சார்ந்த உதவிகளை வழங்கத் தீர்மானித்துள்ளது என்று அந்நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

யுஎன்எச்.சி.ஆர். நிறுவன உதவியுடன் விமானம் மூலம், படகுகள் மூலமும் தாயகம் திரும்பியோர் தங்களது விவரங்களைத் தத்தம் பகுதி கிராமசேவையாளர் மற்றும் பிரதேச செயலர் உறுதிப்படுத்திய கடிதம் மற்றும் இந்தியாவிலிருந்து மீளத் திரும்பியதற்கான திகதியை உறுப்படுத்துவதற்கான ஆவணங்களுடன் யாழ்ப்பாணம் இல.38, கோயில் வீதியில் அமைந்துள்ள புலம்பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச நிறுவனத்தின் (ஐ.ஓ.எம்) அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(த-13)

# ஜப்பானிய நிபுணர்கள் இலங்கை வந்தனர்

கொழும்பு,மார்ச்18

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இலங்கையை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பாக இங்குள்ள அதிகாரிகளுக்கு உதவிகளையும் பயிற்சிகளையும் வழங்குவதற்காக ஜப்பானில் இருந்து நிபுணர்கள் குழு ஒன்று வந்துள்ளது.

நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு இங்கு வந்துள்ள இந்தக்குழுவில் 32 நிபுணர்கள் அடங்கியுள்ளனர்.

அவர்கள் தமது பரந்த அறிவையும் அனுபவத்தையும் தமது இலங்கைச் சகாக்கலுடன் பகிர்ந்து கொள்வார்கள். என்பதுடன்,செயற்றிறன் மிக்க அனர்த்த முகாமைத்துவ நடைமுறையொன்றை உருவாக்குவது குறித்தும் கலந்துரையாடல்களை நடத்துவார்கள்-என்று ஜப்பானியத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் அதிகளவில் நிலநடுக்கங்களால் பாதிக்கப்படும் நாடுகளில் ஜப்பான் மிக முக்கியமானது.அதனால், இயற்கை அனர்த்தம் குறித்து அதற்கு மிகப் பரந்தளவிலான அனுபவங்கள் இருக்கின்றன.அத்துடன், 8 கோடி அமெரிக்க டொலர் நிதி உதவியையும் அனர்த்த நிவாரணப் பணிக்காக அது இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இயற்கை மற்றும் தொழிற்றுறை அனர்த்தத்தைக் கையாள்வதற்கான செயற்றிடம் ஒன்றை உருவாக்குவதில் ஜப்பானின் பல்வேறு அமைசசுக்களிலும் முக்கிய பணியாற்றிய நிபுணர்கள் பலரே இலங்கை வந்த குழுவில் அடங்கியிருக்கிறார்கள் என்று ஜப்பானிய தூதரகம் தெரிவித்துள்ளது.

நிலம் மற்றும் கட்டமைப்பு முகாமைத்துவக் கற்கை நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் ரசுவோ கமாகுசி தலைமையில் இந்த நிபுணர்கள் குழு இலங்கை வந்துள்ளது. குழுவினர் நேற்றுக் காலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேசினர். (த)

## கலந்துரையாடல்

அரச சார்பற்ற பாடசாலைகளின் அதிபர்கள், முகாமையாளர்கள் கல்வி அமைச்சின் தனியார் கல்விப்பிரிவின் உயர் அதிகாரிகளுக்குமான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 20ஆம் திகதி வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் துளசிபுரம் மனிதவளம் அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது. இதில் யாழ்ப்பாணம், வலிகாமம் ஆகிய வலயங்களிலுள்ள மேற்படி பாடசாலைகளின் அதிபர்கள் முகாமையாளர்கள், வலயங்களின் நிர்வாக அதிகாரிகள் ஆகியோரைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-11)

# ஜே.வி.பியினருக்கு எதிரான நடவடிக்கையே பல்கலைக்கழக மாணவர்கள் மீதான சூடு!

## இப்படி விளக்கம் கூறுகிறார் பேராசிரியர் பீரிஸ்

கொழும்பு, மார்ச் 18

ஜே.வி.பியினருக்கு எதிரான ஜனாதிபதியின் முதற்கட்ட நடவடிக்கைதான் பல்கலைக்கழக மாணவர்கள் மீதான துப்பாக்கிப் பிரயோகம் என்கிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்.

ஜனாதிபதிக்கும் ஜே.வி.பியினருக்கும் இடையிலான பூசல்கள் பேசித் தீர்க்கும் நிலையைக் கடந்து, வேட்டுகளின் மூலம் தீர்க்கவேண்டிய நிலைக்குச் சென்றுவிட்டன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே பேராசிரியர் பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

நாம் ஆட்சியில் இருந்தபோது ஸ்ரீல.சு.கட்சியினரும் ஜே.வி.பியினரும் இணைந்து பல்கலைக்கழக மாணவர்களை அரசுக்கு எதிராகத் தூண்டிவிட்டனர். அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களைக் கொண்டு வேலைநிறுத்தங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தினர். இப்பொழுது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. ஜே.வி.பியினர் மாணவர் போராட்டங்களையும் வேலை நிறுத்தப் போராட்டங்களையும் நடத்துக்கின்றனர். ஜனாதிபதியோ அவர்களை அடக்குவதற்குப் பொலிஸாரையும் இராணுவத்தினரையும் ஏவிவிடுகின்றார்.

ஜே.வி.பியினரின் ஆதவுடனேயே ஜனாதிபதி அவசரகாலச் சட்டத்தை நிறைவேற்றிக்கொண்டார். இப்போது அதே அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி மாணவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படுகின்றது. பல்கலைக் கழகங்கள் இழுத்து மூடப்படுகின்றன.

ஆனால், அதனைத் தட்டிக்கேட்கத் துணிவு இல்லாமல் ஜே.வி.யினர் தடுமாற்றம் அடைந்துள்ளனர். இருசாராருக்கும் இடையிலான முறுகல் நிலையைத் தீர்ப்பது தொடர்பாக சில சிரேஷ்ட அமைச்சர்கள் மேற்கொண்ட முயற்சிகளையும் ஜனாதிபதி தடுத்துவிட்டார்.

அரசின் உள்வீட்டுப் பூசல்களையும் மோதல்களையும் மூடிமறைப்பதற்காகவே ஜனாதிபதி சர்வஜன வாக்கெடுப்பு என்ற நாடகத்தை அரங்கேற்றியுள்ளார் ஜனாதிபதியின் கனவு பலிக்காது என்கிறார் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ். (த)

# 'மத்தியம் 2004' இன்று வெளியீடு

யாழ்ப்பாணம்,மார்ச்18

யாழ்.மத்திய கல்லூரியின் 100 ஆவது ஆண்டு பெருந்துடுப்பாட்டச் சிறப்பு மலரான "மத்தியம் 2004" இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

கல்லூரி அதிபர் க.இராசதுரை தலைமையில் நடைபெறவுள்ள இவ்வெளியீட்டு நிகழ்வில் பிரதமவிருந்தினராக சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் எஸ்.தனபாலனும், சிறப்பு விருந்தினர்களாக கல்லூரியின் பழைய மாணவர் சங்க லண்டன் கிளையின் தலைவர் ஆர்.இராஜசிங்கம், கொழும்புக்கிளையின் முன்னாள் செயலாளர் வ.நடராஜா, யாழ்.கிளையின் செயலர் என்.இராஜதேவன் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

நிகழ்வில் மலரின் முதற்பிரதியை இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்தின் உரிமையாளர் பி.நர்கரடணம் பெற்றுக்கொள்வார்.

(எ-202)


## சேவை நலன் பாராட்டு



### திருமதி சுகுணாதேவி குமாரவேல்

எமது கல்லூரியில் கணித ஆசிரியையாகக் கடமையாற்றி இன்றுடன் அகவை அறுபதை நிறைவுசெய்து ஓய்வுபெறும் திருமதி சுகுணாதேவி குமாரவேல் அவர்கள் தனது ஓய்வுக்காலத்தில் சீரும் சிறப்புமாக நீண்ட ஆயுளும் நிறைந்த செல்வமும் பெற்று வாழ கல்லூரியின் நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையார் திருவருள் புரிவாராக.

யா/இந்து மகளிர் கல்லூரி, - கல்லூரிச் சமூகம்.
யாழ்ப்பாணம். (43247) (16-17-29)

GAMA ABACUS

இப்பொழுது நிலவு.com அறிமுகப்படுத்துகிறது



அபாக்கஸ்

பெற்றோர்களுக்கான விஷேட

கருத்தரங்கு

அழைப்பிதழ்

காலம்: 19-03-2005
பி ப 3.00 மணி
இடம் : யாழ்.இந்துக் கல்லூரி
குமாரசுவாமி மண்டபம்

நீங்களும் உங்கள் குழந்தையின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கிறீர்களா?
ஆமெனில் நீங்கள் அவசியம் கலந்துகொள்ள வேண்டிய கருத்தரங்கு

(C/41566)(29-16-17)

## மாகாண பொதுச்சேவை ஆட்சேர்ப்பு

### போட்டிப் பரீட்சை வகுப்புகள்

| இடம் | நேரம் |
|---|---|
| D.M.I., யாழ்நகர். | ஒவ்வொரு சனியும் 3 மணி |
| கிறிஸ்ரல், நெல்லியடி | ஒவ்வொரு ஞாயிறும் 4மணி |

★ பொது உளச்சார்பு, பொது அறிவு விடயங்கள் உள்ளடக்கப்படும். ஏனைய பரீட்சைகளுக்கும் ஏற்றது. (43249) (16-17-29)

லஷ்சுமி சினிமா இணுவில்

இன்றுமுதல் ரவி, அசின், நதியா, விவேக், பிரகாஸ்ராஜ் நடித்த

M.குமரன் சண் ஒவ் மகாலக்சுமி (சினிமா)

காட்சி நேரம்: 11.00. 3.00. 7.00.

(43250)(29-16-17)

நாதன்ஸ் சினிமா ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

விஜய், த்ரீசா, பிரகாஷ்ராஜ் நடித்த

கில்லி

(C/41486)

காட்சி நேரங்கள்: 10.30. 2.30. 6.30. 9.30. (பு.நே.)

ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு பிரசாந், வடிவேல், மும்தாஜ் நடித்த

லண்டன் (ரீல்லஸ்)

இயக்கம்: சுந்தர் C

ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே)

(C/41381)(29-16-17)

நிரைஞ்சனாஸ் சங்கானை

விஜய், சங்கவி, சுபலட்சுமி நடித்த

நிலாவே வா

காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00. (பு.நே.)

(C/41377)(29-16-17)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

சரத்குமார், நமிதா, வடிவேல், கபாலி நடித்த



ஏய் (ரீல்லஸ்)

தினசரி 11.00. 3.00. 7.00 (பு.நே)

நாளை முதல் சுக்ரன்

(C/41380)(29-16-17)

மனோகரா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சூர்யா, ஜோதிகா (மாறுபட்ட வேடங்களில்)
மற்றும் பலர் நடித்த

மாயாவி (ரீல்லஸ்)

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30

(C/41378)(29-16-17)

## ஆளுநர் வரவேற்பு விழா

லயன்ஸ் கழக 306B ஆளுநர் லயன் S.சிவானந்தன், லயன் சீமாட்டி விஜயலஸ்சுமி ஆகியோருக்கு மானிப்பாய் பரீஸ் லயன்ஸ் கழகத்தினர் 19.03.2005 சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு பிராந்தியத் தலைவர் லயன் ரவீந்திரன் இல.07, LOVE லேன், உடுவில் என்னும் முகவரியில் வரவேற்பு நிகழ்வு நடத்த உள்ளனர். ஆகவே, இந்நிகழ்வில் வலயத் தலைவர்கள், பிராந்தியத் தலைவர்கள், கழக அங்கத்தவர்கள அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

லயன் S.சிவராஜேஸ்வரன்
தலைவர்.

லயன் தவரஞ்சித்
செயலாளர்.

(ச-41561) (16-17-29)

## நீங்காத நினைவுகள்





அமரர் சதாசிவம் சற்குணசிங்கம் | அமரர் சற்குணசிங்கம் விஜயலட்சுமி (ராசாத்தி)

(4 ஆம் வட்டாரம், மண்டைதீவு)

| தோற்றம் | மறைவு | தோற்றம் | மறைவு |
|---|---|---|---|
| 27-02-1942 | 05-01-1971 | 06-11-1942 | 13-04-2000 |

திதி: 19.03.2005

அப்போது எம்மை அரவணைத்து
பாசத்துடன் எம்மை வளர்த்த
அன்புத் தெய்வங்களே! எத்தனை ஆண்டுகள்
சென்றாலும் உங்களைப் பிரிந்த துயரை எண்ணித்
தினம்தினம் தவிக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மகன், மகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கு.உதயகுமார்
இல.450,கரியாலை நாகபடுவான் (43248) (16-17-29)

# இணுவிலில் விபத்து நால்வர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,மார்ச் 18

இணுவில் ஆஸ்பத்திரிக்குச் சமீபமாக கே.கே.எஸ். வீதியில் நேற்றிரவு இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் - சைக்கிள் விபத்தில் நால்வர் படுகாயமடைந்தனர்.

இரவு 9மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சைக்கிளில் சென்றவர்களான இணுவில் தியேட்டர் வீதியைச் சேர்ந்த நடேசன் றஞ்சித மனோகர் (றஞ்சித் வயது-29), அவரது மனைவியான ற.றஜனி (வயது-31) ஆகியோரும் - மோட்டார்சைக்கிளில் சென்றவர்களான கட்டப்பிராய் கல்வியங்காட்டைச் சேர்ந்த சகோதரர்களான சந்திரகுமார் சந்துரு (வயது-19), சந்திரகுமார் பிரதாப் (வயது-16) ஆகியோருமே படுகாயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த நால்வரும் நேற்றிரவு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (த-12)

# கைதடிப் பாலம் நேற்றுத் திறப்பு

சாவகச்சேரி,மார்ச் 18

மீள்நிர்மாணம் செய்யப்பட்ட கைதடிப் பாலம் மீண்டும் மக்கள் பாவனைக்கு நேற்றுத் திறந்துவிடப்பட்டது.

கடந்த சில மாதங்களாக இப்பாலத்தின் திருத்தவேலை காரணமாக வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் பாலத்தின் அருகே போடப்பட்ட தற்காலிக வீதியின் ஊடாவே பயணத்தை மேற்கொள்ள நேர்ந்தது.

இதன்போது போக்குவரத்து நெருக்கடி கள் ஏற்பட்டுவந்தன. நேற்றுப் பாலம் திறக்கப்பட்டதையடுத்து பொதுமக்கள் நெருக்கடியின்றித் தமது பயணத்தை மேற்கொண்டனர். (த-12-31)

## புலிகளின் குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுடன் இணைந்து அதனை உருவாக்குவதில் உள்ள தடங்கல்கள் பற்றியும் விவரித்தது.

நோர்வே மற்றும் சுவீடனுக்குச் சென்றிருந்த புலிகளின் குழு இப்போது ஜேர்மனி சென்றுள்ளது. அது பிரஸல்ஸில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத் தலைமையகத்திற்கும் விஜயம் செய்யும் என்று பேர்ளினில் புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன. (த-12)

## பட்டப்பகலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடுப்பு பட்டியொன்றினால் இவரின் கழுத்தை நெரித்துக் கொலை செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார் என்று பொலீஸார் கூறினர்.

நவகம்புரவில் மக்கள் மிகவும் நெரிசலாக வாழும் பகுதியிலேயே இந்தக் கொலை இடம் பெற்றுள்ளது.

வீட்டில் கொள்ளையிடச்சென்ற சமயத்திலேயே இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலீஸார் சந்தேகப்படுகின்றனர். (த-12)

# ஜனாதிபதி நிதி கையாடல்கள் குறித்து விவாதம் நடத்த ஐ.தே.கட்சி கோரும்

கொழும்பு. மார்ச்18

ஜனாதிபதி நிதியில் இருந்து பதிவுகள் எவையும் இல்லாது ஜனாதிபதி செயலகத்துக்கு நிதி மாற்றப்பட்டுள்ளமை குறித்தும் தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் நிதி கையாடல்கள் குறித்தும் நாடாளுமன்றத்தில் ஒரு நாள் விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கோரவுள்ளது.

இதுதொடர்பான பிரேரணையை ஐ.தே.கவின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான த்.மகேஸ்வரன் இன்று சபாநாயகரிடம் கையளிக்கவுள்ளார்

இந்த விடயம் குறித்து கட்சித் தலைவர் ரணிலிடம் தான் நேற்றுப்பேசி அனுமதி பெற்றுக் கொண்டார் என்று மகேஸ்வரன் எம்.பி. கூறினார்.

"பல்வேறு பொது நலச் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்துவதற்காகவே ஜனாதிபதி நிதி பயன்படுத்தப்படுகின்றது. இதிலிருந்து 2 கோடி 40 லட்சம் ரூபாவை தனிப்பட்ட தேவைகளுக்காக ஜனாதிபதி தனது செயலகத்துக்கு மாற்றியுள்ளார்.

அதுவும் எந்தவிதமான ஆவணப்பதிவுகளும் இன்றி அவர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

"ஜனாதிபதி நிதியைக் கையாளும் சபையும் கடந்த மூன்று வருடங்களாகக் கூட்டப்படவில்லை. இது அதில் பல்வேறு மோசடிகளும் இடம்பெறுகின்றன. என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. இவ்வாறே தேசிய லொத்தர் சபை நிதியிலும் கையாடல்கள் இடம்பெற்றுள்ளன என்று கணக்காய்வாளர் நாயகம் கூறியுள்ளார்.

"எனவே, இவை குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவேண்டும்"- என்றார் மகேஸ்வரன்.

எதிர்வரும் 22 ஆம் திகதி நாடாளுமன்றம் மீண்டும் கூடும்போது இந்த விடயம் குறித்து ஒருநாள் விவாதம் நடத்தப்படவேண்டும் என்று ஐ.தே.கட்சி சார்பில் சபாநாயகரிடம் இன்று பிரேரணை சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (த)

## பொதுக்கட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாகவேலைகள், பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதில் சற்று முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக அறிகின்றேன். இறுதியான முடிவுக்கு வர இன்னும் சற்றுக்காலம் பொறுத்திருக்க வேண்டியிருக்கும். அதற்கு அதிககாலம் எடுக்காது.

அதற்காக எப்போது இந்தக் கட்டமைப்பு உருவாகும் என்பதையும் இப்போதே கூறிவிடமுடியாது. காலவரையறை எதனையும் இதில் குறிப்பிடுவது இயலாதது.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக நோர்வே முன்வைத்துள்ள திட்டத்திற்கு அரசு எந்தக் தருணத்திலும் பதில் சொல்லக்கூடும். நான் இலங்கைக்கு வெளியே வந்து ஒரு வாரமாகி விட்டது. இப்போதைய நிலை பற்றி சரியாகத் தெரியவில்லை - என்றார்.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணத்திற்காக வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்பட்ட பொருள்களில் பலவற்றுக்கு வரி செலுத்த வேண்டாம் என்று உத்தரவிட்டுள்ளதால் அவை துறைமுகங்களிலேயே தேங்கிக் கிடக்கின்றன என்று கூறப்படுகின்றதே என்று அவரிடம் கேட்டதற்கு நிவாரணங்களாக வந்த பொருள்களில் பல தேவையற்றவை அல்லது பயனற்றவை. ஒரு பெரிய கொள்கலன் முழுவதும் கரடிக்குட்டிப் பொம்மைகள் வந்தன. எனவேதான் வரிவிதிப்புக்கு முடிவுசெய்யப்பட்டது என்றார் கதிர்காமர்.

ஆழிப்பேரலை நிவாரணமாக அடுத்த மாதம் 26ஆம் திகதி வரை வெளிநாடுகளில் இருந்து வரும் பொருள்களுக்கு வரி விதிக்கப்படாது. அதன் பின்னர், நாட்டுக்கு வேண்டாத பொருள்களின் பட்டியல் ஒன்றைத் தயாரிக்க இருக்கின்றோம்.

உதாரணத்திற்கு ஏப்ரல் 26ஆம் திகதிக்குப் பின்னர் நிவாரணமாக அரிசியை அனுப்ப முடியாது. ஏனெனில், உள்ளூரிலேயே அரிசி அறுவடை அமோகமாக வரப்போகிறது.

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்ய முனைந்தீர்கள் அது எந்த நிலையில் இருக்கிறது? ஒப்பந்தம் கைச்சாத்தாவதில் என்ன தாமதம்? என்று அவரிடம் கேட்கப்பட்டது.

இந்த விடயத்தில் பேச்சுகள் ஏறக்குறைய முடிந்துவிட்டன. அதில் தாமதங்கள் ஏதும் கிடையாது. எனினும், அது எப்போது கையெழுத்தாகும் என்றுசொல்ல முடியாது என்றார் வெளியுறவுத்துறை அமைச்சர். அதுபற்றிய மேலதிக விவரங்களை இப்போது கூறமுடியாது என்றும் அவர் கூறினார். (த-க-12)

## மதமாற்றத் தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே. மில்ரோய் பெர்னாண்டோ ஆகியோர் இதனை கடுமையாக எதிர்த்தனர். இது மக்களின் அடிப்படை உரிமையை மீறும் செயலென்றும், அரசமைப்பின்படி ஒருவருக்குள்ள மதத்தை தேர்ந்தெடுப்பதற்கான உரிமை இச்சட்டத்தின் மூலம் பறிபோவதாகவும் சுட்டிக்காட்டினார்.

ஏற்கனவே பௌத்த பிக்குகள் நாடாளுமன்றத்திற்கு வருவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் இவ்வாறான சட்டமூலம் தேவையற்றதென்றும் அமைச்சர்கள் சுட்டிக்காட்டியதையடுத்து அமைச்சரவையில் பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது.

எவ்வாறாயினும் பிரதமரின் தலையீட்டையடுத்து இந்தச் சர்ச்சைக்கு சமரசத் தீர்வு காணப்பட்டது.

இதன்படி அடுத்த நாடாளுமன்ற அமர்வின்போது மதமாற்றத் தடைச்சட்டமூலகத்தைச் சமர்ப்பிக்கவும், அப்போது அரசுத்தரப்பு நாடாளு மன்ற உறுப்பினர்கள் மனச்சாட்சியின்படி உரையாற்றவும், வாக்களிக்கவும் அனுமதிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதுதொடர்பில் நேற்று உதயனுக்குக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே, சபையில் இந்த சட்டமூலத்திற்கு எதிராகத் தாம் வாக்களிப்பார் எனக் கூறினார். இச்சட்டமூலத்திற்கு ஆதரவாகச் சபையில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகள் கிடைக்காதென்று அவர் மேலும் குறிப்பிட்டார். (த-க)

## கருணா குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலீஸாரே மதகு ஒன்றின் அருகில் சூட்டுக்காயங்களுடன் கிடந்த இவரது சடலத்தைக் கண்டு மீட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர் பாதுகாப்புப் படையினருக்கு நன்கு அறிமுகமானவர் எனவும் தெரியவருகிறது. குறிப்பிட்ட நபர் தான் தங்கியிருந்த முகாமில் இருந்துவேறொரு இடத்துக்குச் சென்ற சமயத்திலேயே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

வெலிகந்தைப் பொலீஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

இவரது சடலத்தை நேற்று இரவுவரை எவரும் பொறுப்பேற்கவில்லை. (த-க)

## ஜே.வி.பி. தலைவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பான விடயங்களில் வழமைக்கு மாறான அமைதிப்போக்கை - மதிப்பு, மரியாதை கொடுத்தும் பேசும் பாணியை - பின்பற்றியதற்கு இதுவே காரணம் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனான முரண்பாடுகளைக் களைந்து கொள்வதற்கும் மேலும் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளாமல் இருப்பதற்கும் ஜே.வி.பியின் அரசியல்குழு தீர்மானமொன்றை எடுத்திருப்பதாக அந்தக் கட்சியின் உள்ளக வட்டாரங்களிலிருந்து தெரியவந்தது.

அரசின் தலைமையுடன் தொடர்ந்தும் முரண்பட்டுக் கொண்டிருக்கக் கூடாதென்பது அரசியல்குழுவின் அபிப்பிராயமென ஜே.வி.பியின் முக்கியஸ்தர்கள் கூறுகின்ற போதும் உண்மையான காரணம் அதுவல்லவென கட்சியின் மற்றுமொரு சாரார் தெரிவிக்கின்றனர்.

ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க மற்றும் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் தொடர்பிலான பல முக்கியவிடயங்கள் ஜனாதிபதிக்கு தெரியவந்திருப்பதாவும் இதனையடுத்தே இவ்வாறான தீர்மானத்தை ஜே.வி.பி.எடுத்ததாகவும் ஜே.வி.பியின் உறுப்பினரொருவர் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

ஜே.வி.பி. தலைவர்கள் மற்றும் அவர்களின் நெருங்கிய உறவினர்களின் சொத்துகள், முதலீடுகள் தொடர்பாக விசாரணை நடத்தி விவரங்களைத் தருமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு அரசுத் தலைமை பணிப்புரை விடுத்திருந்ததாக அண்மைக்காலத்தில் செய்திகள் வெளிவந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (த-க)


## கீல்வாத மூட்டு வீக்கம்

கீல்வாத மூட்டு வீக்கம் குணப்படுத்த முடியாதது என உலகம் இதுவரை எண்ணியது. கீல்வாத மூட்டு வீக்கம் வைரஸினால் உருவாகிறது. அதனை நாங்கள் வைரஸ் எதிர்ப்பு ஆயுள்வேத மருந்தினால் சந்தேகத்திற்கு இடமின்றிக் குணப்படுத்துவோம்.

மேலதிக விவரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்:

FAIR PHARMA (PVT) LTD
(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES) ABOL APPROVED COMPANY
Level 5/ East Tower/1C, WORLD TRADE CENTER, COLOMBO - 01,
Phone: 5517897, 5551879, Fax: 5517756
E-mail: fppvtl@lankabellnet.com Website:www.fppvtl.org (C/41556)(34-29-16)


## மரண அறிவித்தல்

### சிவப்பிரகாசம் இளையதம்பி (ஆயா மாமா)

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் கிருலப்பனையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் இளையதம்பி அவர்கள் (ஓய்வுபெற்ற விளம்பர முகாமையாளர், லேக் ஹவுஸ் பத்திரிகை நிறுவனம்) நேற்று (17.03.2005) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் (சீனியர்) - எள்ளுப்பிள்ளை தம்பதிகளின் மகனும் கோப்பாய் காலஞ்சென்ற ஆறுமுகம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் பர்வதபத்தினியின் அன்புக் கணவரும் நிர்மலா (நியூசிலாந்து), காலஞ்சென்ற சிவநேசன் மற்றும் சிவபாலன் (உரிமையாளர், சன்பீம் விளம்பர நிறுவனம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற இளமுருகனின் (முன்னாள் விரிவுரையாளர், பொறியியற்பீடம் பேராதனைப் பல்கலைக்கழகம்) மாமனாரும் மீனநயனியின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் 20.03.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைகள் கனத்தை இந்துமயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'மயூரம்'
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தகவல்:
க.ஆ.சிவப்பிரகாசம்
(மைத்துனர்).


## தொழிற்பயிற்சி நெறிகள்

* RADIO, T.V AND VIDEO DECK REPAIRING
சகல இன றேடியோ,ரீ.வீ,டெக் மற்றும் எலெக்ரோனிக் உபகரணங்கள், Computer Monitor, Ups, Printer, Scanner, என்பன திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 10 மாதங்கள்)
* MOTOR REWINDING AND ELECTRICAL WIRING
சகல இன, (f) பான், ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு Single Phase, Three Phase இணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும். (காலம் 07 மாதங்கள்)
* REFRIGERATION AND AIR-CONDITIONING
சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயர் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 07 மாதங்கள்)
* MOTOR CYCLE MECHANISAM
சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 06 மாதங்கள்)
* DC WIRING (காலம் 03 மாதங்கள்)

ஆரம்பம்:-23,27.03.2005

மேலதிக விபரங்களுக்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
இல. 07, பலாலி வீதி யாழ்ப்பாணம்.
T.P:- 021-222 3335, 0773 086716

புதிய இடத்தில் புதிய பெயரில்
ஜய்ராம் JAYRAM PRINTERS பிறின்ரேஸ்
351, மணிக்கூண்டு வீதி,வெலிங்டன்சந்தி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 0712 569898, 0776 072291
எல்லாமே புதுசு
FULL AIR CONDITION

EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...


தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.